

GOKULAM
பிப்ரவரி '99 ரூ.6/-
கோகுலம்
தடகளத்தில் சில தடங்கல்கள்!



விளையாட்டிற்குத் தொடர்பு இல்லாத பொருள் எது?


பறவைக்குப் பசி. இரையை அடைய வழி காட்டுங்கள்!



வண்ணம் தீட்டுங்கள்!



எந்த இரண்டு படங்கள் ஒன்றாக உள்ளன?




பிருந்தாவனம்


"அவர் குலுங்கி, குலுங்கிச் சிரிக்கிற மாதிரி பேசுவார்!"

"அப்படியா! என்ன தொழில் பண்றார்?"

"ஆட்டோ ஓட்டறார்!"

— டி.என். பாலகிருஷ்ணன்





கோகுலம்

பிப்ரவரி '99 மலர் : 17 ♦ இதழ் : 1

அன்புள்ள பெற்றோர்களே!

புதிய ஆண்டு பிறந்த கையோடு கோகுலத்தின் பிறந்த நாளும் வருகிறது. உங்கள் குழந்தைகளுடன் சேர்ந்து நீங்களும் பிறந்த நாள் வாழ்த்துச் சொல்லுங்கள்!


கடந்த பதினாறு ஆண்டுகளாக கோகுலம் சிறுவர் சிறுமியருக்கு லாப நோக்கு சிறிதும் இன்றி பணியாற்றி வந்துள்ளது. உங்கள் குழந்தைகளுக்கு இந்த இதழைத் தொடர்ந்து வாங்கிக் கொடுத்து வருகிறீர்கள் அல்லவா? அதற்காக இந்த சந்தர்ப்பத்தில் நன்றி தெவித்துக் கொள்கிறேன்.

கோகுலம் வாசகர்கள் பலர் இன்று வளர்ந்து பெரிய உத்யோகங்களில் கூட இருப்பார்கள். ஆனாலும் என்ன, கோகுலத்தில் இடம்பெறும் பல அம்சங்கள் பெரியவர்களும் ரசிக்கும்படி தானே உள்ளன!

சிறுவர் சிறுமியரின் சிந்தனா சக்தியை, கற்பனைத் திறனை, எழுத்தாற்றலை, பொது அறிவை, கலை ஆர்வத்தை வளர்ப்பதற்கு கோகுலம் பல வகைகளிலும் முயற்சிகளை மேற்கொள்கிறது. பொது அறிவு க்விஸ் போட்டி, ஓவியப் போட்டி ஆகியன இந்த இதழிலிருந்து ஆரம்பமாகிறது.

கோகுலத்தின் பல பக்கங்கள் சிறுவர் சிறுமியராலேயே நிரப்பப்படுகின்றன. மிக அதிகமான அளவில் பங்கேற்கும் மாணவ மாணவியர் தங்கள் பள்ளியின் சார்பில் ஆண்டுதோறும் கோகுலம் சுழல் கோப்பையைப் பெறுகிறார்கள்.

இப்படி பலவாறாகவும் சிறுவர் சிறுமியருக்கு ஊக்கமளித்து வரும் கோகுலத்துக்கு நீங்களும் பேராதரவு தர வேண்டும். 'இதோ ஒரு நல்ல மாத இதழ்' என்று உங்கள் நண்பர்கள் பலருக்கு எடுத்துச் சொல்லி, அவர்கள் தங்கள் வீட்டுக் குழந்தைகளுக்கு வாங்கித் தருமாறு வற்புறுத்த வேண்டும். உங்கள் குழந்தைகள் படிக்கும் பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் பேசி பள்ளி நூலகத்துக்கு கோகுலம் பிரதிகள் மூன்றோ நான்கோ வாங்கினால் எல்லா மாணவ மாணவியரும் விரும்பிப் படிப்பார்கள் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும்.



நீங்களும் நானும் டீ.வியின் விரோதிகள் அல்ல. ஆனால் நமது வீட்டுக் குழந்தைகள் டீ.விக்கு அடிமையாகி விடக்கூடாது என்பதில் நமக்கு அக்கறை உண்டு. அதனால் ஏற்படக் கூடிய மோசமான பின் விளைவுகளை நாம் அறிவோம். டீ.வி. மோகத்துக்கு சரியான மாற்று, குழந்தைகளைப் பொருத்தமட்டில் கோகுலம் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?

மேலும் பல புதிய இளம் வாசகர்களை கோகுலத்துக்குப் பெற்றுத் தந்து அவர்கள் படித்து மகிழ்வதைக் கண்டு பெருமிதமடையுங்கள். கோகுலத்துக்கு இந்த விதமாகத்தான் நீங்கள் பிறந்த நாள் வாழ்த்துச் சொல்ல வேண்டும். மறவாமல் வாழ்த்துங்கள்!

அனைவருக்கும் ரம்ஜான் வாழ்த்துகள்!

அன்புடன்

கி. ராஜேந்திரன்
ஆசிரியர்


உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.

கோகுலம்

பிப்ரவரி 1999

இந்த இதழில்...







தடகளத்தில் சில தங்க மங்கைகள்!



• ஜூகப்



• மஹூபா, மன்ஜனா

சமீபத்தில் பாங்காக்கில் நடந்து முடிந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் முதல் எட்டு நாட்கள், இந்தியா எந்த ஒரு விளையாட்டிலும் தங்கப்பதக்கம் பெறவில்லை. ஆனால் நம்மை விடச் சிறிய நாடுகள் தங்கம், வெள்ளி, வெண்கலம் என்று ஏராளமாக குவித்து சக்கை போடு போட்டுக் கொண்டிருந்தன. 'ஏதாவது ஒரு விளையாட்டிலாவது தங்கப்பதக்கம் பெற்று நாட்டின் மானத்தைக் காப்பாற்றுவார்களா நமது வீரர்கள்?' என்ற ஆதங்கம் நம் ஒவ்வொருவர் நெஞ்சிலும் முட்டி மோதியது. அந்த ஆதங்கத்திற்கு விடை காணும் விதமாக ஒன்பதாவது நாளில் 1500 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் முதலாவதாக வந்து தங்கப் பதக்கம் பெற்றார் மேற்கு வங்க தடகள வீராங்கனையான ஜோதிர்மயி சிக்தர். தொடர்ந்து 800 மீட்டர் ஓட்டப் பந்தயத்திலும் தங்கப் பதக்கம் பெற்று இந்தியாவின் புதிய தங்க மங்கையாய் உருவானார் அவர். விளையாட்டுப் போட்டிகள் முடிந்து நமது நாட்டுக்குத் திரும்பிய சிக்தருக்கு மாபெரும் வரவேற்பு கொடுக்கப்பட்டது. "சில குறிப்பிட்ட விளையாட்டுகளுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் தடகள விளையாட்டுகளுக்குக் கொடுக்கப்படுவதில்லை. நான் பெற்றுள்ள இந்தத் தங்கப் பதக்கங்கள், இந்திய நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு ஒரு ஊக்கமாக அமைந்து அவர்களையும் தடகள விளையாட்டுகளில் ஆர்வத்



• சாரதா

துடன் ஈடுபட வைக்க உதவும் என்று நம்புகிறேன்" என்று பேசும்போது குறிப்பிட்டார் சிக்தர்.

கிரிக்கெட், அடுத்து டென்னிஸ் என்று ஆர்வத்துடன் ஈடுபடும் நமது சிறுவர், சிறுமியர் தடகள விளையாட்டுகளில் பயிற்சி பெற தயக்கம் காட்டுகிறார்களா? இந்த விளையாட்டுகளில் அவர்களின் ஆர்வத்தைத் தூண்ட அரசு ஏதேனும் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறதா?

சென்னை ஸ்பர்டாங்க் சாலையிலுள்ள பல்கலைக்கழக விளையாட்டு மைதானம். பனி விலகாத மார்கழி மாத காலைப் பொழுது. ஆங்காங்கே வண்ண, வண்ண டிராக் ஸூட்டில் சிறுவர், சிறுமியர் இளைஞர்கள், இளைஞிகள்... புல்வெளியில் சிலர் தங்களை 'warm up' செய்து கொண்டிருக்கிறார்கள். மைதானத்தில் ஒரு மூலையில் நீளம் தாண்டுதலில் பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார் பயிற்சியாளர் ஜேம்ஸ். வட்ட வடிவமாக தடகள ஓட்டப் பாதையில் ஆங்காங்கு பயிற்சி நடக்கிறது. சர்ச்பார்க்கில் ஆறாம் வகுப்பு படிக்கும் சிந்தூராவுக்கு தடகள விளையாட்டுகளில் ஆர்வம் அதிகம். கடந்த மூன்று ஆண்டுகளாக பயிற்சியாளர் ராஜசேகரிடம் ஓட்டம் மற்றும் நீளம் தாண்டுதலில் பயிற்சி பெற்று வருகிறாள்.

"கொரியா, சீனா போன்ற நாடுகளில் நான்கைந்து வயதாகும் போது அரசு அந்தக் குழந்தைகளை தத்தெடுத்துக் கொண்டு தீவிரப் பயிற்சி கொடுக்கிறது. தடகள விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிகரமாக வர வேண்டுமென்றால் தொடர்ந்து பல ஆண்டுகள் கடுமையான பயிற்சி பெற வேண்டும். அதன் பின் வெற்றியின் உச்சியில் சில ஆண்டுகள்தான் இருக்க முடியும். இந்த நிலைகளுக்குப் பிறகும் வாழ்க்கை என்று ஒன்று இருக்கிறதே! அதை நடத்திச் செல்வதற்குப் பொருளாதார வசதி வேண்டாமா? எனவே தடகள விளையாட்டுகளில் இன்னமும் ஆர்வமாய் நமது சிறார்கள் ஈடுபட வேண்டுமென்றால், இந்த விளையாட்டுகள் தொழில்ரீதியாக மாற வேண்டும். இப்போது கிரிக்கெட் அப்படி இருக்கிறது. வாழ்க்கைக்குத் தேவையான பொருளாதார வசதி தடகள விளையாட்டுகளின் மூலம் கிடைக்கும் என்றால் இன்னும் ஏராளமானோர் இதில் ஆர்வத்துடன் இறங்குவார்கள்" என்று சொல்கிறார் பயிற்சியாளர் ராஜசேகர்.

தினசரி மாலை இரண்டு மணி நேரம் கடுமையான பயிற்சி பெறுகிறாள் சிந்தூரா. அப்பா டாக்டர் ஜெயபால் தனக்கு எந்த வேலை என்றாலும் அதை ஒதுக்கி வைத்து விட்டு மகளோடு மைதானத்துக்கு வந்து விடுகிறார். அதேபோல் சின்மயா வித்யாலயாவில் ஏழாம் வகுப்பு படிக்கும் சாரதா. இவளும் ஓட்டம் மற்றும் நீளம் தாண்டுதலில் பயிற்சி எடுத்து வருகிறாள். சாரதாவின் அம்மா ஜெயந்தி "அத்லெடிக் விளையாட்டுகளில் மட்டும்தான் நமது தனித் திறமையை நிரூபிக்க முடியும். மற்ற பல விளையாட்டுகளில் டீம் ஒர்க்தானே... அதனால்தான் என் மகளை அத்லெடிக்கில் பயிற்சி பெற வைக்கிறேன்" என்கிறார். இந்த இரு சிறுமிகளும் பள்ளிகள் அளவிலான பல



• பயிற்சியாளர் ஜேம்ஸ்

போட்டிகளில் கலந்து கொண்டு பிரகாசித்திருக்கிறார்கள். "உங்களுக்குப் பிடித்த வீராங்கனை யார்?" என்றவுடன் கண்களில் ஆர்வம் மின்ன "ஜோதிர்மயி சிக்தர்" என்கிறார்கள்.

வில்லிவாக்கம் சிங்காரம் பிள்ளை மெட்ரிகுலேஷன் பள்ளியில் ப்ளஸ் ஒன் படிக்கும் மஞ்ஜனா பதினோறு வயதி

விருந்தே தடகள விளையாட்டுகளில் பயிற்சி பெற்று வருகிறாள். பள்ளியின் சார்பாக மாநில அளவிலான ஓட்டப் பந்தயங்களில் கலந்து கொண்டு பரிசு பெற்று இருக்கிறாள். "தடகளப் போட்டிகளில் இந்தியாவுக்குப் பெருமை தேடித் தந்து பதினெட்டு தங்கப் பதக்கங்களைப் பெற்ற பி.டி. உஷாவைப் போன்று புகழ் பெற வேண்டும் என்பதே என் ஆசை" என்கிறார் மன்ஜனா.





மன்ஜனாவின் மூத்த சகோதரி மனூபாவும் விளையாட்டு வீராங்கனைதான்.

எத்திராஜில் படிக்கும் மனூபா நூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் அகில இந்திய பல்கலைக் கழக அளவில், கடந்த இருபது ஆண்டுகளாக முறியடிக்க முடியாத சாதனையைக் கடந்த ஆண்டு முறியடித்துக் காட்டியவர். இருவரும் தங்கள் வீட்டிற்கு அருகிலேயே இருக்கும் ஐ.சி.எப் மைதானத்தில் தினசரி பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். சில சமயம் பல்கலைக் கழக மைதானத்துக்கும் வருகிறார்கள். இந்தச் சகோதரிகளின் அப்பா, அம்மா இருவருமே விளையாட்டு வீரர்கள். அப்பா மாதவன் கால்பந்து வீரர். அம்மா லீலா வாலிபால் வீராங்கனை. எனவே மன்ஜனாவுக்கும் மனூபாவுக்கும் ஊக்கத்திற்கும் உற்சாகத்திற்கும் குறைவே இல்லை. "நாங்க என்னதான் கஷ்டப்பட்டு, முன்னேறினாலும் சில சமயங்களில் ஓரங் கட்டப்பட்டு விடுகிறோம். பணம், செல்வாக்கு ஆகியவைகளின் காரணமாக தகுதியில்லாதவர்களை முன்னுக்குக் கொண்டு வர முயற்சிக்கிறார்கள். இதுதான் மனதுக்கு வருத்தமாக இருக்கிறது. ஆனால் தனி மனிதத் திறமை பளிச்சிடும் தடகளத்தில் சரக்கு இல்லாதவர்கள் நிற்க முடியாது" என்கிறார் மனூபா.

சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் பயிற்சி பெறுகிறார்கள், ஐந்தாவது படிக்கும் யூசுப்பும் ஆறாவது படிக்கும் அலி அஸ்கரும். தண்டையார்பேட்டையில் உள்ள அல் மதரஸா மாணவர்களான இவர்களுக்கும் ஆர்வமுள்ள பல சிறுவர் சிறுமிகளுக்கும் பயிற்சி கொடுக்கிறார் ஜேம்ஸ்.

இந்தியாவில் உள்ள அனைத்து இஸ்லாமியப் பள்ளிகள் பங்கு பெறும் தடகளப் போட்டி நாக்பூரில் நடக்க இருக்கிறது. அதில் பங்கு பெற்று வெற்றி வாகை சூட கடுமையாக உழைக்கிறார்கள் யூசுப்பும், அலி அஸ்கரும். "பத்துப் பன்னிரண்டு ஆண்டுகள் உழைப்புக்குப் பின்தான் தேசிய அளவில் தடகளப் போட்டிகளில் பளிச்சிட முடியும். குடும்பச் சூழ்நிலை மற்றும் வேறு பல காரணங்களினால் அந்த அளவு நீண்ட கால பயிற்சிகளில் இறங்க முடியாமல் இடையிலேயே சிலர் நிறுத்தி விடுகிறார்கள்" என்கிறார் ஜேம்ஸ்.

"இப்போது அத்லெடிக் விளையாட்டுகளில் மக்களுக்கு பரவலான ஆர்வம் வந்திருக்கிறது. பயிற்சி பெற நல்ல தடங்கள் (Track) உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆசிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அரசு முதல்முறையாக லட்சக்கணக்கில் ஊக்கத் தொகை கொடுத்திருக்கிறது. இந்த நல்ல சூழல் தொடருமானால் அடுத்த நூற்றாண்டில் நடக்க இருக்கும் ஆசியப் போட்டிகளிலும், ஒலிம்பிக் போட்டிகளிலும் நாம் வெற்றி வாகை சூடும் வாய்ப்பு இருக்கிறது" என்று நம்பிக்கை தெரிவிக்கிறார் பயிற்சியாளர் ஜேம்ஸ்.

மைதானத்தில் ஆங்காங்கு பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் சிறுவர், சிறுமியரைப் பார்க்கும்போது அவரது நம்பிக்கை நமக்கும் தொற்றிக் கொள்கிறது.

— ப்ரியன்

அட்டையில்: மனூபா

வண்ணப்படம்: ஸ்ரீஹரி

குட்டி விஞ்ஞானிகள் கூடிய மாநாடு!

அறிவியல் என்றாலே பரிசோதனைக் கூடத்தில் வேதியியல் மாற்றங்களால் ஏற்படும் ஒரு நிகழ்வு என்றே நம்மில் பலர் கருதுகின்றனர். நம் வீட்டில், வெளியில், சமூகத்தில் என எங்கும் நடக்கும் நிகழ்ச்சிகள் யாவற்றிலும் அறிவியல் பொதிந்துள்ளது.

பள்ளிகளில் மனப்பாடம் செய்து தேர்வு எழுதும் முறை கையாளப்படுவதால் எதையும் புரிந்து, ஆழமாக உணர்ந்து கொள்ள முடியாத சூழ்நிலை மாணவர்களுக்கு ஏற்படுகிறது.

இந்த நிலையை மாற்றி அறிவியலின் மீது நாட்டம் கொள்ளச் செய்யவும் எதையும் ஆழமாகப் பார்க்கும் திறனை உருவாக்கவும் ஒரு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது என்.எஸ்.டி.சி. (National Science and Technology Communication Network) ஆய்வு மனப்பான்மையை ஏற்படுத்தி, பிரச்னைகளுக்கு மாணவர்களே தீர்வு காணும் வகையில் ஊக்கமளிக்கிறது.

இந்த அமைப்பு 1993 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்டத் தலைப்பில் ஆய்வுகளைச் செய்ய மாணவர்களைத் தூண்டியிருக்கிறது.

பத்து வயது முதல் பதினேழு வயது மாணவர்கள் வரை ஆய்வில் பங்கேற்கலாம். பள்ளியில் படிக்கும் மாணவர்கள் மட்டுமின்றி படிப்பைப் பாதியிலேயே நிறுத்திய மாணவர்களும் கூட பங்கேற்கலாம்.

ஆய்வுகளை எந்த மொழியில் வேண்டுமென்றாலும் செய்யலாம்.

குழந்தைகள் அறிவியல் மாநாட்டை தமிழ்நாட்டில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் நடத்தி வருகிறது. இந்த ஆண்டு 'இயற்கையை நேசிப்போம் - மனிதகுலத்தைக் காப்போம்' என்ற தலைப்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்ட, மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட ஆய்வுகள் தேசிய மாநாட்டில் பங்கு கொள்கின்றன.

ஆறாவது குழந்தைகள் தேசிய அறிவியல் மாநாடு சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்தில் டிசம்பர் 27 முதல் 31 வரை நடைபெற்றது.

இந்தியாவின் 20 மாநிலங்களிலிருந்து 600 மாணவர்கள் இம்மாநாட்டில் பங்கேற்றனர். இவர்களுக்கு உறுதுணையாக ஆசிரியர்களும் வந்திருந்தனர்.



ஆய்வை விளக்கும் மணிப்பூர் மாணவர்

விழாவின் துவக்க நாளன்று குட்டி விஞ்ஞானிகளின் பேரணி நடைபெற்றது. ஒவ்வொரு மாநிலத்தவரும் தத்தமது பாரம்பரிய உடைகளை அணிந்து நடனம் ஆடிச் சென்றது காண்போரைக் கவர்ந்தது.

மாநாட்டின் முதல் இரண்டு நாட்கள்

ஆய்வறிக்கைகளை விஞ்ஞானிகளிடம் மாணவர்கள் சமர்பித்தார்கள்.

மணிப்பூரில் உள்ள சைகல் என்ற கிராமத்திலிருந்து வந்த மாணவி 'காடுகளைப் பாதுகாப்போம்' என்ற தலைப்பில் அருமையாக ஆய்வு செய்திருந்தார். ஆய்விற்கு உதவும் வகையில் வரைபடங்களையும் தந்திருந்தார்.

காஷ்மீரிலிருந்து வந்த மாணவி 'சுற்றுச் சூழல் பாதுகாப்பு-பிளாஸ்டிக்கால் ஏற்படும்

• ஆய்வைக் கவனிக்கும் மாணவ மாணவியர்



தீமைகள்', அதற்கு மாற்றாக என்ன செய்யலாம் என்பதையும் விளக்கினார்.

தமிழ்நாட்டிலுள்ள இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவன் குளிர்சாதனப் பெட்டியால் ஏற்படும் பாதிப்புகளை விளக்கினார். மாற்றாக மண் பானைகளை குளிர்சாதனப் பெட்டி போன்று பயன்படுத்தலாம் என்பதே இவரின் ஆய்வு. மண் பாத்திரங்களை சென்னை வரை பத்திரமாகக் கொண்டு வந்தது பெரிய விஷயம்!

உத்திரமேரூரிலிருந்து 'மாடு வளர்ப்பு' பற்றி ஒரு மாணவி பல தகவல்களை அருமையாக ஆய்வில் தந்திருந்தார்.

இன்னும் குடிநீர் மாசுபாடு, இயற்கை உரங்கள், நிலத்தடி நீர், மூலிகை மரங்கள், பெட்ரோலியம் சேமிப்பு... என்று பல தலைப்புகளில் ஆய்வுகள் செய்யப்பட்டிருந்தன.

தமிழ்நாட்டிலிருந்து 24 ஆய்வுகள் தேசிய மாநாட்டில் பங்குபெற்றன.

ஒவ்வொரு மாணவரும் பயப்படாமல், பதட்டப்படாமல், கணீர் என்று ஆய்வைச் சமர்பித்த விதமும் விஞ்ஞானிகள் மற்றும் பார்வையாளர்களின் கேள்விகளை எதிர் கொண்ட விதமும் மிகவும் வியப்பில் ஆழ்த்திய விஷயங்கள்.

இது தவிர அறிவியல் பரிசோதனைகள், மந்திரமா? தந்திரமா? கணிதம், ஓரிகாமி (காகிதம் மடிக்கும் கலை), அறிவியல் பொம்மைகள் என பல்வேறு செயல்பாடுகள். மாணவர்களும்





• ஊர்வலத்தில் தமிழ்நாட்டு மாணவர்கள்

ஆசிரியர்களும் ஆர்வத்துடன் இவற்றில் பங்கேற்றனர்.

ஒவ்வொரு நாள் மாலையும் விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடும் நிகழ்ச்சியும் நடந்தது.

கணிதமேதை ராமானுஜத்தின் தத்துவம், பரிணாம வளர்ச்சியில் மனிதன், ஹிரோஷிமா - நாகசாகி ஆகியவை கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

மாணவர்களின் வரைபடங்களும் கண்காட்சியில் வைக்கப்பட்டு மாணவர்களே விளக்கமும் அளித்தனர்.

ஆடல், பாடல், நாடகம், இசை என மாணவர்கள் தங்களின் திறமைகளை இரவில் நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளில் வெளிப்படுத்தினர்.

பங்கேற்ற இளம் விஞ்ஞானிகளின் ஆய்வுகளுக்கேற்ப அபாரம், நன்று என்று சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நம் நாட்டின் பல்வேறு மூலை முடுக்குகளிலிருந்தும் வந்திருந்த மாணவர்கள் ஒருவருக்கொருவர் அன்பாகப் பழகிய விதமும் அவர்களின் குதூகலமும் மகிழ்ச்சியளித்தது.

'வேறு வேறு வண்ணப் பூக்கள்
சேர்ந்த வாச மாலை நாங்கள்!
வண்ணம் வேறு வேறென்றாலும்
வாசம் எங்கும் ஒன்றுதான்!'


என அவர்கள் பாடிய பாடலைக் கேட்கும் போதும் அவர்களின் ஆய்வைப் பார்க்கும்போதும் புதிய நம்பிக்கை பிறக்கிறது.

படங்கள்: **அமலராஜன்**

மகிழ்ச்சியான பூ எது?''

''மகிழம் பூதான்!''

– ஜே. பலராமன்.





''பாம்புப் புற்றில் இல்லாத நாகம் எது?''

''துத்தநாகம்தான்!''

– ஜி. குமரேசன்.

அழகனும் இரைப்பையும்!

முகம்மது ஹில்மி



அழகன் திடுக்கிட்டான்.

'என்ன இதெல்லாம்?' நீதிமன்றம் போல் தெரிகிறதே. அவர் யார்? இவர் யார்?

கறுப்பு அங்கி அணிந்திருக்கிறார். அவர் வழக்கறிஞராக இருக்க வேண்டும். அவர் ஏன் என்னை அப்படி முறைத்துப் பார்க்கிறார். அழகனுக்குப் புரியவில்லை.

ஆனால்... ஆனால்... நான் ஏன் இங்கு படுத்த நிலையில் உள்ளேன்? அவனுக்கு வியப்பு மேலும் பெருகியது.

எதிரே குற்றவாளிக் கூண்டு. அதில் இருந்த வினோதமான பொருள் ஒன்று அவனது கவனத்தைக் கவர்ந்தது.

அவன் இதுவரைக்கும் அதைப் பார்த்ததேயில்லை!

மேல் பகுதி பெரியதாகவும் அடிப்பகுதி சிறியதாகவும் இருந்தது. ஒரு பலூனின் தோற்றத்தில், ஆனால் காற்றுப் போன பலூனைப் போல...

நிறமிழந்து வெளுத்துப் போய் இருந்தது. அது ஏன் இப்படி பெருத்த இரைச்சலிட்டு ஓலமிடுகிறது?

அவனுக்கு குழப்பம் மேலும் அதிகமானது.

கூண்டில் நிற்கும் அப்பொருளை நோக்கி இன்னொரு வழக்கறிஞர் செல்கிறாரே. ஆனால் என்னைப் பார்க்கும் போது அவர் கண்களில் ஏன் அந்தக் கனிவு? அந்தப் பொருளைப் பார்க்கும் போது அவர் முகத்தில் கடுகடுப்பு.

கனிவான வழக்கறிஞர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

"கனம் நீதிபதி அவர்களே! அதோ படுத்த நிலையில் உள்ள அழகன் எனது கட்சிக்காரர். வளர்ந்து வரும் ஒரு மாணவன். எதிர்காலத்தில் ஒரு பொறியியல் வல்லுநராகவோ அல்லது டாக்டராகவோ வரும் வாய்ப்பு உள்ளவன்.

"ஆனால், என்ன பரிதாபம். இதோ குற்றவாளிக் கூண்டில் நிற்கிறதே இது அழகனின் இரைப்பை. அழகனின் வயிற்றில் உள்ள ஓர் அங்கம். அவனது உடலில் ஓர் உறுப்பாக இருந்து கொண்டே அவனுக்குப் பெரும் அநீதி இழைத்துக் கொண்டிருக்கிறது. அடிக்கடி என் கட்சிக்காரருக்குப் பொறுக்க முடியாத வலியினை ஏற்படுத்துகிறது. உடம்புக்குத் தேவையான உணவைத் தின்ன முயலும் போதெல்லாம் தகராறு செய்கிறது. எனவே, அழகன் பள்ளிக்கு ஒழுங்

காகச் செல்ல முடியவில்லை. அதன் விளைவு? தேர்வில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளான்.

"அவற்றையெல்லாம் விட அவனது தங்கை நிஷா நல்ல உணவு வகைகளைத் தின்னும் போது அவனால் அதைச் சாப்பிட முடிவதில்லை. அவள் அவனைக் கிண்டல் செய்தவாறு சாப்பிடுவது அவனுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது.'' வழக்கறிஞர் பேச்சை நிறுத்தி சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டார்.

மீண்டும் அவர் பேச ஆரம்பித்தார்.

"இனிமேல் இந்த இரைப்பை மனம் திருந்தி எனது கட்சிக்காரருக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று கண்டிப்பாக உத்தரவிடக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று சொல்லி முடித்தார்.

அழகன் அவரை நன்றியோடு பார்த்தான். எனக்காக வாதிட இவரை யார் நியமித்திருப்பார்கள்? அம்மாவாகத்தான் இருக்கும். அம்மா! நல்ல அம்மா! நான் நன்றாகச் சாப்பிட வேண்டும்; குண்டுப் பையனாக இருக்க வேண்டும் என்பதில் அவருக்குத்தான் எவ்வளவு ஆசை? அழகன் நினைத்துப் பார்த்தான்.

அடுத்து எதிர்த்தரப்பு வழக்கறிஞர் எழுந்தார்.

"கனம் நீதிபதி அவர்களே! எனது கட்சிக்காரர் இரைப்பை ஒரு அப்பாவி. குற்றம் எதுவும் செய்யாத நிரபராதி. அதோ படுத்திருக்கிறானே அழகன்– அவனுக்காக உண்மையாக உழைத்து, உழைத்து இந்த நிலையில் உள்ளது. அதைச் சற்றுப் பாருங்கள். உருக்குலைந்து, நிறம் மாறி இரைச்சலிட்டு ஓலமிட்டவாறு பரிதாபமான நிலையில்... இதற்கெல்லாம் காரணம் யார்? இந்த அழகன்தான். சின்னஞ்சிறுவனாக அவன் இருந்தபோது ஓய்வு ஒழிச்சல் இன்றி என் கட்சிக்காரரை வேலை வாங்குவான். எதையாவது அரைப்பதற்கு அனுப்பிக் கொண்டேயிருப்பான். ஆனால் இப்பொழுதெல்லாம் எனது கட்சிக்காரரை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. அலட்சியப்படுத்துகிறான்."

நீதிபதி குறுக்கிட்டார்.

"அழகன் உமது கட்சிக்காரரை புறக்கணிக்கிறான் என்று சொல்கிறீர்களே அதற்கு சாட்சிகள் உள்ளனவா?"

எதிர்க்கட்சி வழக்கறிஞர் துள்ளிக் குதித்தார்.

சாட்சிகள் நிறையவே உள்ளன. முதலாவதாக,

"காதிர்... காதிர்... காதிர்."

காதிர் வந்தான்.

"அடேய் நண்பா! நீயுமா எனக்கு எதிரான அணியில்?'' அழகனின் தொண்டை கம்மியது.

வழக்கறிஞர் கேட்டார்.

"அவனைத் தெரியுமா?"


"ஆம். அவன் என் தோழன். சேர்ந்து விளையாடுவோம்."

"உணவு நேரம் வரும்போது அவன் சாப்பிடச் செல்வானா?"

"போகவே மாட்டான். அம்மா வந்து கூப்பிடுவார். அவன் அதைச் சட்டை செய்ய மாட்டான். பலமுறை கூப்பிடுவார். போக மாட்டான். இப்படிக் கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பொறுமை இழந்துவிடும் அவர் இறுதியாக அவனது காதைப் பிடித்து உள்ளே இழுத்துச் செல்வார்'' என்றான் காதிர்.

பின்னர் தொடர்ந்து பேசினார் வழக்கறிஞர்.

"அழகன் சாப்பிடும் விஷயத்தில் மிகவும் காலம் தாழ்த்தினான். விளையாட்டில் ஈடுபடும் போது உணவைப்




"எங்க வீட்டுக்கு வரும் போது நாய் கடிக்குமேன்னு பயப்பட வேண்டாம்!"

"ஏன், உங்க வீட்டு நாய் கடிக்காதா?"

"எங்க வீட்ல நாயே கிடையாதே!"

– சக்தி. சரவணன்



புறக்கணித்தான்.

எனது கட்சிக்கார இரைப்பை அவன் தன்பால் உணவை அனுப்பி வைப்பான் என்று காத்திருக்கும். செரிமாணப் பணியில் ஈடுபட துடித்துக் கொண்டிருக்கும். ஆனால் உரிய நேரத்தில் உணவு வந்து சேராது. விளைவு? இரைப்பை சோகத்தால் வாடி விடும். செரிமானத் திரவங்கள் வீணாகி விடும். எவ்வளவு கொடுமை?''

''இதோ இன்னொரு சாட்சியினை உங்கள் முன் கொண்டு வந்து விசாரிக்க விரும்புகிறேன்.''

'யார் அந்த சாட்சி?' அழகன் ஆவலோடு பார்த்தான். தொலைக் காட்சிப் பெட்டி!

ஒரு தொலைக்காட்சிப் பெட்டியால் எனக்கு எதிராக என்ன சாட்சியம் சொல்லி விட முடியும்? அழகனின் உள்ளத்தில் கேள்விக்குறி.

அது கூண்டில் ஏறிப் பேசத் துவங்கியது.

''நீதிபதி அவர்களே! அழகனின் அம்மா அவனுக்கு உணவு பரிமாறுவார். உணவுத் தட்டை எடுத்துக் கொண்டு என் முன்பாக வந்து அமர்வான். அவனது கண்களும் கவனமும் என் பக்கம் இருக்கும். அவனது கைகள் ஒரு இயந்திரத்தைப் போல உணவை எடுத்து வாயில் போடும். அதில் ஒரு ஈடுபாடு இருக்காது. மனம் எப்படியோ இரைப்பையும் அப்படியே. எனவே அது வேண்டாவெறுப்பாக இயங்கியது'' என்று ஒரே மூச்சில் சொல்லி விட்டு கூண்டை விட்டுக் கீழே இறங்கியது.

''இறுதியாக ஒரு சாட்சியை விசாரிக்க விரும்புகிறேன். நீதிபதி அனுமதிக்க வேண்டும்'' என்று சொல்லிவிட்டு அம்மாவின் பக்கம் பார்வையைச் செலுத்தினார் வழக்கறிஞர்.

அம்மாவோ முகத்தைத் திருப்பிக் கொண்டார். தன் பிள்ளைக்கு எதிராக எந்தத் தாய்தான் சாட்சி சொல்ல வருவார்.

அம்மா எவ்வளவு நல்லவர்! அழகன் நன்றியோடு அவரைப் பார்த்தான்.

நான் சாட்சி சொல்கிறேன் என்று ஒரு சின்னக் குரல் கேட்டது.

'யார் அந்த முந்திரிக் கொட்டை?' குரல் வந்த திசையில் திரும்பினான் அழகன்.

நிஷா! தங்கை நிஷா!

'அடிப்பாவி!' அழகன் பொருமினான்.

அவன் அதைக் கண்டுகொள்ள வில்லை.

"இவன் மகா துஷ்டன். அம்மா இவனுக்கு ருசியாகச் சமைத்து வைப்பார். ஆனால் சாப்பிடும்போதெல்லாம் ஏதாவது குறைசொல்லிக் கொண்டே சாப்பிடுவான். அது மட்டுமல்ல. என்னுடன் சண்டையும் போடுவான். பொரியல் செய்து வைத்தால் ஏன் அவியல் செய்யவில்லை என்பான். முரண்டு செய்து சாப்பிடாமல் எழுந்து விடுவான். அப்பப்பா! இவனால் அம்மா படும் துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல."

நிஷா பேச்சை நிறுத்தினாள்.

அம்மா அவளைக் கோபமாகப் பார்த்தார்.

எதிர்த்தரப்பு வழக்கறிஞர் பேசத் துவங்கினார்.

"கனம் நீதிபதி அவர்களே, இவன் தனது வயிற்றுக்குச் செய்த வஞ்சனைகள் கொஞ்சமா? எண்ணிக்கையில் அடங்காது. உரிய நேரத்தில் சாப்பிடுவதில்லை. ஆனால் இரைப்பை உணவுக்காகக் காத்துக் கொண்டிருக்கும். உணவு வந்து சேராது. ஏமாற்றம்! சரி, தாமதமாகத்தான் சாப்பிடுகிறான். அதில் அவனுக்குக் கவனம் இருக்காது. இன்னும் ஏமாற்றம். அது மட்டுமா? அவனுக்குப் பிடிக்காத உணவு வகைகளின் பட்டியல் நீளமானது. பிடித்த உணவிலும் பிடிக்காத முறையில் சமைக்கப்பட்ட உணவின் பட்டியல் அதை விட நீளமானது. உருளைக் கிழங்கு பிடிக்கும். ஆனால் அதில் சிப்ஸ் செய்து கொடுத்தால் சாப்பிடுவான். இல்லையென்றால் போராட்டம்தான். மேலும் சொல்கிறேன். சாப்பிடும் போது தங்கையுடன் சண்டை. ரசித்து உண்ண மாட்டான். மகிழ்ச்சி இருக்காது- ஏமாற்றம்! இரைப்பை இவனுக்கே தன்னை முழுமையாக அர்ப்பணம் செய்து கொண்டது. அவன் மகிழ்ந்தால் அது மகிழும். அவன் அழுதால் அதுவும் சோகமாக அழும். எனவே இரைப்பை முற்றிலும் ஒத்துழைக்கத் தயாராக இருந்தது. ஆனால் அதற்குத் தடங்கலாக இருந்தது இந்த அழகன்தான். இரைப்பை புண்ணாகியது. இறுதியாய் இப்பொழுது நீங்கள் பார்க்கும் இந்தப் பரிதாப நிலையில் எனது கட்சிக்காரர்..."

"இனியும் அழகன் திருந்தவில்லையென்றால் எனது கட்சிக்காரர் அவன் உடம்பில் குடியிருக்க முடியாது" என்றார்.

இரைப்பையின் இரைச்சல் அதிகமானது.

'ஆபரேசன் பண்ண வேண்டியிருக்கும்' என்ற குரல் அவன் காதருகே கேட்டது. யார் அது?

'ஐயோ! வேண்டாம்! வேண்டாம்!' அழகன் அலறினான்.

"ஏய் அழகா கனவு கண்டாயா?" அப்பா அவனைத் தட்டி எழுப்பினார்.

அட நாம இவ்வளவு நேரமும் கண்டது கனவா? சுற்றுமுற்றும் பார்த்தான். இப்பொழுதுதான் அவனுக்குப் புரிந்தது. அல்சர் நோய்க்காகத் தான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளோம் என்று.

அவனைச் சுற்றிலும் அப்பா, அம்மா, வெள்ளைக் கோட்டு அணிந்த டாக்டர்.

"பையனின் அல்சர் முற்றுவதற்கு முன்பே மருத்துவமனையில் சேர்த்தது நல்லதாகப் போய் விட்டது. இல்லையென்றால் அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும்" என்று டாக்டர் அப்பாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.


இனி வயிற்றை மதிப்பேன். வேளாவேளைக்குச் சாப்பிடுவேன். சாப்பிடும் போது கோபம்- கவலை கொள்ள மாட்டேன். மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பேன் என்று மனதில் உறுதிசெய்து கொண்டான் அழகன்.

"எங்க வீட்டில் ரெண்டு நேரம்தான் சாப்பாடு."


"ஏன்?"

"ஒரு நேரம் டிபன்."

– இரா. கமலக்கண்ணன்



குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்

1. ஆக்ராவில் உள்ள உலகப் புகழ் பெற்ற கட்டடம் (5)

4. பருத்த அடிப்பாகத்தையும் கிளைகளையும் உடைய தாவரம் (3)

6. மெல்லிய சிறுகுச்சி. சிறு -----ம் பல் குத்த உதவும் என்ற பழமொழி உண்டு (4)

7. கிழமைகளில் ஒன்று. இந்தப் பெரிய கோளிற்கு 14 சந்திரன்கள் உண்டு (4)

11. கணுக்காலி வகையைச் சேர்ந்த உயிரினம். கடல், ஆறு, குளம் போன்றவற்றில் காணப்படும் (3)

வலமிருந்து இடம்

3. நம் நாட்டின் புனித நதிகளுள் ஒன்று (3)

9. குப்பைமேடு, சகதி போன்ற இடங்களில் குட்டிகளுடன் அலையும் பிராணி (3)

12. பொய் இல்லாதது (5)

மேலிருந்து கீழ்

1. ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடந்த பாங்காக் இந்த நாட்டில் உள்ளது (5)

2. நினைவில் வைத்துக் கொள்ள முடியாத தன்மை (3)

3. வாத்தியங்களில் ஒன்று. பானை போல் இருக்கும் (3)

8. கல்கத்தாவிலுள்ள விமான நிலையம் (4)

9. இதைக் கண்டுபிடித்தவர்கள் சீனர்கள். காஞ்சிபுரம் இதற்கு பெயர் பெற்றது (3)

10. குரங்கை இப்படியும் அழைக்கலாம் (3)

கீழிருந்து மேல்

4. ----- யராகப் பிறக்க மாதவம் செய்திட வேண்டும் என்றார் பாரதியார் (3)

5. பருத்தி இந்த மண்ணில் நன்கு விளையும் (4)

11. எதை மறந்தாலும் இதை மறக்கக் கூடாது (3)


12. பூமியின் துணைக்கோள் (5)

— எம். நாகலட்சுமி,
எட்டாம் வகுப்பு, விக்கிரமசிங்கபுரம்,
திருநெல்வேலி மாவட்டம்

விடை 72 ஆம் பக்கம்

உப்பு விலை ஏற என்ன காரணம்?

கால் வலி!




பள்ளி விட்டு வந்த தம்பி, "அம்மா! கால் ரொம்ப வலிக்குதே" என்று புலம்பினான். இதைக் கேட்ட பாட்டி வேகமாக வந்து, "ஏண்டா கால் வலிக்குது? எங்கேயாவது விழுந்துட்டியா?" என்று பதறியபடி விசாரித்தார். 'எல்லாம் உங்களால்தான்" என்றான் தம்பி. "நான் என்னடா செஞ்சேன்?" என்றார் பாட்டி. "நீங்க சொல்றபடியெல்லாம் 'நடக்கிறேனே', அதனால்தான் வலிக்குது" என்றானே பார்க்கலாம்!

– வி. உமா மகேஸ்வரி, சென்னை.

வழுக்கை!

நானும் நண்பர்களும் விளையாடிக்




கொண்டிருந்தோம். பக்கத்து வீட்டு மாமா எங்களை அழைத்தார். "ஏண்டா எண்ணெய் தடவாமல் முடியை வச்சிருக்கீங்க? ஸ்டைலா! பிற்காலத்தில் வழுக்கை விழப் போகுது. நான் சின்ன வயதில் நல்லா எண்ணெய் தடவி படிய வாரியிருப்பேன்" என்றார் மாமா. என் குறும்புக்கார நண்பன், "அப்படி இருந்தும் உங்க தலை ஏன் இப்படி இருக்கு?" என்றான். நாங்கள் சிரிக்க, மாமாவுக்கோ சங்கடமாகி விட்டது.

– ச. தமிழ்ப்ரியன், மூலப்பாளையம்.

டீ.வி. ஓடுதா?

டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தோம்.




திடீரென்று நிகழ்ச்சிகள் சரியாகத் தெரியலை. நானும் ஏதேதோ செய்து பார்த்தேன். ஒரு பலனும் கிடைக்கலை. என் தாத்தா, "பக்கத்து வீட்டு டீ.வி.நல்லா ஓடுதான்னு பாருடா" என்றார் என்னிடம். உடனே என் தங்கை "தாத்தா யார் வீட்டு டீவியும் ஓடாது. இருந்த இடத்தில்தான் இருக்கும்" என்றாள். உடனே நான் சிரித்து விட்டேன். தாத்தாவுக்கோ கோபம் உச்சியில் ஏறியது.

– சுதாகர், துத்திப்பட்டு.

உப்பு!

என் நண்பன் வீட்டிற்குப் படிக்கச் சென்றிருந்தேன். வீட்டில் அனைவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். நண்பனின்




அப்பா, "குழம்பில் உப்பு" என்றார். "நேற்று கூட கூட்டில் உப்பு" என்றான் நண்பன். "நேற்று ஒரு சிட்டிகை உப்பு அதிகம், இன்னிக்கு ஒரு ஸ்பூன் உப்பு அதிகம். இப்படி பயன்படுத்துறதுனாலதான் உப்போட விலை அதிகமாயிருக்க" என்றார் நண்பனின் அப்பா சிரிக்காமலே. "ரெண்டு நாளா உப்பு



அதிகம் சேர்த்தாச்சே. இன்னும் ரெண்டு நாளைக்கு உப்பே கிடையாது" என்றார் நண்பனின் அம்மா. எல்லோரும் சிரித்தோம்.

– சிவபெருமான், இரணியல்.

இரண்டு சீப்பு!



நான் விளையாடிக் கொண்டிருந்தேன். தாத்தா என்னிடம், "ரெண்டு சீப்பு வாழைப் பழம் வாங்கிட்டு வா" என்றார். "தாத்தா! உங்களுக்கு சீப்பே தேவையில்லை. எதுக்கு அநாவசியமா ரெண்டு சீப்பு?" என்றேன். என்னை முறைத்துப் பார்த்த தாத்தா, "ரெண்டு டஜன் வாழைப்பழம் வாங்கிட்டுவா" என்றார். நான் தாத்தாவிடம் மன்னிப்புக் கேட்டு, கடைக்குச் சென்றேன்.

– த. பிரபு, ஒன்பதாம் வகுப்பு,
துத்திப்பட்டு.

பூனைக்கு அடி!



என் சித்தி ஊரில் இருந்து வந்திருந்தார். அவருக்குப் பல்வலி வேறு. இரவு உறங்கிக் கொண்டிருந்தோம். பூனை ஒன்று வந்து 'மியாவ்! மியாவ்!' எனக் கத்தித் தொல்லை கொடுத்துக் கொண்டே இருந்தது. இருட்டில் நான் "இந்தா ச்சீ! போ" என்று ஒரு அடி வைத்தேன். பூனைக்குப் பதில், 'ஆ! ஐயோ!' என்ற சத்தம் வந்தது. விளக்கைப் போட்டுப் பார்த்தால், என் சித்தி கன்னத்தைப் பிடித்த படி உட்கார்ந்திருந்தார். அம்மா என்னைத் திட்டினார். சித்தியிடம் மன்னிப்புக் கேட்டேன்.

– வை. காஞ்சன மாலா,
நான்காம் வகுப்பு,
பார்வதி விஸ்வநாதன் பள்ளி,
சீர்காழி.

புதையலைத்

அருள் நம்பி

வீரமுத்துப்பட்டியில் வடுக நாதன் என்றொரு விவசாயி வாழ்ந்து வந்தார். வடுகநாதனுக்கு முனியாண்டி, இருளாண்டி, குப்பாண்டி என்ற மூன்று ஆண் மக்கள் இருந்தார்கள். மூவரும் சோம்பேறிகள். பள்ளிக் கூடத்திற்கு ஒழுங்காகப் போனதில்லை. அவர்களில் யாரும் மூன்றாம் வகுப்பை முழுமையாகத் தாண்டவில்லை.

படிக்காத தன் பிள்ளைகளுக்கு அவர் விவசாயத்தைக் கற்பித்தார். விவசாய வேலைகளையும் அவர்கள் ஒழுங்காகச் செய்யவில்லை. மிகவும் நொந்து போன பெரியவர் தன் மகன்களை மாடு மேய்க்க அனுப்பினார்.

அவர்கள் மாடுகளையும் ஒழுங்காக மேய்த்து வீட்டிற்கு ஓட்டி வரவில்லை. மாடுகளை ஓட்டிக் கொண்டு போய் மேய விட்டு விட்டு மர நிழலில் படுத்து விடுவார்கள். மாடுகள் மற்றவர்கள் நிலங்களில் உள்ள பயிர்களை மேயும். அந்த நிலங்களின் சொந்தக்காரர்கள் வடுகநாதனுடன் சண்டைக்கு வருவார்கள்.

வடுகநாதன் தன் மகன்களுக்குத் திருமணம் செய்ய நினைத்தார். திருமணம் நடந்த பின்னராவது குடும்பப் பொறுப்பு வந்து விடாதா என்பது அவரது ஏக்கம்.

அவர் நினைத்தது ஒன்று, நடந்தது வேறொன்று.

தன் பிள்ளைகளுக்கு மட்டும் சோறு போட்டு வந்த பெரியவர் வடுகநாதன் இப்போது தன் மருமகள்களுக்கும் சேர்த்து சோறு போட்டுக் கொண்டிருந்தார்.

மனைவிமார்கள் எவ்வளவோ சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. ஏற்கெனவே முக்கால் சோம்பேறிகளாக இருந்தவர்கள் இப்போது முழுச் சோம்பேறிகளாகி விட்டனர்.

ஒவ்வொருவருக்கும் குழந்தைகள் பிறந்தன. குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் வடுகநாதன் தலையிலேயே விழுந்தது.

வடுகநாதன் தன் சோம்பேறி மகன்களை நினைத்து கவலைப்படாத நாளே இல்லை.

ஒரு நாள் பெரியவர் வடுகநாதனுக்கு திடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்டது. படுத்த படுக்கையாகி விட்டார். அவரை வந்து பார்த்த நாட்டு வைத்தியர் நல்லமுத்து கையை விரித்து விட்டார்.

பெரியவர் பிள்ளைகளைத் தன் அருகே அழைத்தார்.

"என் அன்பு மக்களே, இத்தனை நாட்களும் மறைத்து வைத்திருந்த உண்மையை இப்போது உங்களுக்குச் சொல்லப் போறேன்."

"என்னப்பா அது? சீக்கிரம் சொல்லுங்கள்" என்று அவசரப்படுத்தினார்கள்.

"நம்ம நிலம் பத்து ஏக்கர் பாடுபடாம தரிசாக் கிடக்குதில..."

"ஆமா. அதுக்கென்ன இப்போ?"

"அந்த நிலத்திலே புதையல் இருக்கு."

"புதையலா?" மூவரும் வாயைப் பிளந்தார்கள்.

"மூன்று செப்புக்குடம் நிறைய தங்கக் காசுகள் இருக்கு."

"இதை ஏம்ப்பா எங்களுக்கு முதலிலே சொல்லலே?"

"சமயம் வரும்போது சொல்லலாம்னு இருந்திட்டேன்."

"எந்த இடத்திலே புதையல் இருக்கு சரியா சொல்லுங்கப்பா?"

"நான் சொல்ல மாட்டேன். நீங்கதான் கண்டுபிடிக்கணும்."



தேடி...

பெரியவர் வடுகநாதன் அடுத்த நாளே இறந்து விட்டார்.

பிள்ளைகள் மூவரும் மறு நாளே, வயலுக்கு மண்வெட்டி, கடப்பாரைகளுடன் சென்றனர். கிழக்குத் திசையிலிருந்து நிலத்தைத் தோண்ட ஆரம்பித்தனர்.

முழுச் சோம்பேறிகளான அவர்கள் நிலத்தைத் தோண்டுவதைப் பார்த்த ஊர்க்காரர்கள் காரணம் கேட்டனர்.

புதையல் பறிபோய்விடும் என்று நினைத்து அவர்கள் உண்மையைச் சொல்லவில்லை. மூவரும் தோண்டினார்கள், தோண்டினார்கள் தோண்டிக் கொண்டே சென்றார்கள். புதையலைக் காணவில்லை.

தோண்டிய ஐந்து ஏக்கர்களிலும் பயிர் செய்தார்கள். அமோக விளைச்சல் ஏற்பட்டது.

உழைப்பின் பயனை முதன் முதலில் உணர ஆரம்பித்தார்கள்.

மறு ஆண்டும் தோண்டுதல் வேட்டை தொடர்ந்தது. மீதி ஐந்து ஏக்கர் நிலங்களிலும் அமோக விளைச்சல்.

புதையலை எப்படியும் எடுத்து விடுவதென்று முடிவு கட்டினார்கள். தோண்டிய நிலத்தையே தோண்டியதால் மண் நன்றாகப் புரட்டப்பட்டது. மூன்றாம் ஆண்டும் நல்ல மழை. நல்ல விளைச்சல்.

அவர்கள் களஞ்சியம் நிறைந்தது. கைகளில் பணம் புரண்டது.

ஐந்து வருட உழைப்பில் அவர்கள் குடும்பத்தில் செல்வம் குவிந்தது. சோம்பேறித்தனம் அவர்களை விட்டு ஓடியது.

புதையல் என்று அவர்கள் தந்தை சொன்னதன் உட்பொருள் புரிந்தது. கடின உழைப்பே விலை மதிக்க முடியாத புதையல் என்று உணர்ந்து கொண்டார்கள்.



வண்ணங்களை அனைவரும் பார்க்க முடியுமா?

வண்ணங்களைப் பார்த்து மகிழ்வதில் பெரியவர் சிறியவர் என்ற பாகுபாடே கிடையாது. அந்தி வானின் சிவப்பு, கடலின் நீல நிறம், மழைமேகத்தின் கருமை, வயல்வெளியின் மரகதப் பச்சை, சாமந்தியின் மஞ்சள், வெள்ளை வெளேரென்ற அல்லி, மல்லிகைப் பூக்கள்! இப்படி இயற்கையின் வண்ணங்களைக் கண்டால் நமக்கெல்லாம் மகிழ்ச்சிதானே! இயற்கையின் அழகை ரசித்து, அனுபவிக்கிறோம். ஒருவேளை நம்மால், இப்படி நிறங்களைப் பிரித்தறிய முடியாவிட்டால்? கண்ணிருந்தும் குருடர்கள் போல், வண்ணத்தின் மகிமையை நம்மால் அறிய முடியாது; வண்ணமயமான உலகைக் காண முடியாது.

நம் கண்களிலுள்ள ரெட்டினா (Retina) என்ற விழித்திரையில் கூம்புகள் (cones) என்றும் குச்சிகள் (Rods) என்றும் நரம்பு செல்கள் உள்ளன. இவற்றில் குச்சிகள் வெளிச்சத்தை உணரவும் கூம்புகள் நிறங்களைப் பிரித்தறியவும் பயன்படுகின்றன. அடிப்படையில் நம் கண்களில், சிவப்பு, பச்சை மற்றும் நீலம் என்ற மூன்று வண்ணங்களைப் பிரித்தறியும் நரம்புகளே உள்ளன. ஆனாலும் கூட, இவ்வண்ணக் கலவையினாலான 3500 வகை வண்ணங்களை நம்மால் பார்க்க முடியும். ஏனெனில் அடிப்படை வண்ணங்களின் கலப்பிலேயே மற்ற வண்ணங்கள் உருவாகின்றன.



மனிதன் மட்டும்தான் இயற்கையின் வண்ணங்களைப் பார்க்கின்றானா? மற்ற உயிரினங்களும் நம் போல் பல வண்ணங்களைப் பார்க்கின்றனவா? 'இல்லை' என்றுதான் சொல்ல வேண்டும். மலருக்கு மலர்தாவும் பூச்சிகள் வண்ணத்தைப் பார்ப்பதில்லையா? வண்ணத்துப் பூச்சிகள், பூக்களின் நிறமறிகின்றன. ஆனால் நம் போலல்ல; மஞ்சள், பச்சை, நீலம் மற்றும் நீலம் சார்ந்த நிறங்களையும், புறஊதாக் கதிர்களின் நிறங்களையும் மட்டுமே அறியும்! மற்ற நிறங்கள்,

குறிப்பாக சிவப்பை இவற்றால் பார்க்க முடியாது; பச்சை நீலம் தவிர, மற்ற நிறங்களை வெள்ளை, சாம்பல் மற்றும் கறுப்பு நிறமாகவே பார்க்கின்றன.

ஆண் பறவைகள், வண்ணமயமாய்த் திரிகின்றனவே! பெண் பறவைகளால் இவற்றின் நிறத்தை இனம்காண முடியுமா? நிச்சயமாய் பறவைகட்கு மனிதர்கள் போலவே எல்லா நிறங்களும் துல்லியமாய்த் தெரியும்.



நமது நீண்ட கால நண்பனான நாயாருக்குத் தான் வண்ணக்காட்சிகள் தெரியாது. எல்லாமே கறுப்பு, வெள்ளைதான். ஆனால் நிறம் தெரியாததை ஈடுகட்ட, நம்மை விட பல ஆயிரம் மடங்கு நுணுக்கமாய் மோப்பம் பிடிக்கும் சக்தி உண்டு! அதனால்தானே போலீஸ்




நாய்க்கு ராஜ மரியாதை!

பூனைக்கும் வண்ணங்கள் தெரியாது! அது ஏன்? மஞ்சு விரட்டின் போது, காளை மாட்டிடம் சிவப்புத் துணியைக் காட்டி, மிரட்சியடையச் செய்கிறார்களே! அது சிவப்புத் துணியைக் கண்டா மிரள்கிறது? அப்படியெல்லாம் ஏதும் இல்லை. துணியை வைத்திருப்பவர் அங்கும், இங்கும் ஆடுவதைக் கண்டுதான் பாவம் அந்தக் காளை மிரண்டு ஓடுகிறது. சிவப்புத் துணி மாட்டின் கண்களுக்கு கறுப்பாகவே தெரியும்!

மனிதன், மனிதக் குரங்கு, குரங்கு மற்றும் பறவைகள் தவிர, மற்ற எந்த முதுகெலும்புள்ள ஜீவன்களுக்கும் வண்ணத்தைப் பார்க்கும் திறன் கிடையாது. முதுகு நாண் இல்லாதவைகளில், 'கணவாய் மீன்' எனப்படும் மெல்லுடலிகள் மட்டுமே நமக்கு இருப்பதைப் போன்ற கண்களைப் பெற்றிருக்கின்றன; ஆனால் இவைகளும் நிறங்களைப் பார்க்க மாட்டா! பூச்சிகள் புறஊதாக் கதிர்களின் நிறங்களையும் மஞ்சள், பச்சை மற்றும் நீல நிறங்களை மட்டுமே அறிய முடியும். மனிதனால் புறஊதாக் கதிர்களின் நிறங்களைப் பிரித்தறிய முடியாது.

— மோகனா



படிக்காமல் தேர்ச்சி!

முத்து எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவன். அவனுக்குப் படிப்பதில் துளியும் ஆர்வம் கிடையாது. எப்போதும் விளையாடுவதிலேயே குறியாக இருந்தான்.

முழு ஆண்டுத் தேர்வு நெருங்கிக் கொண்டிருந்தது. பெற்றவர்களும் ஆசிரியர்களும் தன்னை நினைத்து வருத்தப்படுவதை எண்ணிப் பார்த்தான் முத்து. 'படிக்காமலே தேர்ச்சி பெறும் வழியை யாராவது சொல்லிக் கொடுக்கக் கூடாதா?' என்று எண்ணியபடி ஆற்றங்கரைக்கு வந்தான்.

அங்கு ஒரு முனிவர் தவத்தில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது பாம்பு ஒன்று முனிவரை நோக்கி வர முத்து முனிவரை எழுப்பி உயிரைக் காப்பாற்றினான்.

உடனே முனிவர் "உனக்கு என்ன வேண்டுமோ கேள்" என்றார்.

"ஐயா! நான் படிக்காமலே தேர்ச்சி பெற வேண்டும்" என்றான் முத்து.

சிரித்த முனிவர் "படிக்காமல் தேர்ச்சி பெற வழி இருக்கிறது. தண்ணீர் இல்லாத கிணற்றில் ஒரு செம்பு தண்ணீரும், பூ பூக்காத செடியில் ஒரு பூவும் கொண்டு வந்தால் நீ படிக்காமல் தேர்ச்சி பெறலாம்" என்றார்.


"அது எப்படி முடியும்?" என்றான் முத்து.

"அதே போல்தான் படிக்காமல் எப்படி தேர்ச்சி பெற முடியும்? மனம் விரும்பி எந்தச் செயலை செய்தாலும் முன்னேற முடியும்" என்று கூறி நடந்தார் முனிவர்.

முத்துவிற்கு படிப்பு மேல் கொஞ்சம் ஆர்வம் வந்தது.

— என். கார்த்திகேயன்,
தேனி.

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெறும் முதல் கதை.



கல்வி எனும் செல்வத்தை...

பா. கவிதா

ரமா ஆவலுடன் எதிர்பார்த்திருந்த கட்டுரைப் போட்டியின் முடிவு அன்றைய செய்தித்தாளில் வந்திருந்தது.

செய்தித் தாளைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்த ரமாவின் முகம் சுருங்கியது. அதற்கு காரணம் முதல் பரிசு மரகதத்திற்கும் இரண்டாம் பரிசு ரமாவுக்கும் கிடைத்தது மட்டுமல்ல. மரகதத்தைத் தவிர வேறு யாராவது முதல் பரிசு வாங்கியிருந்தால்கூட ரமா அதிர்ச்சியடைந்திருக்க மாட்டாள்.

மரகதம் வேறு யாருமல்ல. ரமாவின் வீட்டில் வேலை செய்யும் மருதாயி அம்மாளின் பெண். ரமாவைவிட இரண்டு வயது பெரியவள்.

ரமாதான் அவளுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தாள். மரகதத்திற்கு இயல்பிலேயே எதையும் கற்றுக் கொள்ளும் ஆர்வம் இருந்ததால் விரைவில் அவளால் எழுதவும் படிக்கவும் முடிந்தது.

தினசரி நூலகங்களுக்குச் சென்று புத்தகங்கள், செய்தித்தாள்களை படிப்பதை தன் வழக்கமாக்கிக் கொண்டாள் மரகதம்.

அப்படி ஒரு நாள் அவள் செய்தித் தாளில் படித்த விஷயம்தான் இந்தக் கட்டுரைப் போட்டி.

உடனே ரமாவின் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள் மரகதம். "இங்க பாரு ரமா! 'எதிர்கால இந்தியாவைப் பற்றிய உங்கள் கனவு' என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி ஒண்ணு நடக்குது. நான் அதில் கலந்துக்கப் போறேன். நீயும் கண்டிப்பா கலந்துக்கணும்" என்றாள் மகிழ்ச்சி பொங்க.

மரகதத்தின் வற்புறுத்தலால் ரமாவும் போட்டியில் பங்கேற்க முடிவு செய்தாள்.

ஒரு வாரத்தில் இருவரும் தங்கள் கட்டுரைகளைத் தயார் செய்தனர். ரமாவிடம் தனது கட்டுரையைக் கொடுத்துப் படிக்கச் சொன்னாள் மரகதம்.

படித்த ரமாவுக்கு ஒரு பக்கம் வியப்பு. இன்னொரு பக்கம் பொறாமை குடி கொண்டது. 'நிச்சயம் மரகதம் பரிசு வாங்குவாள்' என்ற முடிவுக்கு வந்தாள்.

உடனே அவள் மனதில் ஓர் எண்ணம் தோன்றியது. "மரகதம் உன் கட்டுரையை நானே அனுப்பிடறேன்" என்று கேட்டாள்.

"இல்ல ரமா, நான் இன்னும் கொஞ்சம் சேர்த்து எழுத வேண்டியிருக்கு. நீ அனுப்பு. நான் நாளைக்கு அனுப்பறேன்" என்றாள் மரகதம்.

ரமாவின் மூளை மரகதம் போட்டிக்கு கட்டுரை அனுப்புவதைத் தடுக்க வேண்டும் என்று கட்டளை இட்டுக் கொண்டிருந்தது.

தனது கட்டுரையை அனுப்பிய ரமா, மரகதத்தின் வீட்டிற்குச் சென்றாள்.

"வா ரமா! மரகதம் கடைக்குப் போயிருக்காளே" என்றார் மருதாயி.

"அவ வர்ற வரைக்கும் காத்துட்டு இருக்கேன். நீங்க உங்க வேலையைச் செய்யுங்க" என்று கூறிய ரமா மெதுவாக மரகதத்தின் கட்டுரையை எடுத்தாள்.

மருதாயியிடம் சொல்லிக் கொண்டு வேகமாக வீட்டை அடைந்தாள்.

மரகதத்தின் கட்டுரையைத் துண்டு துண்டாகக் கிழித்து குப்பையில் போட்டாள்.

ரமா செய்வதறியாது நடந்த நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.



மரகதம் ஊருக்குச் சென்றிருந்தாள். நாளை மறுநாள் பரிசளிப்பு விழா.

பரிசை அவள் நேரடியாக தனக்கு முன்னால் வாங்க இயலாதது குறித்து ரமாவுக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

ரமா பட்டுப்பாவாடை உடுத்தி பெற்றோருடன் விழாவுக்கு வந்திருந்தாள். மேடையில் முதல் பரிசு பெறும் மரகதத்தை அழைத்தார்கள். மரகதம் முகத்தில் பெருமை பொங்க மேடை ஏறினாள். இரண்டாவது பரிசு பெற்ற ரமாவை அழைத்தார்கள். மேடை ஏறிய ரமா, மரகதத்திடம் "நீ எப்படி?" என்று கேட்டாள்.

"ஊரிலிருந்து நாலு மணிக்குத்தான் வந்தேன். வீட்டில் விஷயம் சொன்னாங்க. நேரா இங்க வந்துட்டேன்" என்றாள்.

பரிசு பெற்ற இருவரையும் விழாத் தலைவர் பேச அழைத்தார்.

முதலில் மரகதம் பேச ஆரம்பித்தாள். "நான் எழுதப் படிக்கத் தெரியாதவளாக இருந்தேன். எனக்குக் கல்வியைக் கற்றுக் கொடுத்த என் குருவிற்கு இந்தப் பரிசை அளிக்க நீங்கள் அனுமதிக்க வேண்டும். குரு வேறு யாருமல்ல. இரண்டாம் பரிசு வாங்கிய இந்த ரமாதான்" என்றாள் கண்களில் நீர் நிறைந்தபடி.

ரமாவை அனைவரும் பாராட்டினர். விழாத் தலைவர் "ரமாவைப் போல் ஒவ்வொருவரும் இருந்தால் இந்த நாட்டில் கல்லாமையை ஒழித்து விடலாம்" என்று கூறினார்.

ரமாவிற்கு நெஞ்சு வலித்தது. 'இப்படிப்பட்டவளையா ஏமாற்றினோம்?' என்று வருந்தினாள்.



விழா முடிந்தது. மரகதம் ரமாவிடம் வந்தாள். ரமா தன்னைக் கட்டுப்படுத்த இயலாமல் அழுதபடி நடந்ததைக் கூறி மன்னிப்புக் கேட்டாள்.

இதைக் கேட்ட மரகதம் "நான் முதலில் எழுதிய கட்டுரையைத்தான் நீ எடுத்திருக்கிறே. ரெண்டாவது தடவை சில இருத்தங்களுடன் எழுதிய கட்டுரையை நான் முதலிலேயே அனுப் பிட்டேன். நீ என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டாம் ரமா. ஏன்னா நீ எனக்கு கல்வி எனும் செல்வத்தைக் கொடுத்த குரு" என்றாள் மரகதம்.

மலைத்து நின்ற ரமாவை கைப் பிடித்து அழைத்துச் சென்றாள் மரகதம்.



மழையே மழையே ஏன் வந்தாய்?

குயிலின் குழந்தைப் பாடல்கள், புலவர் தமிழ்வேலனார், பக்.80. ரூ. 15/- சங்கரக் குமார் தமிழ்வேலன், 39, மன்னப்பன்தெரு, மன்னார்குடி - 614 001, விற்பனை உரிமை மணிமேகலை பிரசுரம், சென்னை - 17.

சிறுவர்கள் விரும்பும் 11 தலைப்புகளில் சந்தம் கொஞ்சும் அருமையான பாடல்களின் தொகுப்பு. கற்பனை வளத்திற்கும் குறைவில்லை. (உ.ம்)

'சின்னச் சின்ன எலியே
திருடித் தின்னும் எலியே
இந்தத் தொழிலை விட்டே
இனிதாய் உழைத்தால் என்ன?'(பாடல் 'எலி')

மழையைப் பற்றிய புதிய கற்பனை இதோ:

'மழையே மழையே ஏன் வந்தாய்?
வானம் அடித்துத் துரத்தியதோ?' பக். 69.

படங்களும் மெருகூட்டுகின்றன.

அச்சுக் கலையும் புத்தக வெளியீடும், பி.ரு.வெங்கட்டாச்சாரி, பக்.108. ரூ. 20/- மணிமேகலை பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 17.

எழுத்துகள் தோன்றிய வரலாற்றிலிருந்து தொடங்கி, காகிதம் பிறந்தது, அச்சுமை தோற்றம், இந்தியாவுக்கு வருகை, அச்சடித்தல், பைண்டிங், பிழைதிருத்துதல், புத்தக மேலுறை அமைத்தல், நூல் வெளியீட்டுத் தொழில், புத்தகத்தின் பகைவர்கள் என்று முழுமையான பிரச்னைகளை எளிய முறையில் சுவையாகத் தந்திருக்கிறார் ஆசிரியர்.

கருணைக் கதைகள், தமிழாக்கம் வையவன், பக்.136 (விலை குறிப்பிடப்படவில்லை). என்.சி. அனந்தாச்சாரி, 2, ஸ்ரீராம் நகர், தெற்கு தெரு, சென்னை - 18.

மனித குலத்திற்கு இழைக்கப்படும் வன்முறையைக் கண்டு எதிர்க்கும் இயக்கங்களைப் பற்றி நமக்கெல்லாம் தெரியும். பறவை விலங்குகளுக்கு மனிதகுலம் இழைக்கும் கொடுமைகளைப் பற்றி யோசித்திருக்கிறோமா? இப்படி யோசித்து அவைகளின் இன்னல்களைக் களைய முயன்ற கருணை உள்ளங்கள் சிலவற்றை ஆசிரியர் இனம் காட்டி கதை வாயிலாகக் கூறுகிறார். ஆங்கில மூலத்தின் தமிழாக்கம் என்பதே தெரியாமல் இருப்பது தனிச் சிறப்பு. படிக்கும்போதே சில இடங்கள் நம்மைக் கசிய வைக்கின்றன. எல்லா உயிர்களும் நேசிக்க உகந்தவையே என்பதை மிக அழகாகக் கதைகள் உணர வைக்கின்றன.

பல்சுவைக் கதைகள், பி.எல். சுப்பு. பக். 192. ரூ. 40/- பழனி நிலையம், 11. டி.டி.கே. சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14.

இராமகிருஷ்ண பரமஹம்சரின் உத்தியில் பலவிதமான அறநெறிகளை வலியுறுத்தும் 39 கதைகள் முழுப்பக்கப் படங்களுடன் இத்தொகுப்பில் உள்ளன.

இந்திய விடுதலை எழுச்சியில் தூத்துக்குடி, எழிலமுதன், பக். 140, ரூ. 27, மணிமேகலை பிரசுரம், 4 தணிகாசலம் சாலை, சென்னை - 17.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தூத்துக்குடியும் அதன் பகுதியில் வாழ்ந்த சுதந்தரப் போராட்டத் தியாகிகள் புரிந்த வீரசாகசங்களும் நன்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அரிய தகவல்களுக்கும் பஞ்சமில்லை.

— ரே

உங்கள் நூலகம்


3 சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!

படம் : லலிதா அமைப்பு : விஜி




நீ இந்தத் துறைமுகத்திற்கு வரும் கப்பல்களின் பதிவாளராக வேலை செய்யலாம்.
நன்றி அரசே!
சிந்துபாத்திற்கு நல்ல சம்பளம் கிடைத்தது.
இந்தப் பணத்தை வைத்து அதிசயத் தீவுகளைச் சுற்றிப் பார்க்க வேண்டும்.
அதிசயத் தீவிற்குச் சென்றான்.
என்னது! இருநூறு அடி நீளமுள்ள மீன்கள் கூட இருக்கின்றனவே!
வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சிந்துபாத் கடலுக்குள் இழுக்கப்பட்டான்.
ஐயோ! யார் இழுப்பது?


அதிசய மீனைக் கொன்று நீந்திக் கரை சேர்ந்தான் சிந்துபாத்.
துறைமுகத்தில் ஒரு நாள் –
வேகமாக இறக்குங்கள். ஏன் அந்த சரக்கு மட்டும் கப்பலில் இருக்கு?
இது ஏற்கனவே பயணம் செய்த ஒரு வருடையது. அவர் கடலில் மூழ்கி விட்டார்.
அவர் பெயர்?
கடலோடி சிந்துபாத்.
நான்தான் சிந்துபாத். மீன் தீவிலிருந்து தப்பி வந்தவன்.


மீண்டும் சந்தித்ததில் மகிழ்ச்சி. உங்கள் சரக்குகளை எடுத்துக் கொள்ளுங்கள்!
சரக்கை எடுத்துக் கொண்டு அரண்மனைக்குச் சென்றான்.
அரசே! என் சரக்குக் கிடைத்து விட்டது. இதை என் அன்பளிப்பாக வைத்துக் கொள்ளுங்கள்.
உனக்கும் என்னுடைய பரிசு!
மீதி சரக்குகளை ஏலம் விட்டான்.
தரமான சீனத்துப் பட்டு. ஆயிரம் ரூபாய் ஒரு தரம்.... ரெண்டு தரம்.
ஆயிரத்தி நூறு ரூபாய்!
ஆயிரத்தி ஐநூறு ரூபாய்!
முதல் பயணத்தை வெற்றிகரமாக முடித்து, தன் நாட்டிற்குத் திரும்பிய சிந்துபாத் செல்வந்தனாக வாழ்ந்தான்.
(தொடரும்)



பூமியில் ஒரு வானவில்!



நம் அனைவருக்கும் வானவில்லைப் பிடிக்கும். வானில் காணப்படும் அதைப் போன்றதொரு அழகிய வானவில் பூமியிலும் உள்ளது. அதுதான் அமெரிக்காவின் செயின்ட் லூயிஸ் நகரத்தில் உள்ள 'நுழை வாயில் வளைவு' (Gateway Arch). அமெரிக்காவின் மேற்கத்திய விரிவாக்கத்தின் நினைவாக இது நிற்கிறது.

பைபிளில், வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட போது நோவா தன் குடும்பத்தினரையும் விலங்கினங்களையும் பாதுகாப்பாகக் கப்பலில் அழைத்துச் சென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப் போல வெள்ளப் பெருக்கு ஏற்படாது என்பதற்கு அடையாளமாக கடவுள் வானவில்லை உருவாக்கியதாக ஒரு புராணக் கதை இருக்கிறது. எனவே, மேற்கு நோக்கி நம்பிக்கையுடன் சென்ற ஆயிரக்கணக்கானவர்களின் நினைவாக அமைக்கப்படும் நினைவுச் சின்னத்திற்கு 'வானவில்' வடிவம் மிகப் பொருத்தமாக அமைந்தது.

பளபளக்கும் துருப்பிடிக்காத இரும்பில் 630 அடி உயரத்தில் எதிர்காலத்தின் நம்பிக்கையை உருவகிக்கும் வானவில்லாக 'நுழைவாயில் வளைவு' விளங்குகிறது. அமெரிக்கப் பொறியியல் வல்லுநரான ஈரோ சாரினென்தான் இதை

வடிவமைத்தார். மேற்குப் பகுதியை வெற்றி கொண்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சியையும் சாதனையையும் வெளிப்படுத்தும் இவ் வளைவு 1965-ல் முடிவடைந்தது. இதில் உள்ள மின்படிகள் (Escalator) மூலம் இதன் உச்சிக்குச் செல்ல முடியும். இங்கிருந்து லூயிஸ் நகரம் மற்றும் மிஸிஸிபி நதியின் அழகை அனுபவிக்க முடியும்.

'நுழைவாயில் வளைவு' பற்றிய கதையை மேற்கத்திய விரிவாக்க மியூசியத்தில் அறிந்து கொள்ளலாம். அங்குள்ள புகைப் படங்கள், ஓவியங்கள், வரைபடங்கள் போன்றவை இதன் கதையைச் சொல்லும். இதன் கட்டுமானம் பற்றிய செய்திப் படமும் இங்கே உள்ளது.

நுழைவாயில் அருகே ஒரு பழைய பாலம் உள்ளது. எட்ஸ் பாலம் என்றழைக்கப்படும் இதை வடிவமைத்தவர் ஜேம்ஸ் ஆர். எட்ஸ். 1874-இல் அமைக்கப்பட்ட இது மிஸிஸிபி நதியின் மீது செல்கிறது. இங்கு, இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப் பட்ட 'இனாகரல்' கப்பல் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டுள்ளது. 1830களில் கட்டப்பட்ட பழமையான பேஸிலிகா கதிட்ரல் தேவாலயமும் இங்கு உள்ளது. இதன் புராதனப் பெருமையே இதைக் காப்பாற்றித் தந்தது. வானவில் வடிவமான நுழைவாயிலை அமைக்க அங்கு சுற்று வட்டாரத்தில் இருந்த பல கட்டிடங்கள் இடிக்கப்பட்டன. ஆனால் இந்த பஸிலிகாவின் முக்கியத்துவம் கருதி இதைத் தகர்க்காமல் விட்டனர்.

'நுழைவாயில் வளைவு' வடிவமைக்கப்பட்ட கதை சுவாரசியமானது. இதை நிறுவ முடிவு செய்த பிறகு, வடிவமைக்கும் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. இதில் பலர் கலந்து கொண்டனர். ஈரோ சாரினென் மற்றும் எலீல் சாரினென் அவர்களுள் முக்கியமானவர்கள். இருவருமே பொறியியல் வல்லுநர்கள். அது மட்டுமில்லை. எலீல் தந்தை; ஈரோ புதல்வர். போட்டியில் வெற்றி பெற்றது ஈரோவின் வடிவமைப்பே. ஈரோ 1948-இல் இப் பரிசைப்

"அவனோட பெயர் மாதத்தோட பெயர் மாதிரி இருக்குன்னு எப்படி சொல்றே?"

"பெயரைக் கேட்டதுக்கு வைகாசின்னு சொல்றானே!"

- காழி ஆர். சீதாராமன்



பெற்றார். 1910இல் பின்லாந்தில் பிறந்த ஈரோ சிறுவனாக இருந்த போதே தீக்குச்சி வடிவமைப்புப் போட்டியில் பரிசு பெற்றவர். ஈரோவின் குறிப்பிடத்தக்க வடிவமைப்புகள் அவருடைய பெருமையைப் பறைசாற்றிக் கொண்டு அமெரிக்காவின் பல நகரங்களில் கம்பீரமாகக் காட்சி தருகின்றன. 'வானவில்' வளைவை வடிவமைத்த இவர் அது முடிவடைவதைக் காண உயிருடன் இல்லை. 1961-இல் தன் 51 வது வயதில் மூளைக் கட்டி காரணமாக இறந்தார் ஈரோ.

பல சிறப்புகளைப் பெற்ற 'நுழைவாயில் வளைவு' இன்றளவும் பூமியில் புகழுடன் வானவில்லாக வளைந்து நிற்கிறது. மனிதன் உருவாக்கியவற்றுள் மிக உயரமான நினைவுச் சின்னமாக இது கின்னஸில் இடம்பெற்றுள்ளது. மனிதனின் உழைப்பைப் பறைசாற்றுவதோடு எதிர்கால நம்பிக்கைச் சின்னமாகவும் 'நுழைவாயில் வளைவு' அழகாகவும் கம்பீரமாகவும் காட்சியளிக்கிறது.

— கோ. சதீஷ்குமார்.



ஓவியப் போட்டி

1999 பிப்ரவரியிலிருந்து 'கோகுலம்' பதினேழாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இதைக் கொண்டாடும் விதத்தில் இந்த மாதத்திலிருந்து 'ஓவியப் போட்டி' ஆரம்பிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் ஏதாவது ஒரு தலைப்பு அறிவிக்கப்படும். அந்தத் தலைப்பிற்கு ஏற்ற ஓவியங்களை நீங்கள் வண்ணம் தீட்டி அனுப்பி வைக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டு, மூன்று மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் முகவரியைக் குறிப்பிட மறவாதீர்கள்!

இந்த மாதத் தலைப்பு – பூக்கள்

இதழ் கிடைத்த 15 நாட்களுக்குள் அனுப்பி வையுங்கள்.

கட்டியவர்கள் யார்? – போட்டி முடிவு

இப் போட்டியில் குறைவான வாசகர்களே கலந்து கொண்டனர். கலந்து கொண்டவர்களில் பெரும்பாலோர் தவறான விடைகளையே அளித்திருந்தனர். சரியான விடைகளை எழுதிய ஆறு பேர் மட்டுமே பரிசு பெறுகிறார்கள்.

ரூபாய் இருபத்தி ஐந்து பரிசு பெறுவோர்

1. பி.என். நாகராஜன், நாகமங்கலம், தருமபுரி மாவட்டம்
2. எஸ். விஷ்ணுப் ப்ரியா, எட்டாம் வகுப்பு, சரஸ்வதி நடுநிலைப் பள்ளி, வெளிப்பட்டிணம், இராமநாதபுரம் மாவட்டம்.
3. கே. சபரி கிரிஷ், ஒன்பதாம் வகுப்பு, திலக் மெமோரியல் பள்ளி, பெங்களூர்.
4. ஆர்.ஆர். ராஜலட்சுமி, தி. நகர், சென்னை.
5. கே. பி. சுப்ரமணியன், சென்னை.
6. மனீஷா மணிமாறன், வடக்கன்குளம், நெல்லை மாவட்டம்.

சரியான விடை

1. பொற்கோயில் – குருராமதாஸ்
2. தாஜ்மஹால் – ஷாஜஹான்
3. ஜந்தர் மந்தர் – ராஜா ஜெய்சிங்
4. சாஞ்சி ஸ்தூபி – அசோகர்
5. தஞ்சை பெரிய கோயில் – இராஜ ராஜ சோழன்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.





எலிகள் கொறிப்பது ஏன்?

அம்மாவின் புடவை கடிக்கப்பட்டிருந்தது. தம்பியின் புத்தகம் கொறிக்கப்பட்டிருந்தது. அப்பா நேற்று வாங்கி வந்த அரிசி மூட்டையில் ஓட்டை போடப்பட்டு அரிசி திருடு போயிருந்தது. தூங்கிக் கொண்டிருந்த தங்கையின் ரிப்பன் கத்தரிக்கப்பட்டு இருந்தது. எல்லோருக்கும் இந்த அரிய செயல்களைப் புரிந்த சாதனையாளர் மீது கடுமையான கோபம் ஏற்பட்டது.

யார் அந்தச் சாதனையாளர்? கொறி மன்னர் எலியார்தான்!

இவை ஏன் இப்படி எல்லாவற்றையும் நாசம் செய்கின்றன? எலிகள் 'கொறி விலங்கு' வகையைச் சேர்ந்தவை. இவற்றின் உளிப் பற்கள் வளர்ந்து கொண்டே இருக்கும். பல் வளரும் உறுத்தலைத் தீர்த்துக் கொள்ளவே கடினமான பொருட்களைக் கொறித்து பற்களைத் தேய்த்துக் கொள்கின்றன. இதனாலேயே உணவு அல்லாத பொருட்களையும் கூட தேங்காய் பூ துருவுவது போல் துருவிக் கொட்டி விடுகின்றன எலிகள்.

பொதுவாக பகல் நேரங்களில் தங்கள் செயல்பாடுகளை எலிகள் வைத்துக் கொள்வதில்லை. வெளிச்சத்தைக் கண்டால் இவற்றின் கண்கள் கூசுவதாலும் மனிதர்களின் நடமாடுதலாலும் வெளியே வருவதில்லை.



சுவர் ஓரங்கள், சந்து பொந்துகள், தோட்டம், பரண், பழையப் பொருட்கள் போட்டிருக்கும் இடங்களில் எல்லாம் எலிகள் ஜம்மென்று வாழ்க்கை நடத்துகின்றன.

இருந்தாலும் தமது உறுதியான பற்களால் நிலத்தில் வளையைத் தோண்டி வாழ்க்கை நடத்துவதையே பெரிதும் விரும்புகின்றன. தூங்கவும் உணவு சேமித்து வைக்கவும் தனித்தனியான அறைகளை வைத்திருக்கின்றன எலிகள்.

இவை பெரிய குடும்பங்களாக வாழ்கின்றன. ஆண் எலிகள் தங்கள் இருப்பிடத்திற்கு ஓர் எல்லையை உருவாக்குகின்றன. இந்த எல்லைக்குள் எதிரிகளோ, மற்ற எலிகளோ நுழையாமல் கண்காணித்தபடி இருக்கின்றன.

பிறந்த நான்கு மாதங்களிலேயே பெண் எலிகள் இனப்பெருக்கம் செய்யத் துவங்கி விடுகின்றன. பெண் எலி துணிகள், மென்மையான பொருட்களைக் கொண்டு சிறு கூட்டை உருவாக்கும். கரு உருவாகி மூன்று வாரங்களில் இந்தக் கூட்டில் குட்டிகளைப் போடும். ஒருமுறைக்கு பதிநான்கு குட்டிகள் வரை பிறக்கின்றன.

குட்டிகள் பிறக்கும் போது நம் சுண்டு விரல் அளவில் இளம் சிவப்பு நிறத்தில் இருக்கின்றன. சில நாட்களில் விரைவாக வளர்ந்து விடும் சக்தி எலிகளுக்கு உண்டு. தாய், குட்டிகளைக் கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொள்ளும்.

எலிகளுக்கு ஆயுட்காலம் ஓராண்டு தான்! இதில் ஒரு பெண் எலி 6 முறை குட்டி போடும். தன் வாழ்நாளில் கிட்டத்தட்ட நூறு குட்டிகளை இந்த உலகில் உலாவ விட்டு விடும் ஒரு பெண் எலி. இப்போது புரிகிறதா, எலிகள் இவ்வளவு அதிகம் பெருகி இருப்பதற்குக் காரணம்?

அரிசி, பருப்பு, தேங்காய், பிஸ்கெட், கேக், காய்கறிகள், பழங்கள், இனிப்பு, காரம் என எதையும் விடுவதில்லை. எல்லாவற்றையும் தின்று கொழுக்கின்றன எலிகள்.



எஸ். சுஜாதா

வடதுருவங்கள் மற்றும் மிக வறண்ட பாலைவனங்களைத் தவிர எல்லா இடங் களிலும் வாழ்கின்றன.

முதிர்ச்சியடைந்த எலி ஒன்பது செ.மீ. நீளம் இருக்கும். சாம்பல் மற்றும் பழுப்பு நிறத்தில் காணப்படும். எலிகளுக்கு மீசை யும் நீண்ட வாலும் உண்டு.

எலிகளின் வளைக்குள் வந்தே தாக்கக் கூடிய எதிரி பாம்பு. வளையை விட்டு வெளியேறும் போது ஆந்தை, கழுகு போன்ற எதிரிகளால் ஆபத்து உண்டு. வீடுகளில் மனிதர்கள் மற்றும் பூனைகள் எலிகளுக்கு முக்கிய எதிரிகள்.

எலிகள் உணவுப் பொருட்களை நாசம் செய்வதோடு நோயையும் பரப்புகின்றன. சில வருடங்களுக்கு முன் பிளேக் நோயைப் பரப்பிய எலிகளை அழித்தது நினைவிருக்கிறதா?

வயல்களில் புகுந்து பயிர்களை அழிப்பதால் விவசாயிகளுக்கு பெரும் தொல்லையைத் தருகின்றன.

மனிதன் உற்பத்தி செய்யும் மூன்றில் ஒரு பங்கு உணவு எலிகளால்


குளிர் பிரதேசங்களில் கூட சந் தோஷமாக வாழ்கின்றன. குளிரைத் தாங்கக்கூடிய அளவிற்கு உடலைச் சுற்றி தோலின் அடிவாரத்தில் கொழுப்பு உள்ளது. இதனால் எலியின் உடல் கதகதப்பாக இருக்கும்.

எலிகள் (Rodents) கொறி விலங்கு வகையைச் சேர்ந்தவை. குட்டி போட்டுப் பால் கொடுக்கும்.

பார்வைக் குறைவுடையவை. வெளிச்சத்தைக் கண்டால் கண்கள் கூசுவதால் ஓடி ஒளிந்து கொள்ளும்.

இரவில் இரை தேடிச் செல்லும். தன் கூர்மையான பற்களைக் கொண்டு உணவைச் சேகரித்து, வளைதோண்டி வாழ்க்கை நடத்து கின்றன.

கருவுற்ற மூன்று வாரங்களில் தாய், குட்டி போடும். சராசரி ஆயுட் காலம் ஓராண்டு.



குரங்கு

சாட்டை வாலை இழுத்த வாறு
சந்தி தோறும் திரியும்!
கோட்டை, கூரை, மரத்தின் மீது
குதித்து ஏறி விரையும்!

வீட்டில் காயும் பொருட்கள் யாவும்
விரும்பித் தேடி அறியும்!
நாட்டத் தோடு புசித்து, வாரி
நாலு புறமும் எறியும்!

தோட்டக் காய்கள் கடித்து வீசித்
தொலைத்து நாசம் புரியும்!
ஆட்டம் ஆடி அலுப்புத் தீர
அமர்ந்து தேகம் சொறியும்!

ஓட்டக் கோலை எடுக்கும் போது
உயர்ந்து புருவம் நெரியும்!
காட்டுக் கூச்சல் எழுப்பித் தாவிக்
கணத்தில் ஓடி மறையும்!

— தளவை இளங்குமரன்.



பரவலாக எல்லா நாடுகளிலும் எலிகள் வாழ்கின்றன. உணவை நாசம் செய்வதோடு நோயையும் பரப்புகின்றன.

பயிர்களை நாசம் செய்ததினால் ஆஸ்திரேலியாவில் 70,000 எலிகள் ஒரு மதிய வேளையில் கொல்லப் பட்டன.

நாசப்படுத்தப்படுகிறது.

நாம் வீடுகளில் எலிப் பொறியை வைத்தும் எலி சிக்காமல் டிமிக்கி கொடுப்பது நமக்கு ஆச்சரியத்தைத் தரும். எலிகள் அறிவுக்கூர்மை மிக்கவை. புதிய பொருட்களையோ, ஆபத்தான பொருட்களையோ நினைவில் வைத்துக் கொண்டு மீண்டும் ஆபத்தில் சிக்காமல் தப்பி விடுகின்றன.

கோகுலம் க்விஸ்

1. எலிகள் எவ்வகை விலங்கினம்?
2. எலிகள் மனிதனுக்கு நன்மை செய்கின்றன. சரியா?
3. பெண் எலி எத்தனை குட்டிகள் போடும்?
4. எலிகளின் எதிரிகள் எவை?
5. குளிர்ப் பிரதேசங்களில் எலிகள் வசிக்கின்றனவா?

விடை :
1. கொறி விலங்கு, 2. தவறு, 3. 14 குட்டிகள், 4. பாம்பு, கழுகு, ஆந்தை, பூனை, மனிதன், 5. வசிக்கின்றன.


கோலப் போட்டி முடிவுகள்!




எம். பத்மாவதி, ராயக்கோட்டை, ஓசூர்.



எம். நாகராஜன், பெரியதச்சூர், திண்டிவனம்.



ஆர். ஐஸ்வர்யா, மகாதானபுரம் கிராமம், கன்னியாகுமரி மாவட்டம்



எஸ். ப்ரியா, ஒன்பதாம் வகுப்பு,
ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம்.

ஜெ. மாலதி, ஏழாம் வகுப்பு,
ரெய்ச்சூர், கர்நாடக மாநிலம்.



எஸ்.இ. ராஜலக்ஷ்மி, நான்காம் வகுப்பு,
விஸ்டம் மெட்ரிகுலேஷன் பள்ளி, செய்யாறு.



கே. கங்காதேவி, பாரூர் அஞ்சல்,
தருமபுரி மாவட்டம்.



ரா. சிந்துஜா,
நாகப்பட்டிணம்.





க.சுகிர்த்மூர்த்தி, ஐந்தாம் வகுப்பு,
மாமல்லன் மெட்ரிக் பள்ளி, காஞ்சிபுரம்.



சார் தபால்!

✉ புதுமையான வாழ்த்து அட்டை செய்ய எங்களுக்கு உதவி இருக்கிறீர்கள், நன்றி. இனி விருந்தில் மட்டுமல்ல வாழ்த்திலும் கூட இலை இடம் பெறும்.

டி. சந்திரன்,
சித்தோடு.

✉ சென்ற ஆண்டைப் போல் இந்த ஆண்டும் 'கோகுலம் காலண்டர்' நிச்சயம் வரும் என எதிர்பார்த்தேன். அதே போல் அழகாக வந்திருக்கிறது. என் அலமாரியில் ஒட்டி வைத்து விட்டேன்.

– எஸ். கயல்விழி,
மதுரை–10.

✉ நான் கோகுலத்தை மே '98ல் இருந்து தான் வாங்குகிறேன். வத்தலக்குண்டு பள்ளி மாணவர்கள் கோகுலம் சுழல் கோப்பையை எப்படி பெற்றார்கள்? அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெரியப்படுத்துங்கள்.

– ந. சிவகுமார்,
ஓரியண்டல் உயர்நிலைப் பள்ளி,
வண்ணாரப்பேட்டை.

✸ உங்களைப் போன்ற பள்ளி மாணவர்கள் கதை, கட்டுரை, துணுக்குகள், சிரிப்புகள்... போன்ற படைப்புகளை கோகுலத்திற்கு எழுதி அனுப்ப வேண்டும். சுவையான படைப்புகள் கோகுலத்தில் பிரசுரிக்கப்படும். ஒரு வருடத்தில் எந்தப் பள்ளி மாணவர்களின் படைப்புகள் அதிகமாக இடம் பெற்றதோ அந்தப் பள்ளிக்கு 'கோகுலம் சுழல் கோப்பை' வழங்கப்படும். சிவகுமார், உங்கள் பள்ளி மாணவர்களுக்கு இச் செய்தியைக் கூறி கோகுலம் சுழல் கோப்பையைப் பெற முயற்சிக்கலாமே? படைப்புகளை அனுப்பும் போது பெயர், பள்ளி, வகுப்பு, முகவரியை மறக்காமல் எழுதி அனுப்ப வேண்டும். –ஆர்

✉ எங்களைவிட அதிக அளவில் படைப்புகளை கோகுலத்தில் இடம் பெறச் செய்து சுழல் கோப்பையை தட்டிச் சென்ற வத்தலக்குண்டு பள்ளி மாணவர்களுக்கு வாழ்த்துகள்! 1999ஆம் ஆண்டு சுழல் கோப்பையைப் பெறாமல் விடுவதில்லை.

– க. செந்தில் குமார்,
ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
பெரியதச்சூர்,
திண்டிவனம் தாலுகா.

✉ செய்தித் தாள்களில் விண்கற்கள் பொழிவு பற்றி விரிவாக செய்தி வெளிவரவில்லை. கோகுலமே தெளிவாக தகவல்களை அளித்தது எனக்கு.


– கே. மாதவி,
ஒன்பதாம் வகுப்பு,
பெண்கள் மேல்நிலைப் பள்ளி, செங்கல்பட்டு.

✉ புராணக் கதைக்குப் படம் போடும் ஓவியர் ஒவ்வொரு மாதமும் அசத்தி விடுகிறார்.

– வாஞ்சிநாதன், ஸ்ரீரங்கம்.

பிறந்தநாள் வாழ்த்துகள்!

புத்தாண்டு, பொங்கல் மற்றும் கோகுலம் பிறந்த நாள் வாழ்த்துகளை அனுப்பி வைத்த சோழபுரம் இரா. சாயாம்பு, வி.மகேஸ்வரமணி, வி.காசிநாதன், உடுமலைப் பேட்டை கா. வித்யா, கல்பாக்கம் ஜெ.டேவிட் காரைக்கால் ஆர். மெதினா ஆகியோருக்கு நன்றி.



நானே ராஜா!

திருச்சிற்றம்பலத்தில் வாரா வாரம் சந்தை நடப்பது வழக்கம். அதுபோல் இந்த வாரமும் சந்தை நடந்தது. கொத்தவரங்காய், வெண்டைக்காய், அவரைக்காய், வாழைக்காய், புடலங்காய், கத்தரிக்காய், மாங்காய், கீரை வகைகள், பூசணிக்காய், பறங்கிக்காய், வெங்காயம் முதலியன குவியல் குவியலாகக் குவிக்கப்பட்டிருந்தன. அப்போது "காட்டுக்கு ராஜா, நாட்டுக்கு ராஜா என்பது போல் நமக்கும் ஒரு ராஜா இருந்தால் நன்றாக இருக்கும்" என்றது பூசணிக்காய். "இதில் என்ன கஷ்டம்? நாமே ராஜாவைத் தேர்ந்தெடுத்து விட்டால் போதுமே" என்றது மங்காய்.

உடனே புடலங்காய், "நான் நீளமாகவும், அழகாகவும் இருப்பதால் நானே ராஜா" என்று கூறியது. அதற்கு வெண்டைக்காய் "பெண்களெல்லாம் என்னை விரும்பி வாங்குவதால் நானே ராணி" என்றது. உடனே வாழைக்காய் "அமாவசை போன்ற நாளில் என்னை எல்லோரும் உபயோகிப்பதால் நானே ராஜா" என்று கூறியது. இவ்வாறு ஒவ்வொரு காய்கறியும் தானே அழகாய் இருப்பதால் தானே ராஜா என்று கூறின. இதனால் அந்தக் கூட்டத்தில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. உடனே வெங்காயம் எழுந்து, "நமக்குள் ஏன் சச்சரவு? நாம் நேரில் கடவுளிடம் சென்று கேட்போம்" என்று கூறியது. எல்லாக் காய்கறிகளும் சம்மதித்தன.

மறுநாள் காலையில் ஒவ்வொரு காய்கறியிலும் ஒவ்வொன்று வீதம் மண்ணுலகிலிருந்து விண்ணுலகம் நோக்கிச் சென்று கொண்டிருந்தன. அப்பொழுது வெயில் கடுமையாக இருந்தது. சிறிது தூரம் சென்றதும் கொத்தவரங்காய் வாடிக் கீழே விழுந்தது. மாங்காய் அழுகிக் கீழே விழுந்தது. பரங்கிக்காயும், பூசணிக்காயும் தன் பூத உடலைத் தூக்கிச் செல்ல முடியாமல் கீழே விழுந்து நொறுங்கின. ஆனால் வெங்காயம் மட்டும் விண்ணுலகிற்குச் சென்றது.

அப்பொழுது கடவுள், "பக்தனே வா! என்ன காரணமாக இங்கு வந்தாய்?" என்று கேட்டார். அதற்கு வெங்காயம் "எங்களுக்குள் யார் ராஜா? என்ற ஒரு சச்சரவு ஏற்பட்டது. ஆகையால் நாங்கள் எல்லோரும் உங்களைச் சந்தித்துக் கேட்கலாம் என்று வந்தோம்" என்று கூறியது. அதற்கு கடவுள், "நாங்கள் எல்லோரும் வந்தோம் என்றாயே, ஆனால் நீ மட்டும்தானே வந்திருக்கிறாய்?" என்றார். அதற்கு வெங்காயம், "நாங்கள் சேர்ந்து வரும்பொழுது வழியில் எல்லோரும் வாடிக் கீழே விழுந்து விட்டார்கள். நான் மட்டும் இங்கு வந்தேன்" என்று கூறியது. உடனே கடவுள், "இதிலிருந்தே தெரியவில்லையா? அத்துடன் இந்தியாவில் உனது மதிப்பு தங்கத்தை விட அதிகம்! நீயே ராஜா" என்று கூறினார்.

வெங்காயம்தான் ராஜா என்பதற்கு அடையாளமாக பொன்னாடை போர்த்தி, "இதன் மூலம் அவர்கள் நீதான் ராஜா என்று தெரிந்து கொள்வார்கள், நீ சென்று வா" என்று கூறினார் கடவுள். வெங்காயம் மண்ணுலகை அடைந்து, "நான் கடவுளைக் கண்டேன், அவர் நீயே ராஜா என்று எனக்குப் பொன்னாடை போர்த்தினார்" என்று கூறியது. அன்று முதல் பொன்னாடை போர்த்திய வெங்காயமே நமக்குத் தகுந்த அரசர் என்று எல்லாக் காய்கறிகளும் சண்டை சச்சரவு இன்றி சந்தோஷமாக வாழ்ந்தன.

– சிவ. மணவழகி, நாகை மாவட்டம்.

பறவைகள் பலவிதம்!






தேன்சிட்டு இரை பிடிப்பது எப்படி?

ஒருவகை தேன்சிட்டுக்கு (sword billed humming Bird) நீண்ட கூரிய அலகு இருப்பதால் பூக்களையும் பூச்சிகளையும் உண்ணுகிறது. மெல்லிய நீண்ட அலகால் பூக்களிலுள்ள தேனை உறிஞ்சிக் குடிக்கும். பறக்கும்போது ஒரு நொடிக்கு 70 முறை இறக்கையை அசைக்கும். இதனால் ஒருவித ஒலி உண்டாகிறது. இந்த ஒலியே பறவை பாடுவது போல் தோன்றுவதால் பாடும் பறவை என்ற பெயர் ஏற்பட்டது. தேன்சிட்டுகளால் பின்னோக்கியும் பறக்க முடியும்'

வானில் தூங்கும் பறவை எது?

ஸ்விஃப்ட் (Swift) என்று அழைக்கப் படும் பறவை சாப்பிடுவது, தூங்குவது, வாழ்க்கை நடத்துவது எல்லாம் வானில் தான்! இப்பறவையின் பின்புற இறக் கைகள் அதிக உயரத்தில்கூட மிக வேகமாகப் பறக்க உதவுகின்றன. காற்றில் பறந்து செல்லும் பூச்சிகளே உணவு. இவற்றின் கால்கள் மிக வும் பலவீன மானவை. எனவே இப் பறவையால் தரை யில் நடப்பதோ, தத் திச் செல்வதோ கடினமான காரியம்.



கிளி பேசுவது ஏன்?

கிளிகள் தாங்கள் கேட்கும் ஒலியை அப்படியே திரும்பி ஒலிக்கின்ற இயல்புடையவை. மனிதர்கள் வீட்டில் வளர்க்கும் போது மீண்டும் மீண்டும் பயிற்சி அளிப்பதால் ஒலியைத் திருப்பிப் பிரதிபலிக்கின்றன. கிளிகள் உண்மையில் பேசுவதில்லை.

பறவைகளுக்கு ஏன் பல வண்ண இறகுகள்?


பெரும்பான்மையான ஆண் பறவைகள் வண்ணமயமான இறகுகளைப் பெற்றுள்ளன. அதே இனப் பெண் பறவைகள் அழகு குறைந்தே காணப்படும். ஆண் பறவைகள், பெண் பறவைகளைக் கவர்வதற்காகவே, இயற்கை, கண் கவரும் வண்ண இறகுகளை அளித்துள்ளது. Raggiana என்ற பறவை தனது அழகிய இறகுகளைக் காட்டி கிளையில் தொங்கி, குதித்துப் பெண் பறவையைக் கவரும்.





ஆந்தை இரவில் வேட்டையாடுவது எப்படி?

ஆந்தை தனது இரையாகிய எலி மற்றும் மூஞ்சுறுகளின் சத்தத்தைக் கொண்டு இரையைப் பிடிக்கிறது. இரு காதுகளிலும் சமஅளவு சத்தம் கேட்கும்படி தலையைச் சுழற்றும். ஒலியை கிரகித்துக் கொண்டு ஆந்தை மிகத் துல்லியமாக இரையைப் பிடித்து விடும்.



மிகப் பெரிய இறக்கைகள் உடைய பறவை எது?

ஆல்பட்ராஸ் பறவையின் இறக்கை மூன்று மீட்டர் நீளம் உடையது. கடற் பறவையான ஆல்பட்ராஸ் கடல் அலைகளுக்கருகில் சென்று பறக்கக் கூடியது.

பெங்குவின்கள் அடைகாப்பது எப்படி?

அரச பெங்குவின்கள் குளிர் மிகுந்த தென் துருவங்களில் வாழ்கின்றன. பெண் பறவை நீரின் நடுவே இருக்கும் பனிக் கட்டிகளின் மீது ஒரே ஒரு முட்டை இடும். முட்டையிட்டவுடன் பெண் பறவையின் வேலை முடிந்து விடுகிறது.

இம் முட்டையை ஆண் பறவை தனது வயிறு மற்றும் பாதங்களில் வைத்து, கதகதப்பை உண்டாக்கி அடை காக்கும். இரண்டு மாதங்கள் அடை காத்த பின் குஞ்சு வெளிவரும். அதுவரை ஆண் பறவை உணவருந்தாது. குஞ்சு பொரிந்தவுடன் தாய் திரும்பி வந்து உணவு ஊட்டும். பறக்கவோ, வேகமாக நடக்கவோ இவற்றால் முடியாது. ஆனால் நன்றாக நீந்தக் கூடிய சக்தி பெங்குவின்களுக்கு உண்டு. ஒரு மீட்டர் உயரம் வரை வளரக் கூடியவை அரச பெங்குவின்கள்.

தண்ணீர் அதிகம் குடிக்கலாமா?



● ஆ. தமிழ்துரைசாமி, பாலசமுத்திரம்.

? எங்கள் வீட்டில் எட்டு மாதத் தம்பிக்கு ஒருநாள் காதில் சீழ் வடிந்தது. மருத்துவம் செய்யாமலேயே அது சரியாகி விட்டது. இதனால் பின்விளைவுகள் ஏற்படுமா?

! தொண்டையில் ஏற்படுகின்ற நோய்த் தொற்று காதுக்குச் செல்வதால்தான் காதில் சீழ் வடிகிறது. இந்த அடிப்படைக் காரணம் சரியாகி விட்டால் காதில் சீழ் வடிவதும் நின்று விடும். ஒருமுறை காதில் சீழ் வடிந்தால் பின்விளைவு எதுவும் ஏற்படாது. அடிக்கடி இது ஏற்படுமானால் செவிட்டுத்தன்மைக்கு அடித்தளம் போடும். ஆகையால் உங்கள் வீட்டுத் தம்பிக்கு இனிமேல் காதில் சீழ் வடியாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

● டி. ஜோஷ்வின், ஐரேனிபுரம்.



? ஒருவர் இறந்து விட்டார் என்பதை உறுதி செய்ய மருத்துவர்கள் நோயாளியின் கண்களைப் பரிசோதனை செய்கிறார்களே, காரணம் என்ன?

! உயிரோடு இருப்பவரின் கண்களில் டார்ச் விளக்கு ஒளியைச் செலுத்தினால் கண்ணின் 'பாப்பா' (PUPIL) சுருங்கும்; ஒளியை நீக்கி விட்டால் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பி விடும். இறந்தவரின் கண்களில் ஒளியைச் செலுத்தினால் பாப்பா இயல்பு அளவுக்கு அதிகமாக விரிந்த நிலையில் இருக்கும்; எவ்வளவு ஒளியைச் செலுத்தினாலும் அது மீண்டும் சுருங்காது. இதுவே மரணத்தின் முக்கியமான அறிகுறி. இதைப் பரிசோதிக்கவே மருத்துவர்கள் நோயாளியின் கண்களில் ஒளியைப் பாய்ச்சிப் பார்க்கிறார்கள்; மரணத்தை உறுதிசெய்கிறார்கள்.

● ப. விஜய் ஆனந்த், கூடன்குளம்.

? தலைவலிக்கும் வாயில்தான் மாத்திரை போடுகிறோம்; மூட்டுவலிக்கும் வாயில்தான் மாத்திரை போடுகிறோம்; எப்படி டாக்டர் வாயில் மாத்திரை போட்டால் உடலிலுள்ள வலிகள் குணமாகின்றன?

! நாம் சாப்பிடும் வலி நிவாரண மாத்திரைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு விதத்தில் வேலை செய்யும். அவ்வளவையும் விவரமாகக் கூற வேண்டுமென்றால் தனியாக ஒரு கட்டுரைதான் எழுத வேண்டும்.

பொதுவாகச் சொல்வதென்றால், நாம் வாயில் போடும் மாத்திரைகள் செரிமாணப் பாதையில் எங்காவது ஓரிடத்தில் கரைந்து ரத்தத்தில் கலந்து விடும். ரத்தம் அந்த மருந்தை உடலெங்கும் எடுத்துச் செல்லும். உடலில் எங்கெல்லாம் வலி உள்ளதோ





அங்கெல்லாம் அந்த மருந்து செயல் புரிந்து வலியைக் குறைக்கும்.

● எம். ரஃபிக் ஜக்காரியா, நன்னிலம்.

? 'டயாலிசிஸ்' (Dialysis) என்பதற்குச் சரியான தமிழ்ப் பெயர் என்ன டாக்டர்?

! ரத்தச் சுத்திகரிப்பு.

● இரா. பார்த்திபன், சேத்துப்பட்டு.

? மஞ்சள் காமாலை நோய்க்கு சிறந்த இயற்கை மருந்து எது?

! கீழாநெல்லி!



● ஐ.கே. செந்தில் முருகன், பாறக்கடை.

? கண் நோயினால் பாதிக் கப்பட்டுள்ளவர்கள் வெல் டிங் வேலை செய்வதால் பிற்காலத்தில் பாதிப்பு ஏற் படுமா?

! பாதிப்பு ஏற்பட அதிக வாய்ப்புகள் உண்டு. வெல்டிங் வேலை செய்யும் போது உண்டாகின்ற அதிகமான ஒளிக்கதிர்கள் கண்களைத் தாக்கும்; இதனால் ஏற்கெனவே கண்ணில் உள்ள பாதிப்பு அதிகமாகி விடும்; கண்ணில் ஏற்படும் வலியில் துவங்கி பார்வை இழப்பு வரை எந்தவித பாதிப்பும் இவர்களுக்கு வரலாம். எச்சரிக்கை அவசியம்.

● ஐ. விஷ்ணு சுபா, சேலம் - 9.

? டாக்டர், காற்றில் பலவித வாயுக்கள் கலந்துள்ளன. அதிலிருந்து நம்மால் எப்படி ஆக்ஸிஜனை மட்டும் பிரித்து சுவாசிக்க முடிகிறது? பிறகு கார்பன்-டை-ஆக்ஸைடை மட்டும் வெளியேற்ற முடிகிறது?

! நீ தவறாகப் புரிந்து கொண்டுள்ளாய், விஷ்ணு சுபா. நாம் காற்றில் கலந்துள்ள வாயுக்கள் எல்லாவற்றையும் தான் சுவாசிக்கிறோம். சுவாசப் பையில் உள்ள ரத்தக் குழாய்கள்தான் அந்த வாயுக்களிலிருந்து ஆக்ஸிஜனை மட்டும் பிரித்து எடுத்துக் கொண்டு மற்ற வாயுக்களை வெளியேற்றி விடுகிறது. அப்போது உடலெங்குமிருந்து கொண்டு வரப்பட்ட கார்பன்-டை-ஆக்ஸைடு சுவாசப் பையில் தேங்கியிருக்கும். அதையும் சேர்த்து வெளிமூச்சில் வெளியேற்றி விடுகிறோம். இந்த வாயுப் பரிமாற்றம் முறையாக நடப்பதற்குக் காற்றில் கலந்துள்ள வாயுக்களின் அளவு மற்றும் ரத்தத்தில் உள்ள 'ஹீமோ குளோபின்' (Haemoglobin) அளவு சரியான அளவில் இருக்க வேண்டும். இந்த விகிதாச்சாரத்தில் வேறுபாடு ஏற்படும் போது வாயு பரிமாற்றத்தில் தடங்கல் ஏற்படும். சுவாசம் பாதிக்கும்.

● எம். திருபன், திருவில்லிபுத்தூர்.

? நான் தினமும் அதிக அளவு தண்ணீர் குடிக்கிறேன். 'தண்ணீர் அதிகம் குடிக்கக் கூடாது! சிறுநீரகம் விரைவில் பாதிக்கப்பட்டு விடும்!' என்கிறான் என் நண்பன். அவன் சொல்வது சரிதானா, டாக்டர்?

! சரியில்லை தம்பி. உன் நண்பன் அப்படியே தலைகீழாகச் சொல்லியிருக்கிறான். அவனிடம் போய்ச் சொல். அதிகமாகத் தண்ணீர் குடிப்பது சிறுநீரகத்திற்கு நல்லது; உடல் கழிவுகள் உடனடியாக வெளியேறுவதற்கு இது உதவும்; சிறுநீரகம் வறட்சியடையாமல் இருப்பதற்கு இது வழி செய்யும்; சிறுநீரகக் கற்கள் உருவாகாமல் இருப்பதற்கும் இது உதவி புரியும். சிறுநீர்க் கடுப்பு வராமல் தவிர்க்க அதிகமாகத் தண்ணீர் குடிப்பதுதான் நல்ல வழி என்று சொல்லி விடு.



— டாக்டர். கு. கணேசன்

மின்கல மாதவன்

4 அப்பாவும் அதிர்ந்தார்!

அடுத்த நாள் அதிகாலையிலேயே மாதவனைத் தேடி வந்து விட்டான் சேது.

"எனக்கு ஓமப்பொடி வேண்டாம்னு சொல்லிட்டேன் இல்லே? மாஞ்சா நூல் கண்டையும் எடுத்துக் கொடுத்தாச்சு... இன்னும் என்னடா?" என்று சிடுசிடுத்தான் மாதவன்.

"அதில்லேடா... நான் வந்தது வேற விஷயம்... காலையிலே செய்தித்தாள் பார்த்தியா?" என்று அடங்கிய குரலில் கேட்டான் சேது.

"இல்லேடா...ஏன் என்ன? காத்தாடிப் பந்தயத்தைப் பற்றிப் போட்டிருக்காங்களா?" என்று ஆவல் நிறைந்தவனாகக் கேட்டான் மாது.

"நீ புத்திசாலிதான். ஆனா சில சமயத்துல வெறும் டியூப் லைட்டா இருக்கேடா" என்று அலுத்துக் கொண்ட சேது, "உங்கம்மா எங்கேடா?" என்று கேட்டான்.

"குளிக்கப் போயிருக்காங்க. ஏன்டா கேட்கறே?"

"இந்தா செய்தியைப் படி" என்று டிராயர் பைக்குள் நான்காக மடித்து வைத்திருந்த செய்தித்தாளை வெளியே எடுத்துக் கொடுத்தான் சேது.

ரேவதி

கசங்கல்களை நீவிச் சரி பண்ணிவிட்டுப் பார்வையை அதில் செலுத்தினான் மாது.

"சைதாப்பேட்டை - கிண்டி ஸ்டேஷன்களுக்கு இடையே புறநகர் ரயிலை நிறுத்திக் கொள்ளையடிக்க முயற்சி! மின் இணைப்பைத் துண்டித்து டிரைவரையும், கார்டையும் கட்டிப் போட்டு திருமணக் கோஷ்டியைக் கொள்ளையிடும் துணிகரம்! கொள்ளையர் எதிர்பாரா



வண்ணம், மின் இணைப்புத் துண்டிக்கப்பட்ட ரயில் தானே படுவேகமாக ஓடி, சைதாப்பேட்டையில் நின்று விட, கொள்ளையர்கள் கூண்டோடு சிக்கினர். லட்சக் கணக்கான மதிப்புள்ள நகைகளைப் பறி

கொடுக்க இருந்த திருமண கோஷ்டி தப்பியது! மின் இணைப்புத் துண்டிக்கப்பட்ட ரயில் தானாகவே ஓடி வந்த மர்மத்தைக் கண்டு அதிகாரிகள்



திகைப்பு! போலீசார் புலன்விசாரணை செய்து வருகிறார்கள்!" என்று செய்திகளைப் படித்தான் மாதவன். அவன் முகத்தில் திகைப்பும் குழப்பமும் நிறைந்தது.

"டேய், உன்னிடம் என்னவோ மந்திரசக்தி இருக்குடா!" என்றான் சேது.

"போலீஸ்காரங்க நம்மைக் கண்டு பிடிச்சுடுவாங்களா?" என்று பீதியுடன் கேட்டான் மாது.

"அவங்களால முடியாது. ஏன்னா செய்தியின் கடைசி பகுதியைப் பார். கொள்ளைக்காரங்க ரயிலை நிறுத்தி, கத்தியைக் காட்டித் தங்களை மிரட்டியதும், தங்கள் குலதெய்வமான ரத்தின நாயகி அம்மனைக் கூவி அழைத்தார்களாம். அந்த அம்மன்தான் பக்தர்களாகிய தங்களைக் காக்க தன் சக்தியால் ரயிலை ஓட வைத்து, சைதாப்பேட்டை ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்து நிறுத்தியதாம். அம்மன் நடந்து போனதைக் தம் கண்களால் பார்த்ததாகவும் திருமண கோஷ்டியின் தலைவர் கூறியிருப்பதாகச் செய்தி போட்டிருக்காங்க. அதனால் விசாரணையின் போக்கு தடம் மாறிப் போச்சு" என்றான் சேது.

"அப்பாடா!" என்று ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டான் மாதவன்.

"நான் வந்த காரணம் வேறடா. இந்த அதிசய நிகழ்ச்சிக்குக் காரணம் நான்தான்னு எங்கேயாவது நண்பர்களிடம் பீத்தி வைக்காதே. இதைச் சொல்லி எச்சரிக்கை பண்ணத்தான் வந்தேன்."

"அம்மா, அப்பாகிட்டக் கூடச் சொல்ல மாட்டேன்டா" என்று கூறி சேதுவை அனுப்பி வைத்தான் மாதவன்.

குளித்து விட்டு வந்த அம்மா, "காலையில வந்த பால் என்ன காரணமோ திரிஞ்சுப் போச்சு. தூக்கை எடுத்துக்கிட்டுப் போய் டிப்போவுல ஒரு லிட்டர் பால் வாங்கிக் கொண்டு வா" என்று பணித்தார். மாது எவர்சில்வர் தூக்கையும், பணத்தையும் எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

பால் 'ஜில்லிப்பு' குறையாமல் இருந்தது. தூக்கில் பாலை வாங்கிக் கொண்டு மாது திரும்பிக் கொண்டிருந்தான்.

எதிரே, அவன் வகுப்பு நண்பர்கள் இருவர் எதிர்ப்பட்டனர். "ஹாய் மாது...! பள்ளிக்கு வரலை?" என்று இருவரும் கேட்க, "கொஞ்சம் தாமதமா வருவேன்" என்று கழன்று கொண்டான் மாது. 'புது பிரச்னையைக் கொண்டு வராதே' என்று அம்மா எச்சரித்திருந்தது மனதில் பசுமையாக இருந்தது.

நண்பர்களிடமிருந்து தப்பி, பால் தூக்குடன் மாது நல்ல பிள்ளையாக நடந்து வந்து கொண்டிருந்தான். 'மளுக்'கென்று ஒரு மெல்லிய சப்தம்! பால் தூக்கிலிருந்துதான் கேட்டது. குனிந்து பார்த்தான். பால் தூக்கின் ஒரு பக்கம், பிடிப்பு விட்டு கம்பி சரிந்து விட்டிருந்தது. பால் கூடக் கொஞ்சம் கீழே சிந்தியிருந்தது.


'தளும்பி'த் தளும்பி சட்டையெல்லாம் பாழாகப் போகிறது?' என்று சலித்துக் கொண்டே பால் தூக்கை இரு கைகளாலும் மார்பில் அணைத்துக் கொண்டு நடந்தான் மாது.

ஐஸ் மாதிரி, பாத்திரத்தின் பக்கமெல்லாம் வியர்த்திருந்த ஜில்லிப்பு மூன்றாவது தெருவுக்குள் மாது நுழைந்தபோது, வெதுவெதுப்பாகியிருந்தது!

மாது இரண்டாவது தெருவுக்குள் நுழைந்தபோது, பாத்திரமே சூடாகிப் போயிருந்தது!

வீட்டுக்குள் நுழைந்தபோது மாதுவால் பால் பாத்திரத்தை அணைத்துப் பிடிக்க முடியவில்லை! அத்தனை சூடு!

"சாரி மாதுக் கண்ணா! இந்தத் தூக்குக்குப் பிடி சரியில்லைன்னு சொல்ல மறந்



"மீன் உண்டால் கண்ணுக்கு நல்லதாம்!"

"உண்ணாவிட்டால்?"

"மீனுக்கு நல்லது!"

— எம். முகமது யாசீர்



''காப்பியடிச்ச பாடலை மன்னர்கிட்ட பாடியது தப்பாப் போச்சா! ஏன்?''
''மன்னர் சன்மானமா கவரிங் பொற்காசுகளைத் தந்துட்டாரே!''
— இரா. அ. தென்றல்நிலவன்

துட்டேன்'' என்று சொல்லிக் கொண்டே தூக்கை வாங்கிய அம்மா, ''ஏன் மாது...! ஜில் பால் தீர்ந்து போச்சா? காய்ச்சின பால் வாங்கிட்டு வந்திருக்கே! காய்ச்சின பாலே விலைக்குக் கிடைக்குதா! எனக்குத் தெரியலே தெரியாதே?'' என்று வியந்தபடி உள்ளே போனார்.

குழப்பமும் பயமும் நிறைந்தவனாக மாது நின்றான்.

அன்று பிற்பகலில் அப்பா வந்து விட்டார். அம்மா மாதுவைப் பற்றிய செய்திகளை; அவன் தொடர்பான பிரச்னைகளை அப்பாவிடம் சொல்லி முடித்தார். மாதுவும் அவைகளைத் தன் கோணத்தில் கூறிவிட்டு, அவரை அழைத்துக் கொண்டு வராமல் பள்ளிக்கு வரக் கூடாது என்று தலைமை ஆசிரியர் உத்தரவிட்டுள்ளதைக் கூறி முடித்தான்.

''இன்றைக்கே பார்த்து விடலாம். நாளைக்குக் காலையில் எனக்கு நேரம் இருக்காது'' என்று சாப்பாடானதும் மாதுவுடன் கிளம்பினார் அப்பா.

அப்பாவை வரவேற்று உட்காரச் சொன்ன தலைமை ஆசிரியர், ''மாதவன், நீ கொஞ்ச நேரம் வெளியே இரு'' என்றார்.

''நான்தான் வந்து விட்டேனே. மாதுவை வகுப்புக்குப் போக அனுமதியுங்களேன்! ஏற்கெனவே ஒருநாள் போய் விட்டதே?'' என்று கேட்டார் அப்பா.

''இல்லை வேண்டாம். வகுப்புக்கு இப்போ வேண்டாம். வெளியே தாழ்வாரத்தில் இருக்கட்டும்'' என்று மாதுவை வெளியே அனுப்பி வைத்தார் தலைமை ஆசிரியர்.

குழப்பமும், கவலையும் நிறைந்தவராகத் தலைமை ஆசிரியரை நோக்கினார் அப்பா.

''நான் இப்படிச் சொல்றதுக்காக என்னை நீங்க பெரிய மனசு பண்ணி மன்னிக்கணும். மாதவன் ரொம்ப நல்ல பையன். ரேங்கில் வருபவன். படிப்பைத் தவிர மற்றவைகளிலும் திறமைசாலி. அவனால பள்ளிக்குப் பெருமை ஏற்படும்னு நம்பிக்கை வைச்சிருக்கேன்...'' தலைமை ஆசிரியர் அடுக்கிக் கொண்டே போனாரே தவிர விஷயத்துக்கு வர முடியாது தவித்தார். அவரைவிட அதிகமாக மாதவனின் அப்பா தவித்தார்.

''சார், நீங்க என்ன சொல்ல நினைக்கிறீங்கன்னு என்னால புரிஞ்சுக்க முடியலை. மாதவனுக்கு என்ன ஆயிடிச்சு? மூளை கிளை குழம்பிப் போய் தாறுமாறா நடக்கிறானா?'' என்று பதட்டத்துடன் கேட்டார் அப்பா.

''சார்! நீங்களே சரியா ஊகிச்சுட்டீங்க. அவனுக்கு என்னமோ ஆயிடிச்சன்னு எல்லோரும் நினைக்கிறோம். அவனிடம் மற்றவர்களுக்கு இல்லாத ஏதோ சக்தி இருக்குன்னு உறுதியா நினைக்கிறோம். இந்த வயதில் அவனுக்கு இப்படி ஒரு சக்தி ஏற்படுவது சாத்தியமே இல்லை. ஏதாவது கெட்ட தேவதை அவனைப் பிடிச்சிருக்குமோன்னு சந்தேகப் படறோம். நேற்றைக்கும் இன்றைக்கும் நிறைய பெற்றோர்கள் என்னைப் பார்க்க வந்தாங்க. எல்லோருமே மாதவனையும் உங்க குடும்பத்தையும் நன்கு தெரிஞ்சவங்க. மாதவனால, தங்களுடைய பசங்களுக்கு ஏதாவது ஆயிடுமோன்னு பயப்படறாங்க.''

அப்பா, திகிலடைந்தவராகத் தலைமை ஆசிரியரை நோக்கினார். தலைமை ஆசிரியர் தொடர்ந்தார்;

''மாதவன் படிக்கும் இந்தப் பள்ளியில் தங்கள் பிள்ளைகள் படிப்பதை அவர்கள் விரும்பவில்லை. நான்தான் சமாதானப் படுத்தி அனுப்பி வைச்சேன்.''



"சார் நீங்க ஒரு பல் டாக்டரா?"

"32 பல்லுக்கும் நான்தான் டாக்டர்."

— எம். முகமது யாசிர்

"நான் இப்போ என்ன பண்ணனும்னு நீங்க எதிர்பார்க்கிறீங்க?" – அப்பாதான் முடிவுக்கு வந்தவராகக் கேட்டார்.

"ஏதோ காத்து கறுப்பு பிடியில மாதவன் சிக்கியிருக்கான்னு எல்லோருமே நம்பறோம். ஏன்... அவனோட நடவடிக்கைகளையும் சில நிகழ்ச்சிகளையும் கவனிக்கும்போது எனக்கேகூட அப்படிப்பட்ட சந்தேகம் இருக்கு. டி.சி. கொடுத்து பள்ளியை விட்டு விலக்க எனக்கு மனசு வரலை. மாதவனை டாக்டர்கிட்ட காமிச்சு சிகிச்சை கொடுங்க. அதோட திறமையான மந்திரவாதி யாரையாவது பிடிச்சு மாதவனைப் பிடிச்சிருக்கும் கெட்ட தேவதையின் பிடியில் இருந்து அவனை மீட்கப் பாருங்க. முழுசா குணமாகும்வரை அவனைப் பள்ளிக்கு அனுப்பாதீங்க. மீறி அனுப்பினீங்கன்னா நான் கடுமையா நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்."

முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்த அப்பாவைப் பார்த்தபோது மாது தவித்துப் போனான். 'என்ன ஆயிற்று இவருக்கு? இப்படி மனமொடியும்படி தலைமை ஆசிரியர் என்ன சொல்லியிருப்பார்?'

"அப்பா, நான் வகுப்புக்குப் போகட்டுமா?" அப்பாவித்தனமாக மாது கேட்டபோது, அப்பா கலங்கிப் போனார்.

"இப்ப வேண்டாம் மாது. அடுத்த வாரம் போகலாம். இப்போ வீட்டுக்குப் போகலாம்" என்று மகனை அழைத்துக் கொண்டு கிளம்பினார் அப்பா.

அம்மா கேட்ட கேள்விகளுக்கு அப்பாவால் சரியான பதிலைக் கூற முடியவில்லை. பள்ளியில் வகுப்பு நேரத்தில் ஓமப்பொடி தின்ற குற்றத்திற்காக இன்னும் சில நாட்கள் வரை மாதுவை விலக்கி வைத்திருப்பதாகக் கூறி வைத்தார். தெரிந்த நண்பர்கள் உதவியோடு மாதுவை பெரிய டாக்டர் ஒருவரிடம் பரிசோதனைக்காக அழைத்துச் செல்ல ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார். அம்மாவுக்கும் மாதுவுக்கும் இதை அவர் சொல்லவில்லை.

இரண்டு நாட்கள் ஓடி விட்டன. சமையலறை பல்பு பழுதாகி பியூசாகியிருந்தது. மாதுவைக் கூப்பிட்டு புது 60 வாட் பல்பை வாங்கி வரச் சொன்ன அப்பா, நாற்காலியைக் கொண்டு வந்து போட்டு, பழைய பல்பை எடுத்தார். "புது பல்பை எடுத்துக் கொடு" என்று மாதுவிடம் கை நீட்டினார்.

புது பல்ப் அட்டையைப் பிரித்து மாது பல்பை எடுத்தான். மாட்ட வைக்கும் பித்தளைப் பகுதியில் அவனுடைய இரு கைகளும் பட்டன. அவ்வளவுதான்! அந்த 60 வாட் பல்பு தானாகவே மாதுவின் கையில் ஒளிர்ந்தது!

அப்பா அதிர்ந்து போனார். மாதுவும் திகைத்துப் போனான். மறுநாள் அப்பாவும் அம்மாவும் மாதுவை அழைத்துக் கொண்டு ஆட்டோவில் கிளம்பினர். அவர்கள் போய் இறங்கிய இடம் ஊருக்கு ஒதுக்குப்புறமான பகுதி; மரங்கள் அடர்ந்த இடம். பெரிய இரும்புக் கதவுக்கு மேல் 'மந்திர மாமணி பைரவமூர்த்தி' என்ற பெயரும், அதற்கு மேல் ஒரு மண்டை ஓடும் இருந்தன.

மாதுவுக்கு எல்லாம் புரிந்து விட்டது. "அப்பா எனக்கு ஒன்றும் இல்லை. என்னை எந்தப் பேயும் பிடிக்கலை" என்று அலறினான்.

"இங்கே வரும் கேஸ் எல்லாமே இப்படித்தான். தனக்குப் பேய் பிடிச்சிருக்குன்னு எந்தப் பேய்தான் சொல்லும்?" என்று பயங்கரத் தோற்றமுடைய காவல்காரர் ஒருவர் சிரித்தபடி கதவுகளைத் திறந்தார். அப்பா உள்ளே போனார். கதவுகள் மூடப்பட்டன.

(வளரும்)

ஹா, ஹா, ஹா!



"வெயிலுக்குத் தாங்காத ஊர் எது?"


" 'நெய்'வேலிதான்!"

— சி. விஜய்குமார்

"எனக்கு ஆற்றைக் கண்டால் பயம்!"

"சேச்சே... எனக்கு இறங்கினாத் தான் பயம்!"

— பொன். குமார்





"எந்தெந்த ஊருக்கு டூர் போனே?"

"குண்'டூர்', மேட்'டூர்'."

— பா. ஜெயக்குமார்

"நான் எடுத்த சினிமாவுக்கு 'லட்டு லட்டு தான்' என்று பேர் வச்சது தப்பாப் போச்சு!"

"என்ன ஆச்சு?"

"தியேட்டர்ல 'ஈ' ஓட்டறாங்க!"

— மா. பானுமதி





"உங்க வீட்டில் எந்தெந்த ஐயிட்டங்கள் ஜாஸ்தி இருக்கு...?"

"கரப்பு.... பல்லி...!"

— இரா. திலீப்

முசுகுந்தர்!

ஆர். பொன்னம்மாள்

இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த மாந்தாதாவின் புதல்வர் முசுகுந்த சக்கரவர்த்தி.

ஒருமுறை தேவேந்திரன் முசுகுந்தரிடம் அசுரர்களை ஜெயிக்க தனக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டார். முசுகுந்தரும் சந்தோஷமாக சம்மதித்தார். பல ஆண்டுகள் கடும் போர் தொடர்ந்தது. இறுதியில் வெற்றி பெற்றவர் முசுகுந்தரே.

இந்திரன் முசுகுந்தரிடம் "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். முசுகுந்தர் "தேகம் முழுவதும் கணுக்கணுவாய் வலிக்கிறது. வெகு களைப்பாய் இருக்கிறது. நிம்மதியாய் உறங்க பூலோகத்தில் ஒரு இடத்தைக் காட்டுங்கள்" என்றார்.

இந்திரன் அடர்ந்த காட்டின் நடுவில் இருந்த ஒரு குகைக்கு அவரை அழைத்துச் சென்றார். "ஆசை தீரத் தூங்குங்கள். உங்கள் உறக்கத்தை எவர் கலைத்தாலும் அவர்கள் எரிந்து சாம்பலாகி விடுவார்கள்" என்று வரமும் கொடுத்துச் சென்றார்.

முசுகுந்தர் வருஷக் கணக்காய் தூங்கினார்.

யவன தேசத்தரசன் காலயவனன். அவன் தந்தையான கார்க்கியர்



சிவனை நோக்கித் தவமிருந்து பெற்ற பிள்ளை. அதனால் தந்தையின் பலமெல்லாம் காலயவனுக்கு வந்திருந்தது.

ஒருமுறை சபைக்கு வந்த நாரத முனிவரிடம், ''என்னைக் காட்டிலும் பலசாலி உண்டோ?'' என்று எகத்தாளமாகக் கேட்டான் காலயவனன்.

நாரதர் "ஏன் இல்லாமல்? ஸ்ரீ கிருஷ்ணர் உன்னை விட பலசாலி" என்றார்.

காலயவனன் பொறாமையும், அகங்காரமும் கொண்டு, சீறினான்.

''அந்தக் கிருஷ்ணன் எங்கிருக்கிறான்? அவனை அழித்து விட்டுத்தான் அரியணையில் அமர்வேன்'' என்று ஆத்திரமடைந்தான்.

"மகத நாட்டரசன் ஜராசந்தன் பதினேழு முறை கிருஷ்ணனிடம் தோற்று காட்டில் ஒளிந்திருக்கிறான். உன்னைப் போலவே சபதமிட்டவன். காரணமில்லாமல் போரிட்டாய் என்ற பழி வராமலிருக்க காட்டிலுள்ள ஜராசந்தனுக்கு உதவுவதாய் பெயர் பண்ணிக் கொள். ஏதோ, என்னாலான யோசனை!'' என்றார் நாரதர்

உடனே ஜராசந்தனைக் காணப் புறப்பட்டான் காலயவனன். ஜராசந்தனைக் கண்டு உளக்க மளித்தான்.

தனது படைகளுக்குத் தலைமை தாங்கச் செய்தான். காலயவனனின் ஆவேசத்தைக் கண்ட கிருஷ்ணர், காலயவனன் கண்ணில் படும்படி தேரிலிருந்து இறங்கி ஓடினார். காரணமற்ற குரோதத்தால் கிருஷ்ணரைத் துரத்திக்கொண்டு ஓடினான் காலயவனன்.

முசுகுந்தர் உறங்கிக் கொண்டிருந்த குகைக்குள் ஒளிந்துகொண்டார் கிருஷ்ணர். அகங்காரத்துடன் உள்ளே நுழைந்த காலயவனன் உறங்கிக் கொண்டிருந்த முசுகுந்தரை உலுக்கினான். திடுக்கிட்டு விழித்தார் முசுகுந்தர்.

எரிந்து சாம்பலானான் காலயவனன். கிருஷ்ணர் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டார். "முசுகுந்தரே! நாடு மன்னனின்றி நெடுங்காலமாய் தவிக்கிறது! பலரும் உங்களை எழுப்பப் பயப்படுகிறார்கள். காலயவனனும் அழிய வேண்டும், நீங்களும் எழ வேண்டும். அதனால்தான் இங்கே ஒளிந்தேன்'' என்றார் கிருஷ்ணர்.


முசுகுந்தர் கண்ணனைப் போற்றி பதரிகாசிரமம் சென்றார்.




பல நாள் திருடன்...

கதை : சுப்பையயன்

படம் : சசி




அளவோடு சாப்பிட்டுக் கிளம்பணும்.
சீக்கிரம் போ. நெய் வாசனை மூக்கைத் துளைக்குது.
இரண்டும் கடைக்குள் நுழைந்து பரணில் ஏறி அமர்ந்தன.
நிறைய சாப்பிடாதே! கண்டு பிடிச்சிடு வாங்க.
நீ கவலைப் படாதே! நான் பார்த்துக்கிறேன்.
வா, கிளம்பலாம்.
லட்டு பிரமாதம்.
நான் வரலை.
என்ன சொல்றே?
இந்த மாதிரி இடத்தை விட்டு யாராவது வரு வாங்களா?
நீ மாட்டிக்கப் போறே!
பரண்ல நிறைய இடம் இருக்கு. இந்தப் பலகாரங்களுக்காக எந்தக் கஷ்டத்தையும் தாங்கிக்கலாம்.
உன் விருப்பம். வரேன்.
நாட்கள் சென்றன. ஒரு நாள் —
பிங்கி ரொம்ப குண்டாயிட்டே.
கண் வைத்து விடாதே!
நீ நினைத்தால் கூட இந்த ஜன்னல் வழியா வெளியே போக முடியாது.
நான் ஏன் போகப் போறேன்?


அப்போது –
தினமும் பலகாரம் குறையுதே! எப்படி?
பரண்ல ஏறிப் பார்க்கிறேன்.
ஐயோ! புலி ஒண்ணு படுத்திருக்கு.
புலியா? உளறாதே! அந்தக் கம்பை எடு.
எனக்கு பயமாயிருக்கு!
பரணில் ஏறிய கடைக்காரர் குச்சியால் தட்டினார்.
மியாவ்... மியாவ்...
சிங்கி ஜன்னல் வழியே ஓடி தப்பியது.
டேய் புலி இல்லை பூனை. பலகாரங்களைத் தின்னு கொழுத்துப் போயிருக்கு!
இந்தப் பக்கம் வராதபடி நாலு போடுங்க.
ஐயோ! உயிரே போயிடும் போலிருக்கே!

கோகுலம் க்விஸ்




1. உலகிலேயே மிகப் பெரிய பாம்பு ------
2. பைபிளில் அதிகம் இடம் பெற்றுள்ள நதி ------
3. சமீபத்தில் நோபல் பரிசு பெற்ற இந்தியர் ------
4. டீசல் எஞ்சினைக் கண்டு பிடித்தவர் ------
5. பைசா நகர சாய்ந்த கோபுரம் ------ நாட்டில் உள்ளது.
6. சூரியனுக்கு மிக அருகில் உள்ள கோள்கள் ------, ------
7. புகழ் பெற்ற ஸ்பிங்ஸ் சிலை ------ உள்ளது.
8. ------ நாட்டில் மிக நீளமான தேசிய கீதம் பாடப்படுகிறது.
9. எலுமிச்சையில் வைட்டமின் ------ உள்ளது.
10. கிரிக்கெட் போட்டியில் ------ சென்ற உலகக் கோப்பையை வென்றது.

இங்கு பத்து கேள்விகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பத்து கேள்விகளுக்கும் சரியான பதில்களைக் கண்டுபிடித்து எழுதி, முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்ப வேண்டும். அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியையும் கண்டிப்பாகத் தரவேண்டும். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்கு பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. **முடிவு தேதி 28.2.99.**

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97.

கண்ணாடி காட்டிய ரகசியம்!



காட்சி 1

இடம்: சேகர் வீடு

(சேகர் இரைந்து புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறான்)

சேகர்: ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி மாதம் இருபத்தெட்டாம்தேதி மனிதகுலம் பெருமைப்பட வேண்டிய பொன்னாள். ஏனெனில் அன்றுதான் உலகப் புகழ்பெற்ற நோபல் பரிசு பெறுவதற்குக் காரணமாயிருந்த 'ராமன் விளைவு' எனக் கூறப்படும் ஒளிச்சிதறல் பற்றிய புதிய உண்மைகளை இந்திய விஞ்ஞானி சர்.சி.வி. ராமன் அவர்கள் 1928–ல் உலகிற்குத் தெரிவித்தார். (படிப்பதை நிறுத்திவிட்டு) கவிதாக்கா! இங்கே வாயேன்! (மறுபடியும் படிக்கிறான்) இதனால் ஒவ்வோர் ஆண்டிலும் பிப்ரவரி இருபத்தெட்டாம் நாளினை தேசிய அறிவியல் நாளாகக் கொண்டாடுகிறோம். (படிப்பதை நிறுத்திவிட்டு) கவிதா! ஏ! கவிதாக்கா! சீக்கிரம் இங்கே வா! (மறுபடியும் படிக்கிறான்) முப்பட்டகக் கண்ணாடியினால் ஒளியைப் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொண்டு பல உண்மைகளைக் கண்டுபிடித்தவரும் சர் சி.வி. ராமனே ஆவார். (படிப்பதை நிறுத்திவிட்டு) ஏ! கவிதா! கூப்பிடறது காதுல விழலே?...ஏய்! எனக்குப் பின்னாலேயே நின்னுக்கிட்டு பதில் குரல் கொடுக்காம இருக்கியா?

கவிதா: விஞ்ஞான மேதை சர் சி.வி. ராமனைப் பத்தி பாடம் படிச்சுக்கிட்டிருக்கே! நடுநடுவிலே ஜன்னல் வழியா வெளியிலே கவனிக்கறே!... அப்புறம் என்னைக் கூப்பிடறே! ஆக படிப்பிலே முழுக் கவனம் இல்லே... இதான் நீ படிக்கற அழகா?

சேகர்: கவிதாக்கா... அங்கே பாரேன் அவங்களை!

கவிதா: என்ன அங்கே? பக்கத்து வீட்டு லதாவும், வேணுவும் எதிர்வீட்டு ஜானாவும் பாலுவும் எங்கேயோ புறப்பட்டுக்கிட்டிருக்காங்க! இப்ப அங்கே என்ன பார்வை?

சேகர்: அக்கா அவங்க எங்கேயோ போகலே, எல்லாரும் சுற்றுலா பொருட்காட்சிக்குத்தான் போறாங்க! எனக்கு நல்லா தெரியும்.

கவிதா: சரி, போயிட்டுப் போறாங்க, அதுக்கென்ன?

சேகர்: அவங்களோடு நாமும் போகலாங்க்கா!

கவிதா: நாம மெதுவா போய்க்கலாம். இப்போ பாடத்தைப் படி!

சேகர்: ஏற்கெனவே சுற்றுலா பொருட்காட்சி வந்து ரெண்டு மாசமாச்சு! நாம பாக்கப்போற அன்னிக்கு கடை

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்



களெல்லாம் காலியாகி, வெறும் கிரவுண்டு தான் இருக்கப் போறது.

அம்மா: (உள்ளிருந்து வந்து) என்ன அக்காக்கும் தம்பிக்கும் வாக்குவாதம்?

கவிதா: இவனுக்கு உடனே சுற்றுலா பொருட்காட்சி போகணுமாம்!

அம்மா: சரி, சண்டைபோடாம ஜாக்கிரதையா போயிட்டு வாங்க!... இருங்க பணம் தரேன்!

காட்சி 2

இடம்: கண்காட்சி சாலை


கடைக்காரர்: வாங்க! குழந்தைகளா வாங்க! இந்தக் கண்காட்சியிலே தேசிய அறிவியல் நாளுக்காக, பலவிதமான போட்டிகள் வச்சிருக்காங்க! இந்தப் போட்டிகளுக்கு நுழைவுக் கட்டணம் கிடையாது. ஜெயிக்கறவங்களுக்கு பிரபல விஞ்ஞானிகள் எழுதின புத்தகங்கள் பரிசா கிடைக்கும். எந்தப் போட்டியிலேயும் ஒருவர் ஒருமுறைதான் கலந்துக்கணும்.

கவிதா: இது என்ன போட்டி?

கடைக்காரர்: நல்லா கவனிங்க! இங்கே நாற்பது மெழுகுவர்த்திகளை நாலு வரிசையா வச்சிருக்கோம். ஒரே ஒரு தீக்குச்சியை மட்டும் ஏத்தி, இந்த நாற்பது மெழுகு வர்த்திகளையும் யார் கொளுத்தறாங்களோ அவங்களுக்குத்தான் பரிசு! என்ன கலந்துக்கத் தயாரா?

வேணு: என்னால முடியாது... சேகர் நீ கலந்துக்க!

"செருப்பு கடிக்குதுன்னு சொல்றியே, செருப்புக்கு ஏது வாய்?"
"இது ஹ'வாய்' செருப்பாச்சே!"
— கே. சுதர்சன்



கடைக்காரர்: ம்! சபாஷ்! வா தம்பி! இந்தா தீப்பெட்டி!

கவிதா: டேய் பொறுமையா கொளுத்துடா!

லதா: சேகர், சீக்கிரம்! தீக்குச்சி ஆகிடப் போடறது. இன்னும் இருபது மெழுகு வர்த்திக்குமேல இருக்கு!

சேகர்: வேணு, அதோ பாருடா, குட்டி யானை மேல குரங்குக்குட்டி ஒண்ணு ஜம்முன்னு உட்கார்ந்துகிட்டு வரது!

கவிதா: சேகர், குட்டியானையை அப்புறம் பார்த்துக்கலாம். இப்போ முழுக் கவனத்தோடு மெழுகுவர்த்திகளை ஏத்து! ம்... சீக்கிரம்!

வேணு: போச்சுடா!.... தீக்குச்சி எரிஞ்சு போயாச்சு...

கவிதா: என்ன சேகர் நீ? இருபது கூட கொளுத்தலே!

சேகர்: நீ மட்டும் கொளுத்திடுவியோ?... யாராலேயும் முடியாது!

கடைக்காரர்: தங்கச்சி, நீயும் கொளுத்தித்தான் பாரேன். இந்தா தீப்பெட்டி!

லதா: பாலு! கவிதாக்காவைப் பாரு! எப்படி குச்சியைப் பிடிச்சுக்கிட்டு 'மடமட'ன்னு மெழுகு வர்த்திகளை ஏத்திக்கிட்டுப்போறா!... கவிதா... இன்னும் பத்து தான் இருக்கு. பார்த்து ஏத்து!

கடைக்காரர்: சபாஷ் தங்கச்சி! கண்காட்சி ஆரம்பிச்ச நாள்லேயிருந்து இந்த நாற்பது மெழுகுவர்த்திகளையும் ஏத்தி ஜெயிச்ச முதல் ஆளு நீதான். எல்லாரும் தங்கச்சிக்குக் கை தட்டுங்க!... பிப்ரவரி மாதம் இருபத்தெட்டாம்நாள் தேசிய அறிவியல் நாள் விழா நடக்கப்போறது. அன்னிக்கு உனக்குப் பரிசு கிடைக்கும். இந்தப் புத்தகத்துலே உன் பெயர் விலாசத்தை தெளிவா எழுதிட்டுப் போ!

லதா: கவிதா உன்னால மட்டும் எப்படி ஒரு மெழுகுவர்த்திகூட விடாம ஏத்த முடிஞ்சது? நேத்து நான் வந்திருந்தப்போகூட, இருபத்தைஞ்சு வர்த்திகள்தான் ஏத்தினேன்!

சேகர்: ஆமாங்க்கா, நீ எப்படி ஏத்தினே?

கவிதா: அது ஒரு ரகசியம்!

சேகர்: ரகசியமா?

கவிதா: ஆமாம்! அது ஒரு கண்ணாடி காட்டிய ரகசியம்!

வேணு: அப்படீன்னா?

கவிதா: நாளைக்கு வீட்டுக்கு வாங்க சொல்றேன். அடடே! இந்தக் கடையிலே



கூட ஒரு போட்டி. வச்சிருக்காங்க, வாங்க! ஏ! ஜானா, பாலு, நீங்க இங்கே வந்துட்டீங்களா?

ஜானா: ஆமாம்! இங்கேயும் ஒரு சுவையான போட்டி! அதோ இருக்கே பிளாஸ்டிக் பக்கெட், அந்தப் பக்கெட்டுக்குள்ளே இந்தப் பந்தை இந்த இடத்திலேயிருந்து வீசணும். பக்கெட் உள்ளே பந்து விழுந்தா நமக்குப் பரிசு... ம்...நானும் பாலுவும் போட்டுப் பார்த்தாச்சு... விழலே!

பாலு: நீங்க முயற்சி பண்ணுங்க, நாங்க அடுத்த கடைக்குப் போறோம்!

சேகர்: அக்கா, இந்தப் போட்டியிலே நான் நிச்சயம் ஜெயிச்சுடுவேன்! ஐயா! பந்தை இப்படிக் கொடுங்க!

கவிதா: சேகர், ஒருமுறைதான் போட முடியும். பார்த்துப் போடு.

சேகர்: அச்சச்சோ...

கவிதா: நீ பந்தைப் போடும்போதே சரியா போடப் போறதில்லேன்னு தெரியுமே!

சேகர்: எப்படித் தெரியும்?

கவிதா: பந்தைப் பக்கெட்டுலே போடறபோது, பக்கத்துப் பொந்திலே ஒரு பெருச்சாளி நுழையறதை பார்த்துக்கிட்டே போட்டே இல்லே?

சேகர்: ஆமாம்...உனக்கு என்ன கண்ணு!

கவிதா: அதனாலதான் குறிதவறிப் போச்சு!

கடைக்காரர்: நீ போட்டுப்பாரும்மா!

லதா: ஹேய் பார்த்து...பார்த்து... சபாஷ்! கவிதா கரெக்ட்டா போட்டுட்டா!

கடைக்காரர்: வாழ்த்துகள் கவிதா! இந்த நோட்புக்லே விலாசத்தை எழுதிட்டுப்போ!

சேகர்: நீ எப்படிக்கா அவ்வளவு கரெக்ட்டா போட்டே? ஒரு வேளை... ஃப்ளுக்கா?

கவிதா: ஃப்ளுக்கும் இல்லே, களுக்குமில்லை... அதுதான் கண்ணாடி... காட்டிய ரகசியம்!

லதா: அது என்ன ரகசியம்? சொல்லேன்!


கவிதா: நாளைக்கு வீட்டுக்கு வாங்க... விளக்கமா சொல்றேன்.

பாலு: டேய் சேகர் வாடா, இங்கேயும் உங்களுக்காக ஒரு நல்ல போட்டி!

கவிதா: இங்கே என்ன போட்டி?

பாலு: ஒரு மேஜைமேல இருபத்தைந்து விதமான பொருள்கள் வச்சிருக்காங்க... இதுலே விஞ்ஞான சம்பந்தப்பட்ட பொருள்களும் இருக்கு... முதல்லே நாம ரெண்டு நிமிஷ நேரத்துலே இதையெல்லாம் நல்லா பார்த்துக்கணும்... உடனே பக்கத்து அறைக்குப்போய் அந்த இருபத்தைந்து பொருட்களின் பெயர்களையும் ஒரே நிமிஷத்துலே எழுதிக் கொடுத்துடணும்!

சேகர்: இவ்வளவுதானா... ஒருகை பார்த்துடலாம், வா அக்கா!



''கர்ணனுக்குப் பிடிச்ச ஊர் எது?''
'' கொடைக்'கானல்தான்!''
– ஆர். மணிகண்டன்

காட்சி 3

இடம்: சேகர் வீடு

சேகர்: கவிதா! ரொம்ப நேரமா எதையோ தேடிக்கிட்டிருக்கியே, எதை?

கவிதா: ஒரு கண்ணாடியைத்தான் தேடிக்கிட்டிருக்கேன்!

சேகர்: கண்ணாடியா?

கவிதா: ஆமாம்! நேத்து நடந்த எல்லாப் போட்டியிலேயும் நான் ஜெயிச்சதுக்குக் காரணம், கண்ணாடி காட்டின ரகசியம்னு சொன்னேன் இல்லே? அது என்னன்னு சொல்லத்தான் இப்ப கண்ணாடியைத் தேடிக்கிட்டிருக்கேன். இதோ அந்தக் கண்ணாடி கிடைச்சுட்டுது!

லதா: கவிதா! நான், வேணு, பாலு, ஜானா எல்லாரும் வந்தாச்சு! நீ ரகசியத்தைச் சொல்லலாம்.

கவிதா: எல்லாரும் என்கூட மொட்டை மாடிக்கு வாங்க! ஜானா, இது என்னன்னு சொல்லு பார்க்கலாம்.

ஜானா: இது குவி ஆடி! பூதக் கண்ணாடின்னும் சொல்வாங்க!

கவிதா: இப்போ இந்தக் குவி ஆடிமேல சூரிய வெளிச்சம் படும்படியா பிடிச்சுக் கிட்டிருக்கேன். இந்தக் கண்ணாடிக்கு அடிப் பகுதியிலே தரையிலே இந்தத் துண்டுக் காகிதத்தை வைக்கிறேன். இப்ப என்ன நடக்கறதுன்னு பாருங்க!

லதா: கண்ணாடிக்கு அடியில் காகிதத்து மேல சூரிய வெளிச்சம் ஒரு புள்ளி மாதிரி பளிச்சுன்னு தெரியறது!

வேணு: இப்ப வெளிச்சம் பட்ட இடத்திலே காகிதம் லேசா கருக ஆரம்பிச்சிருக்கு.

பாலு: ஐய்யய்யோ, இப்ப காகிதமே எரியறது...

கவிதா: இதுதான் கண்ணாடி எனக்குக் காட்டிய ரகசியம்!

ஜானா: என்ன... புரியலையே!

கவிதா: இதோ பாருங்க! சூரிய வெளிச்சத்துலே இதே காகிதம் இங்கே இருந்தபோது எரியலே... ஆனா சூரிய ஒளிக் கிரணங்கள் இந்தக் குவி ஆடி வழியா கீழே இருந்த காகிதம் மேல பட்டதும், சூடு அதிகமாகி காகிதமே எரிய ஆரம்பிச்சுட்டது.

லதா: இது எப்படி?

கவிதா: இந்தக் கண்ணாடி, மேல் பக்கத்துலே சூரிய கிரணங்களை வாங்கி, கீழ்ப்பக்கத்துலே ஒரே புள்ளியிலே எல்லா கிரணங்களையும் குவிச்சிருக்கு!... அதனால உஷ்ண அளவும் குவிஞ்சு, பல மடங்காகி காகிதத்தை எரிச்சிருக்கு.

வேணு: இதுக்கும் நீ ஜெயிச்சதுக்கும் என்ன சம்பந்தம்?

கவிதா: இதே மாதிரிதான் நம்ம மனசும்! நம்ம மனசை பலவிதமா அலையவிடாம, நாம செய்யற வேலையிலே மட்டும் நம் முழுக் கவனத்தையும் செலுத்தினா, எந்த வேலையையும் சுலபமா, வெற்றிகரமா முடிச்சுடலாம். நானும் இந்தக் குவி ஆடி மாதிரி மனசை ஒருமுகப்படுத்தி எல்லா போட்டியிலேயும் கலந்துக்கிட்டேன்... வெற்றியும் கிடைச்சது.


சேகர்: அப்படீன்னா மெழுகுவர்த்தி ஏத்தற போட்டி நடுவிலே யானைமேல என் கவனம் போனதுதான் நான் தோற்கக் காரணமா?

கவிதா: ஆமாம்! ரெண்டாவது போட்டியிலே பெருச்சாளி மேல உன் கவனம் போயிட்டுது... மூணாவது போட்டியிலே நடனம் ஆடிக்கிட்டிருந்த பொம்மையை ரொம்ப நேரமா பார்த்து ரசிச்சுக்கிட்டிருந்தே... அதனால மத்த பொருட்கள் உன் மனசுலே சரியா பதியலே! பத்து பொருள்களோட பேர்களைத்தான் உன்னால எழுத முடிஞ்சது. பரீட்சைக்காக நாம பாடங்களைப் படிக்கறபோதும் தேர்வு எழுதறபோதும் இந்த உண்மையைக் கவனத்துலே வச்சுக்கறது நல்லது... கண்ணாடி காட்டிய ரகசியம் என்னன்னு இப்போ உங்களுக்குப் புரிஞ்சு போச்சா?

சேகர்: புரிஞ்சு போகல்லே... அழுத்தமா மனசுலே பதிஞ்சே போச்சு!

கோகுலம்

சந்தா செலுத்துங்கள்!



கோகுலம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பருக்கு பரிசளிக்க வேண்டுமா? அப்படியானால் சந்தா செலுத்தலாமே? ஒவ்வொரு மாதமும் உங்களைத் தேடி வீட்டுக்கே வரும் கோகுலம்!

இந்த சந்தாப் படிவத்தைப் பூர்த்தி செய்து உடனே அனுப்பி வையுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....


ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை **'Gokulam Tamil'** *என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :*

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



அரபு நாடுகள்

ஒருங்கிணைந்த அரபு நாடுகள் (UAE) பற்றி அறிந்திருப்பீர்கள். அவை எவை யென தெரியுமா? அபுதாபி, துபாய், சார்ஜா, அஜ்மான், புஜைரா, ரஸ் அல் கைமா மற்றும் உம் அல் குவெய்ன் ஆகியவையே.



இவைகளை 'ட்ரூசியல் ஸ்டேட்ஸ்' என்றும் அழைப்பார்கள்.

– இரா. கமலக்கண்ணன்,
நாமகிரிப்பேட்டை.

வித்தியாசமான கொடி!


பராகுவே நாட்டின் கொடியில்



இரண்டு பக்கங்களும் மற்ற நாட்டுக் கொடிகளைப் போல் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அதன் ஒரு பக்கம் கருவூல முத்திரையும் மறுபக்கம் ஆயுத இலச்சினையும் காணப்படும்.

ஆதாரம்: பொது அறிவுப் புதையல்

நெ. இராமன்,
சென்னை – 74.



எஸ்கிமோக்களின் பனிச் சறுக்கு வண்டியை இழுக்க உதவுபவை 'ஹஸ்கி' நாய்கள். அவை 2 அடி உயரமும் மூன்றரை அடி நீளமும் இருக்கும். கடுங் குளிரைத் தாங்கும் விதத்தில் அதன் சருமம் அமைந்துள்ளது. கனத்த ரோமம் மூடியிருக்கும். கடின உழைப்புக்கேற்ப இவற்றின் உடல் அமைப்பு உள்ளது.

ஆதாரம்: அதிசய உண்மைகள்
பி. ராஜசேகரன்

அடைகாக்கும் மீன்

குழாய் மீன்கள் என ஒருவகை மீன்கள் உள்ளன. இதனை ஆங்கிலத்தில் 'பைப்பிஷ்' என்று கூறுவர்.

இவற்றில் அப்பா மீன்கள், அம்மா

உருவானது எப்படி?



மீன்கள் இடும் முட்டையை வயிற்றில் வைத்துக் கொண்டு அடை காக்கின்றன. 17 நாட்கள் முதல் 27 நாட்கள் வரை அடைகாத்த பின் மீன் குஞ்சுகள் வெளிவருகின்றன.


பயணக் கட்டணம்

பண்டைய எகிப்தில் இறந்தவர்களை புதைக்கும் போது அவர்கள் கையில் தங்கம், வெள்ளி வெண்கல நாணயங்களை வைத்துப் புதைத்தனர். வேறு உலகம் செல்ல பயணக் கட்டணத்திற்கென இவ்வாறு செய்தனர்!

– டி. பாலகிருஷ்ணன்,
செம்பனார் கோயில்.

முதல் பலூன்!

சமையலறைத் தீ எழுந்து புறப்படுகையில் அதில் பறந்து திரியும் துகள்களே காற்றில் பறக்கும் பலூனைக் கண்டறிய உதவின. முதல் பலூனை வடிவமைத்தவர்கள் மாண்ட்கோல்ஃபியர் சகோதரர்கள்.



ஆதாரம்: பொது அறிவு வினாவிடை
நெ. இராமன்

பெரிய Zoo




உலகின் மிகப்பெரிய மிருகக்காட்சி சாலை தென்னாப்பிரிக்காவில் 'டிரான்ஸ்வால்' என்னும் இடத்தில் அமைந்துள்ளது. இதன் பெயர் 'க்ருகர் நேஷனல் பார்க்!' இது 12416 சதுர கிலோ மீட்டர் கொண்ட ஒரு தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 1000 யானைகளும், 250 ஒட்டகங்களும், 600 காட்டெருமைகளும், 500 சிங்கங்களும் இருக்கின்றன. மேலும் பல வகைப்பட்ட 20000 பிராணிகளும் இருக்கின்றன. இந்த மிருகக் காட்சி சாலையைச் சுற்றி 448 கி.மீ. நீளத்திற்கு மோட்டார்கள் போகக்கூடிய அகலமான பாதை போடப்பட்டிருக்கிறது!

ஆதாரம்: 'உலகப்புகழ்பெற்ற அதிசயங்கள்' என்ற நூல்
எல். கோபாலகிருஷ்ணன்

விநோத வண்ணத்துப் பூச்சிகள்

சீனாவில் காணப்படும் ஒரு வகை



விசித்திர வண்ணத்துப் பூச்சியின் பெயர் 'பூகோள வண்ணத்துப் பூச்சி' என்பதாகும். அதன் இரு பக்கங்களிலும் உள்ள சிறகுகளில் பூமியில் உள்ள எல்லாப் பரப்புகளும் சமுத்திரங்களும் தெளிவாகக் காணப்படுகின்றன.

ஸ்காட்லாந்து நாட்டில் ஒரு வகை விசித்திர வண்ணத்துப் பூச்சியின் இரு சிறகுகளிலும் நல்ல ஒளிமிகுந்த மஞ்சள் நிறத்தில் சிலுவைக் குறி தெரிகிறதாம்.

அவை சிறகுகளை அடித்துக் கொண்டு பறக்கும் போதெல்லாம் சூரிய ஒளிபட்டு அச்சிலுவை அடையாளம் மிகத் தெளிவாகத் தெரியுமாம்! அந்நாட்டு மக்கள் சிலுவைக் குறியுள்ள இச்சிறகுகளைக் கண்ணாடிப் புட்டியினுள் வைத்து புனிதப் பொருளாகப் பாதுகாக்கின்றனர்.

கோஸ்டாரிகாவில் காணப்படும் வண்ணத்துப்பூச்சியின் பெயர் 'நம்பர் வண்ணத்துப் பூச்சிகள்'. அதன் ஒவ்வொரு பக்கத்திலுமுள்ள இரண்டாவது இரட்டைச் சிறகின் அடிப்பாகத்தில் '89' என்ற இலக்கம் தெளிவாக இடம் பெற்றுள்ளதாம்! இதனாலேயே இவற்றை 'நம்பர் வண்ணத்துப் பூச்சிகள் என்கின்றனர்.

சிறுவன் விரும்பியபடி....

ஜான் டன்லப் என்பவர் ஸ்காட்



லாந்துக்காரர். இவர் ஒரு கால்நடை மருத்துவர். இவருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் தனது மூன்று சக்கர சைக்கிளில் தெருவில் போகும் போது அடிக்கடி சக்கரம் சேதமடைவதைக் கண்டான். தன் தந்தையிடம் தனக்குச் சேதமடையாமல் இருக்கும்படியான சக்கரம் செய்து தரும்படி கேட்டான். அதன்படி டன்லப் உருவாக்கியதுதான் டயரும், வால்வு பொருத்தப்பட்டு காற்றடைத்த டியூபும்.

பிராணிகளின் குரல் இசை!



அமெரிக்காவில் பிரபலமான ஒரு இசைத் தட்டின் பெயர் 'ஜங்கிள் பெல்ஸ்' என்பது.

ஐந்து நாய்களும், ஒரு பூனையும், இரண்டு ஆடுகளும் சேர்ந்து குரல் கொடுத்துள்ள இந்த இசைத்தட்டில் மனிதக் குரல்களே கிடையாது.

இது வரை சுமார் நாலரை லட்சம் 'ஜங்கிள் பெல்ஸ்' இசைத் தட்டுகள் விற்பனையாகியுள்ளன.

தகவல்: ஆர். ஆர். பூபதி

உளவாளிக் கற்சட்டி!

புதிதாகக் குடி வந்தவள் பார்வதி. எதிர் வீட்டுக் கனகத்தைச் சினேகம் பிடித்துக் கொண்டாள்.

ஒருநாள் காலை தாமிரபரணிக்குப் புறப்படுமுன் தோழியிடம், "கனகம், என் கணவர் வந்தால் இந்தச் சாவியைக் கொடுத்து விடு; நான் ஆற்றுக்குப் போய் வருகிறேன்" என்று வீட்டுச் சாவியைக் கொடுத்து விட்டுச் சென்றாள்.

கொஞ்ச தூரம் சென்றவுடன், "அடடா... பிண்ணாக்கு எடுத்து வரவில்லையே" என்று திரும்பி வந்தாள்.

வாசலில் பூட்டைக் காணோம்! தள்ளிப் பார்த்தாள். திறந்து கொண்டது. பூனையைப் போல் சத்தமிடாது உள்ளே நுழைந்தாள். ஆனால் அவளுக்கு அங்கே திகைப்பு காத்திருந்தது.

கனகம் மடி நிறைய அரிசி, பருப்பு வகைகளை எடுத்துக் கட்டிக் கொண்டிருந்தாள். பிறையில் உள்ள பிண்ணாக்குக் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு சத்தமிடாமல் வெளியே வந்து விட்டாள் பார்வதி. உள்ளே வைத்துப் பூட்டி விட்டால் என்ன செய்வது?

ஆற்றில் துணி துவைத்து நீராடித் திரும்பினாள். கனகம் சாவியைக் கொடுத்து விட்டு, "உன் கணவர் வரவில்லை" என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

மதியமாயிற்று. பார்வதியிடம் ஒரு பழைய கறுப்பு நிறக் கற்சட்டி ஒன்று இருந்தது. அதில்தான் அவள் குழம்பு வைப்பாள். பார்வதி சாப்பிடும் போது கனகம் வந்தாள்.

"இப்போதுதான் சாப்பிடுகிறாயா? என்ன சமையல்?" என்று கேட்டாள்.

பார்வதி, அதற்குப் பதில் சொல்லாமல் அடிக்குரலில், "சும்மா இரு, சும்மா இரு, சரி, சரி" என்றாள் பல்லைக் கடித்தபடி.

கனகத்துக்கு ஒன்றும் புரியவில்லை! சுற்றுமுற்றும் பார்த்தாள். 'இங்கே நம்மைத் தவிர யாரும் இல்லையே' என்று தயங்கினாள். "யாரிடம் பேசுகிறாய் பார்வதி?" என்று கேட்டாள்.

பார்வதியோ, "உன்னோடு பெரும் தொல்லையாய் போயிற்று! ஊர் ஊராய் வம்பிழுக்கிறாய் நீ! எடுத்தால் எடுத்து விட்டுப் போகட்டும். வாயை மூடிக் கொண்டிரு" என்றாள் தன் போக்கில்.

சினேகிதிக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ என்று நினைத்தாள். 'காலையில் ஆற்றிலிருந்து திரும்பும் போது நன்றாகத்தானே இருந்தாள்' என்று கலங்கினாள்.

"வா கனகம்! எனது சித்தம் குழம்பி விட்டதோ என்று பயப்படுகிறாயா? அப்படி ஒன்றுமில்லை! இந்தச் சட்டியோடுதான் பேசுகிறேன்" என்று கற்சட்டியைச் சுட்டிக்காட்டினாள் பார்வதி.


"சட்டியோடா?" என்று கனகம் திகைக்க,

"ஆமாம்! நேபாளம் போயிருந்த சமயம் ஒரு சாமியாரிடமிருந்து ஆயிரம் ரூபாய்க்கு இதை வாங்கினேன்."

"என்ன, இந்தக் கற்சட்டிக்கு ஆயிரம் ரூபாயா?" என்று கனகம் குறுக்கிட்டாள்.

"பொறுமையாய்க் கேள்! இது சாதாரணச் சட்டியில்லை! துப்பு சொல்லும் கற்சட்டி. காவலாளி கூட அசந்து விடுவான். இது அசரவே அசராது. இதற்குத் தெரியாமல் ஒரு துரும்பைக் கூட வீட்டிலிருந்து எடுத்து விட முடியாது. என் கணவர் சமையல் வேலைக்காக வெளியூர் போய் விடுவதால் எனக்கு

மாலதி



''உன் பையனுக்கு 'திண்டிவனம்'னு பேர் வச்சிருக்கியாமே?''
''ஆமாம்! 'திருப்பதி, சிதம்பரம்'னு பேர் வைப்பதில்லையா?''
— ஆர். பிரகாசம்

உதவியாக இருக்கும் என்று வாங்கி வந்தேன். ஆனால் இதோடு பெரிய தொல்லையாகப் போய் விட்டது. சண்டைக்காரக் குழந்தை மாதிரி வம்பு வளர்த்தே என்னைப் பெட்டி தூக்க வைக்கிறது" என்று அலுத்துக் கொண்டாள் பார்வதி.

"அப்படியா! ஆச்சர்யமாயிருக்கிறதே! அப்படி என்ன செய்தது?" என்று ஆர்வமாகக் கேட்டாள் கனகம்.

"என் தோழி ஒருத்தி தையல் வேலை செய்கிறாள். என் தங்கை, குழந்தைகளுக்கு கவுன் தைக்க அவள் சொன்ன அளவுப்படி துணி வாங்கிக் கொடுத்தேன். அதிலிருந்து துணி திருடி விட்டாள். இன்ன இடத்தில் வைத்திருக்கிறாள் என்று சொல்லியது."

"மனித மனம் குரங்காயிற்றே! சும்மா இருப்பேனென்கிறதா? கேட்டுத் தொலைத்தேன். 'பிசாசுத் துணி' என்று முகத்தில் விட்டெறிந்து நட்பை முறித்துக் கொண்டு விட்டாள்."

கனகம், "இப்போது என்ன சொல்கிறது?" என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

"வேண்டாம். கேட்டால் உன் மனது சங்கடப்படும். விட்டு விடு. உன் நட்பையும் இழக்க நான் தயாராக இல்லை" என்றாள் பார்வதி.

"இல்லை... நீ சொல்லத்தான் வேண்டும். எதுவாயிருந்தாலும் நான் கோபப்பட மாட்டேன். மறைக்காதே" என்று கெஞ்சினாள்.

பிகு செய்து கொண்ட பார்வதி, "என்னமோ, நான் காலையில் ஆற்றுக்குப் போனபின் நீ கதவைத் திறந்து கொண்டு வந்து கொஞ்சம் அரிசி, பருப்பு எடுத்துப் போனதாகச் சொல்கிறது. நானா நம்புவேன்! வர வர ரொம்பப் பொய் சொல்கிறது. நீ வந்தவுடனே இவள்தான், கேள் என்று அடம் பிடிக்கிறது" என்றாள்.

கனகம் குரல் தழுதழுக்க, "பார்வதி! என்னை மன்னித்து விடு. உன் கற்சட்டி சொல்வது நிஜம்தான்! புத்தியில்லாமல் எடுத்து விட்டேன். இந்தச் சட்டியை எனக்குக் கொடுக்கிறாயா? ஆயிரம் ரூபாய் தந்து விடுகிறேன்" என்றாள்.

பார்வதி வேகமாக, "நன்றாயிருக்கிறது உன் பேச்சு! இதைக் கொடுத்து விட்டு நான் என்ன செய்வதாம்! அந்தத் துறவியிடம் நான் எத்தனை கெஞ்சி வாங்கியது தெரியுமா?" என்றாள்.

கனகம் நயமாக, "நீ மறுபடியும் அந்த சன்யாசியை சந்தித்து வேறொன்று பெற்றுக் கொள்ளக் கூடாதா? உன் பிரிய தோழிக்காக இந்த உதவியைச் செய்யலாகாதா?" என்று கேட்டாள்.

பார்வதி வெகு நேரம் யோசித்த பிறகு அரை மனதுடன் சட்டியைத் தர ஒப்புக் கொண்டாள். வீட்டுக்கு ஓடிச் சென்று ஆயிரம் ரூபாய்களைக் கொண்டு வந்து தந்த கனகம்,

"சட்டி எப்போது பேசும்?" என்று ஆர்வத்துடன் கேட்டாள். "அது என்னைப் பிரியும் வருத்தத்திலிருக்கிறது. இன்று விட்டு விடு. நாளைக் காலை முதல் தன் கடமையை ஒழுங்காகச் செய்யும்" என்ற பார்வதி,

"ஒண்ணு சொல்ல மறந்து விட்டேன்! நானும், என் கணவரும் இராமேசுவரம் புறப்படுகிறோம். அங்கேயே தங்கி விடுவோம்" என்றாள்.


கனகம் சட்டியுடன் வீட்டிற்குச்

சென்றபின் மூட்டை முடிச்சுகளைக் கட்டத் தொடங்கினாள் பார்வதி. இரவு கணவன் வந்ததும் அவனிடம் தனது சாமர்த்தியத்தைக் கூறிப் பயணப் பட்டாள்.

விடிந்தது. சோம்பேறி கனகம் வீட்டையும் பூட்டாமல் கற்சட்டியிடம், தையும் சுருட்டிக் கொண்டு சென்று விட்டனர்.

நதியிலிருந்து திரும்பி வந்த கனகம் வீடிருந்த நிலையைப் பார்த்து ஆத்திரம் கொண்டாள்.

"யார் வந்தது?" என்று கற்சட்டியைக் கையிலெடுத்துக் கொண்டு உறுமினாள்.



"இனிமேல் நான்தான் உன் எஜமானி! தெரியுமல்லவா? ஒரு இரவு துக்கம் அனுஷ்டித்தாயிற்று! வீட்டை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். நான் துணி துவைத்துக் கொண்டு வருகிறேன்'' என்று கூறி புறப்பட்டுப் போனாள்.

கதவு திறந்திருப்பதைப் பார்த்த கள்வர்கள் வீட்டினுள் புகுந்து நல்ல சாமான்கள், பணம், நகைகள் அனைத்

கற்சட்டி பேசுமா? மீண்டும் மீண்டும் கேட்டாள்.

கற்சட்டி பேசாமலிருக்கவே தடி கொண்டு அதை நையப் புடைத்தாள். கற்சட்டி சுக்கல் சுக்கலாக நொறுங்கியது.

"துரோகி! உனக்காக ஆயிரம் ரூபாய் தண்டம் அழுதேனே! என்னை ஏமாற்றி விட்டாயே! ஒழிந்து போ'' என்று கத்தினாள்!



எங்கள் பள்ளியில் நடந்தது!

ஜோக் சொல்லவா?

பள்ளியில் உணவு இடைவேளை. அனைவரும் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். "டேய் யாராவது சிரிக்கிற மாதிரி ஜோக் சொல்லுங்கடா" என்றான் நண்பன். வரிசையாகச் சொல்ல ஆரம்பித்தனர். ஆனால் ஓரிருவரைத் தவிர மற்றவர்கள் சிரிக்கவில்லை. "நான் ஜோக்




சொன்னால் எல்லோரும் சிரிப்பார்கள்" என்று ஜோக்கை சொன்னேன். ஒருவர் கூட சிரிக்கவில்லை. உடனே என் நண்பன், "அட கார்த்தி இப்ப ஜோக் சொன்னானாம்! எல்லோரும் சிரிங்கடா" என்றான். எல்லோரும் சிரிக்க ஆரம்பித்தனர் என்னைத் தவிர.

– வெ.அ.
கார்த்திகேயன்,
பத்தாம் வகுப்பு
'அ' பிரிவு,
அரசு மேல்
நிலைப் பள்ளி, வெள்ளோடு.

பச்சை முட்டை!

செய்தித்தாளில் ஊட்டி கோழி ஒன்று பச்சை நிற முட்டை இட்டிருப்பதாக வெளி வந்தது. மறு நாள் இந்த விஷயத்தை நண்பனிடம் சொன்னேன். அவன் ஆச்சரியமடைந்தான். பக்கத்து பெஞ்சிலிருந்த ஒரு மாணவன், "கோழி பச்ச முட்டை இடாமல் அவிச்ச முட்டையா இடும்?" என்று கேட்டானே பார்க்கலாம்! வகுப்பே சிரித்தது.

– கே. மகாலிங்கம், ஒன்பதாம் வகுப்பு,
அரசு உயர் நிலைப் பள்ளி,
துத்திப்பட்டு.



கோழிமுட்டைக்கு



கூடை வருதா?


அறிவியல் விடைத் தாள்களை திருத்தி ஆசிரியர் கொடுத்துக் கொண்டிருந்தார். நான் எழுபத்தி ஐந்து மதிப்பெண் வாங்கியிருந்தேன். விடைத்தாளை வாங்கி கூட்டிப் பார்த்தேன், எண்பது மார்க் வந்தது. ஆசிரியரிடம் சென்று "கூட வருது சார்! கூட வருது" என்றேன். "கூடை எங்கிருந்து வருது? யார் அனுப்பினாங்க? இப்படி இறக்கச் சொல்" என்றார். "சார் எனக்கு மார்க் கூட வருது" என்றேன். "மதிப்பெண் அதிகமா வருதுன்னு சொல்லக்கூடாதா?" என்று கேட்டபடி திருத்திப் போட்டார் ஆசிரியர்.

– வி. காசிநாதன், சோழபுரம்.

எப்படி கழித்தாய்?

விடுமுறை முடிந்து பள்ளிக்கு வந்தோம். ஆசிரியர் ஒவ்வொரு மாணவரிடமும் "எப்படி விடுமுறையைக் கழித்தாய்?" என்று கேட்டுக் கொண்டே வந்தார். வகுப்பிற்கு எதிரே இருந்த கட்டடத்தில் வெள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள். நான் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். ஆசிரியர் என்னிடம் கேட்டவுடன் பதட்டத்தில் "கோழி முட்டைகளுக்கு வெள்ளையடிச்சேன் சார்" என்றேன். எல்லோரும் சிரித்தனர். ஆசிரியரோ "நிதானமா சொல்" என்றார். "சார்! பாட்டி வீட்டில் முட்டை கடை வச்சிருக்காங்க. நான் முட்டைக்கு பில் போட்டேன்" என்று கூறி முடித்தேன்.

– பி. சாந்தி, கண்டாச்சிபுரம்.



முகத்தில் பரு!

மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்ய மருத்துவர்கள் வந்திருந்தனர். ஒவ்வொருவரையும் தனியாக அழைத்து சிகிச்சை கொடுத்தனர். என் முறை வந்தது. நான் "சார் எனக்கு முகத்தில் பரு அதிகமா வருது" என்றேன். மருத்துவர் "இது ஒரு வயதில் வரத்தான் செய்யும்" என்றார். "சார் ஒரு வயதில் வந்தால் பரவாயில்லையே. எனக்கு பதினைந்து வயசாச்சே" என்றேன். "ஐயோ! இந்த வயதில் வரும் என்பதைத்தான் அப்படி சொன்னேன்" என்றார் மருத்துவர். நான் அமைதியாகத் திரும்பினேன்.

– அ. ஹாஜா நஜீமுதீன், மதுக்கூர்,
தஞ்சை மாவட்டம்.



வெள்ளை அடித்தேன்!



இனிமை வேண்டும்!

முனுசாமி, பொன்னுசாமி இருவரும் அடுத்தடுத்த வீட்டுக்காரர்கள். பொன்னுசாமி எல்லோரிடமும் இனிமையாகப் பழகும் இயல்புள்ளவன். ஆனால் இதற்கு நேர்மாறாக முனுசாமி எப்பொழுதும் கோபத்துடனும் கடுகடுப்புடனும் பேசுபவன். ஒருநாள் சாமியார் ஒருவர் பொன்னுசாமி, முனுசாமி இருவருடைய வீட்டிற்கும் வந்தார். பொன்னுசாமி, முனுசாமி இருவரும் சாமியாரை நன்கு வரவேற்று உபசரித்தனர். இருவரையும் சாமியார் மனமார வாழ்த்தினார்.

சாமியார் வாழ்த்திச் சென்ற பிறகு பொன்னுசாமியின் வாழ்க்கை வளம் பெறலாயிற்று. இதைக் கண்ட முனுசாமிக்கு மிகுந்த எரிச்சல் உண்டாயிற்று. அவனுக்கு என்ன செய்வது என்றே புரியாமல் பொன்னுசாமியிடம் கொடிய வார்த்தைகள் பேசி அவன் மனதைப் புண்படுத்தினான். நாட்கள் செல்லச் செல்ல பொன்னுசாமியின் வாழ்க்கை மேலும் மேலும் வளம் பெற்றது. அதைப் பார்த்து பொறாமைப் பட்ட முனுசாமியின் உடல்நிலை கவலைக்குரியதாகி விட்டது.

அந்தச் சமயம் முதலில் அவர்கள் வீட்டிற்கு வந்த அதே சாமியார் வந்தார். முனுசாமியின் உடல்நிலையைப் பார்த்த சாமியார் "அப்பா முனுசாமி ஏன் உனது உடல் இவ்வளவு மோசமாக ஆயிற்று?" என்று கேட்டார்.

அதற்கு முனுசாமி "ஐயா! பெரியவரே! சென்ற தடவை நீங்கள் ஓரவஞ்சகமாக பொன்னுசாமியை மட்டும் வாழ்த்திச் சென்றதால் அவன் 'சீரும் சிறப்புமாக' இருக்கிறான். ஆனால் என்னை நீங்கள் மனமார வாழ்த்தவில்லை. எனவே எனக்கு இந்த நிலை" என்று கூறினான். அதற்கு சாமியார், "அப்பா, நீ தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறாய். இதோ நான் சில கனி, காய்களைக் கொண்டு வந்திருக்கிறேன். உனக்கு எது விருப்பமோ அதைத் தேர்ந்தெடுத்துக் கொள்" என்று கூறி இரண்டு மாங்கனிகளையும், சில மாங்காய்களையும் முனுசாமியிடம் நீட்டினார்.

முனுசாமி உடனே மாங்கனிகளை தனக்காக எடுத்துக் கொண்டான். அதற்கு சாமியார் முனுசாமியிடம் "ஏன் இந்த மாங்காய்களை எடுத்துக் கொள்ளவில்லை?" என்று கேட்டார். அதற்கு முனுசாமி "என்னய்யா இப்படி கூறுகிறீர்கள். யாராவது காய்களை விரும்பிச் சாப்பிடுவாங்களா? என்ன புளிப்பு!" என்று முகத்தைச் சுளித்துக் கொண்டான்.

உடனே சாமியார் "பார்த்தாயா புளிப்பு யாருக்கும் பிடிப்பது இல்லை. உன் வாழ்வின் தாழ்விற்கும் நீயே பதில் கூறி விட்டாய். நான் உன்னையும் பொன்னுசாமியையும் மாங்கனியைப் போல் இனிமையாகப் பேசி வாழ வேண்டும் என வாழ்த்தினேன். ஆனால் நீயோ மாங்காயைப் போல் அனைவரிடமும் கோபத்துடனும், சினத்துடனும் பேசி, பொறாமைப்பட்டு நீயே உன்னை அழித்துக் கொண்டாய்" என்றார்.

முனுசாமி உணர்ந்து கொண்டான்.

- ஜெயா சுப்ரமணியம்

யார் உண்மையான நண்பன்?


சங்கரபுரி என்ற காட்டில் ஒரு பெரிய குளம் இருந்தது. அந்தக் குளத்தில் எண்ணற்ற மீன்களும் ஆமைகளும் தவளைகளும் வாழ்ந்து வந்தன. இருப்பினும், அக்குளத்தில் சடாயு என்ற ஆமையும், சுமித்ரா என்ற மீனும் நண்பர்கள். தங்களுக்குக் கிடைத்த உணவை இருவரும் பகிர்ந்து உண்டு வாழ்ந்தன. இந்த சடாயுவும் சுமித்ராவும் உயிர் நண்பர்களாக இருப்பதை சுபாகு என்ற தவளை தினமும் கவனித்து வந்தது. தவளைக்கும் அவர்களுடன் நட்பு வைத்துக் கொள்ள ஆசை ஏற்பட்டது.

ஒருநாள் சடாயுவும் சுமித்ராவும் பேசிக் கொண்டிருக்கும் போது சுபாகு அங்கு சென்றது. தானும் அவர்களோடு நட்பு கொள்ள விரும்புவதாகவும் தன்னையும் அவர்களோடு சேர்த்துக் கொள்ளுமாறும் கேட்டது சுபாகு. "சரி, நீயும் எங்களுடன் சேர்ந்து விடு. மூவரும் சிறந்த நண்பர்களாக இருப்போம்" எனக் கூறியது சுமித்ரா.

"அதெல்லாம் முடியாது; அப்படி சுபாகு நம்முடன் சேருவதாக இருந்தால், நான் விலகி விடுவேன் என்று சொல்லிவிட்டு கோபமாகச் சென்று விட்டது சடாயு.

"உனக்காக, என் உயிர்த் தோழனை இழக்க நான் தயாராக இல்லை" எனக் கூறி சுமித்ராவும் சென்று விட்டது. சுபாகு வருத்தத்துடன் திரும்பிச் சென்று விட்டது.

நாட்கள் சென்றன. ஒருநாள், சங்கரபுரி காட்டில் உள்ள அந்தப் பெரிய குளத்தில் மீன்பிடிக்க மீனவர்கள் வந்திருந்தனர். இதை அறிந்த மீன்கள் அனைத்தும், மீனவர்



வர முடியாத பகுதியில் சென்று ஒளிந்து கொண்டன. ஆனால் சுமித்ரா, சடாயுவுடன் பேசிக் கொண்டிருந்ததால், மீனவர்கள் வருவதைக் கவனிக்கவில்லை. மீனவர் விரித்த வலையில் சுமித்ரா மாட்டிக் கொண்டது. வலையில் மாட்டிக் கொண்ட சுமித்ரா, தன்னைக் காப்பாற்றுமாறு சடாயுவிடம் கூறியது.

"ஐயோ! நான் வர மாட்டேன்; அப்புறம் நானும் மாட்டிக்குவேன்" எனக் கூறிச் சென்று விட்டது சடாயு. சுமித்ரா வலையில் மாட்டிக் கொண்டு துடித்தது. தற்செயலாக அங்கு வந்த சுபாகு, "கவலைப்படாதே சுமித்ரா, கண்டிப்பாக நான் உன்னைக் காப்பாற்றுவேன்" என்று உறுதி கூறியது.

ஒரு மீனவன், சுமித்ராவை வலையிலிருந்து எடுத்துக் கையில் வைத்திருந்தான். குளத்திற்கு அருகில் பெரிய பாம்புப் புற்று இருந்தது. சுபாகு, புற்றின் அருகில் சென்று உரக்கக் கத்தியது. சுபாகுவின் குரல் கேட்ட பாம்புகள், 'நமக்கு நல்ல உணவு கிடைத்து விட்டது' என எண்ணி, புற்றிலிருந்து வெளிவந்தன. சுபாகு அதற்குள்ளாக ஓடிச் சென்று ஒரு புதரில் மறைந்து கொண்டது. பாம்புகளைக் கண்ட மீனவன், சுமித்ராவை குளத்தில் போட்டு விட்டு ஓடத் துவங்கினான்.

இதையெல்லாம் தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த சடாயு ஓடி வந்தது. சுபாகுவும் பாம்புகள் சென்றவுடன் சுமித்ராவிடம் வந்து சேர்ந்தது. "இனி நாம் மூவரும் நண்பர்கள்" எனக் கூறியது சடாயு.


"உதவும் நண்பனே உண்மையான நண்பன், நீ ஒருபோதும் எனக்கு இனி நண்பனாக மாட்டாய்; அதற்கு உனக்கு தகுதியுமில்லை. தன் உயிரை பொருட்படுத்தாமல் ஆபத்துக் காலத்தில் உதவிய சுபாகுவே என் உயிர் நண்பன்" எனக் கூறியது சுமித்ரா. வெட்கத்தால் தலைகுனிந்து நின்றது சடாயு.

— நா. கௌரி, சென்னை.


குறுக்கெழுத்துப் புதிர் விடை




1 தா	ஜ்	2 ம	ஹா	ல்	■	கை	ங்	3 க
ய்	■	ற	■	ச	■	ங்	■	ட
லா	■	தி	■	ரி	■	4 ம	ர	ம்
ந்	■	■	■	5 க	■	■	■	■
6 து	ரு	ம்	பு	■	7 வி	யா	ழ	ன்
■	■	■	■	8 ட	■	■	■	ர
றி	ன்	9 ப	■	ம்	■	10 ம	■	தி
ன்	■	ட்	■	ட	■	ந்	■	ந்
11 ந	ண்	டு	■	ம்	ய	தி	த்	12 ச



வித்யா தன் வீட்டில் –
அம்மா ரெண்டு இட்லி வைங்க.
நீயே எடுத்துப் போட்டுக்கோ வித்யா. குட்டிப் பாப்பா அழறான்.
கதை: ச.சத்யா
படம்: ராஜு
யாரைப் பிடிக்கும்?
அம்மா ஸ்கூல் பஸ் வந்தாச்சு.. என் பையை எடுத்துத் தாங்க!
நீயே எடுத்துக்க. நான் குழந்தையைப் பாக்க வேண்டாமா?
பள்ளியில் – ஃப்ரெண்ட் ஷ்யாமளா –
என்னடி டல்லா இருக்கே?
என் தம்பிப் பாப்பா பிறந்தப்போ எவ்வளவு சந்தோஷமா இருந்திச்சு. ஆனா இப்போ...
என்ன இப்போ?


அம்மா என்னைக் கவனிக் கிறதே கிடையாது..
தம்பி சின்னக் குழந்தை தானே! இதுக்கா வருத்தப் படுவாங்க? அசடு! அழக் கூடாது! வா!
எப்பவும் தம்பி யோடதான் இருக்காங்க!
வகுப்பில் டீச்சர் –
வித்யா, சியாமளா நீங்க ரெண்டுபேரும் கட்டுரைப் போட்டிக்குப் பேர் கொடுத்திருக்கீங்க. நல்லா தயார் பண்ணிட்டு வரணும் சரியா?
மாலையில் பள்ளி விட்டதும் –
வித்யா, எங்க வீட்டுக்கு வா. நாம ரெண்டுபேரும் சேர்ந்து கட்டுரைப் போட்டிக்குத் தயார் செய்வோம்! எங்கக்கா ஹெல்ப் பண்ணுவா.
சரி சியாமளா.


சியாமளா வீட்டில், அவளுடைய அக்கா—
அப்பா! பை புதுசா இருக்கே?
என் நண்பன் சிங்கப்பூரிலிருந்து கொண்டு வந்தான், நமக்கு.
இது! எனக்கு!
இல்லே எனக்கு!
நான்தானே முதலில் கேட்டேன்.
இல்லே எனக்குத்தான்!
சரிபோ நீயே வச்சுக்க.
வித்யா—
தம்பி தங்கைகள் இருந்தா இப்படித்தான், அக்கா பாடு அம்போ!
சியாமளாவின் அக்கா—
இல்லேம்மா, நீ நினைக்கிறது தப்பு. உன் தம்பி பிறக்கிறதுக்கு முன்னால் அத்தனை வருஷமும் உனக்குப் போட்டி யாருமே கிடையாது தானே? நீதான் ராணி...


அதனால இப்படி நினைத்துப் பார்... உன் தம்பிதான் பாவம், வருத்தப் படவேண்டியவன். அவனுக்குப் பிறக்கும் போதே போட்டிக்கு ஒரு அக்கா!...
உன் தம்பியோட விளையாட்டுச் சாமான் எல்லாம் நீ விளையாடி முடிச்ச பழசுதானே!
அட ஆமா?!!
வித்யா வீட்டில்
சமத்து வித்யா!
அம்மா, குட்டிப் பையனை நான் பார்த்துக்கறேன்.. நீங்க வேலைகளைப் பாருங்க!
திடீர்னு தம்பி மேல் உள்ள போட்டி மனப்பான்மையை விட்டுட்டு அவன் மீது அன்பா இருக்காளே!

விளையாட்டு நாயகர்கள் 1998

1998 – இந்தியா விளையாட்டு உலகில் குறிப்பிடத் தக்க இடத்தைப் பெற்றிருந்த ஆண்டு. இந்திய கிரிக்கெட்டில் சச்சின் டெண்டுல்கரும், மொஹமத் அசாருதீனும் முடி சூடா மன்னர்களாகத் திகழ்ந்தார்கள். 'ஒரு தங்கமாவது நமக்குக் கிடைக்குமா?' என்ற எதிர்பார்ப்புடன் இருந்த நமக்கு ஆசிய விளையாட்டுப் போட்டியின் இறுதியில் 7 தங்கப் பதக்கங்கள் உட்பட 35 பதக்கங்கள் கிடைத்தன. புதிய தங்க மங்கைகள் உருவாகி வருகின்றனர். ஜோதிர்மயி சிக்தர் பெற்ற இரட்டைத் தங்கங்கள் புதிய நம்பிக்கையை அளிக்கிறது. சர்வதேச டென்னிஸில் மகேஷ் பூபதியும், லியாண்டர் பயஸ்ஸும் ஆறு பட்டங்களை வென்றனர். ஜஸ்பால் ராணாவும், ரூபா உன்னி கிருஷ்ணனும் காமன்வெல்த் போட்டிகளில் நமக்கு பேர் வாங்கித் தந்தார்கள். கோல்ஃப் ஆட்டத்தில் இந்தியன் ஓபன் பட்டத்தை ஃப்ரோஸ் அலி வென்றார். ஸ்குவாஷ் ஆட்டத்தில் ரித்விக் பட்டாச்சார்யாவும், ரியா பண்டாரேவும் முன்னணியில் இருக்கிறார்கள். கேரம் ஆட்டத்தில் மரிய இருதயம் தன் நிலையைத் தக்க வைத்திருக்கிறார். விஸ்வநாதன் ஆனந்த், கோனெரு ஹம்பி ஆகியோர் செஸ் போட்டிகளில் வெற்றி தேடித் தருகிறார்கள்.


• அசாருதீன்


• டெண்டுல்கர்


• மகேஷ் பூபதி

1998 – சர்வதேச அளவில் கிரிக்கெட்டில் 25 வயதேயான சச்சினுக்கும், 35 வயதான அசாருக்கும் தனி இடம் உண்டு. உலகக் கோப்பை கால்பந்தாட்டத்தில் 26 வயதான ஸிடேன் வெற்றிக் கோப்பைக்குக் கை கொடுத்தார். பீட் சாம்ப்ராஸ் இன்றும் டென்னிஸ் உலகில் முக்கியத்துவம் பெற்றவராகவே திகழ்கிறார். பெரிய அறுவை மருத்துவம் செய்த போதிலும், தொடர்ச்சியாக காயங்கள் ஏற்பட்ட போதிலும் மனந்தளராமல் உள்ள 29 வயதான ஸ்டெபி கிராஃப்பை அசைக்க முடியவில்லை. ஃபார்முலா ஒன் சர்க்யூட் கார் ரேஸில் மிகா ஹக்கினேன் சிறந்த டிரைவராக இருந்து புகழ் சேர்த்திருக்கிறார்.

மார்க் டெய்லர், கர்ட்லி அம்புரோஸ் (35), கோர்ட்னி



• சாம்ப்ராஸ்



• முரளிதரன்

வால்ஷ் (36), இவர்களெல்லாம் என்றும் மாறாப் புகழுடன் இந்த ஆண்டும் வலம் வந்தனர். போரிஸ் பெக்கர் ஏப்ரல் மாதம் சென்னை வந்தபோது சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. டென்னிஸ் ரசிகர் மத்தியில் இன்னும் அவருக்குச் செல்வாக்கு இருப்பதை அறிய முடிந்தது. முத்தையா முரளிதரன் இங்கிலாந்தோடு நடைபெற்ற ஒரே டெஸ்ட்டில் 16 விக்கெட்டுகளை வீழ்த்தி தன் திறமையைக் காட்டினார்.

டெஸ்ட் கிரிக்கெட் - 1998

எட்டு டெஸ்ட் ஆட்டங்களில் பங்கேற்ற இலங்கை அணிக்கு ஐந்தில் வெற்றி; மூன்றில் தோல்வி. பதிமூன்று ஆட்டங்களில் பங்கேற்ற தென் ஆப்பிரிக்காவிற்கு ஐந்தில் வெற்றி, நான்கில் தோல்வி; நான்கில் டிரா. நான்கு டெஸ்ட் ஆட்டங்களில் பங்கேற்ற இந்தியாவிற்கு இரண்டில் வெற்றி; இரண்டில் தோல்வி.

டெஸ்ட் கிரிக்கெட்டில் 1998இல் அதிக ரன் குவித்தோர் :

1. அலெக் ஸ்டுவெர்ட் (இங்கிலாந்து) 14 ஆட்டங்கள், 1000 ரன்கள்.
2. மார்க் டெய்லர் (ஆஸ்திரேலியா) 10 ஆட்டங்கள், 998 ரன்கள்.
3. ஹன்சி குரானியே (தென் ஆப்பிரிக்கா) 12 ஆட்டங்கள், 965 ரன்கள்.
4. மார்க் வா(ஹ்) (ஆஸ்திரேலியா) 10 ஆட்டங்கள், 897 ரன்கள்.
5. கேரி கிரிஸ்டன் (தென் ஆப்பிரிக்கா) 13 ஆட்டங்கள், 817 ரன்கள்.

இந்தியா

சச்சின் டெண்டுல்கர் 4 ஆட்டங்கள், 487 ரன்கள்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் 1998இல் அதிக விக்கெட் வீழ்த்தியோர்:

1. ஆலன் டோனால்ட் (தென் ஆப்பிரிக்கா) 12 ஆட்டங்கள், 70 விக்கெட்டுகள்.
2. முரளிதரன் (இலங்கை) 8 ஆட்டங்கள், 68 விக்கெட்டுகள்.
3. ஆங்கஸ் பிரேசர் (இங்கிலாந்து) 13 ஆட்டங்கள், 56 விக்கெட்டுகள்.
4. ஷான் பொல்லாக் (தென் ஆப்பிரிக்கா) 12 ஆட்டங்கள், 56 விக்கெட்டுகள்.

இந்தியா

அனில் கும்ப்ளே 4 ஆட்டங்கள், 30 விக்கெட்டுகள்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் 1998இல் அதிக ஆட்டமிழப்பு செய்த விக்கெட் கீப்பர்கள்:

1. மார்க் பவுச்சர் (தென் ஆப்பிரிக்கா) 11 ஆட்டங்கள், 59 கேட்ச் + 2 ஸ்டம்பிங்.
2. அலெக் ஸ்டுவெர்ட் (இங்கிலாந்து) 14 ஆட்டங்கள், 39 + 0.
3. அயன் ஹீலி (ஆஸ்திரேலியா) 10 ஆட்டங்கள், 27 + 2.
4. ஆன்டி ஃப்ளவர் (ஜிம்பாப்வே) 8 ஆட்டங்கள், 25 + 1.
5. ரமேஷ் கலுவித்தரணா (இலங்கை) 8 ஆட்டங்கள், 16 + 8.

இந்தியா

நயன் மோங்கியா 4 ஆட்டங்கள், 8 + 1.

டெஸ்ட் கிரிக்கெட்டில் 1998இல் அதிக கேட்ச் பிடித்தோர்:

1. மார்க் டெய்லர் (ஆஸ்திரேலியா) 10 ஆட்டங்கள், 16 கேட்சுகள்.
2. கல்லீஸ் (தென் ஆப்பிரிக்கா) 13 ஆட்டங்கள், 16 கேட்சுகள்.
3. பிரையன் லாரா (மேற்கிந்தியத் தீவுகள்) 7 ஆட்டங்கள், 14 கேட்சுகள்.
4. கேம்ப்பெல் (ஜிம்பாப்வே) 8 ஆட்டங்கள், 13 கேட்சுகள்.
5. சனத் ஜெயசூர்யா (இலங்கை) 8 ஆட்

டங்கள், 12 கேட்சுகள்.

இந்தியா

ராகுல் திராவிட் 4 ஆட்டங்கள் 8 கேட்சுகள்.

(இக்கணக்கிடுகள் 1998 நவம்பர் 30 வரை செய்யப்பட்டவை.)

டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன் – 1998 தென் ஆப்பிரிக்காவே!

ஒரு நாள் கிரிக்கெட் - 1998

சச்சின் டெண்டுல்கரின் ஒரு நாள் ஆட்ட சாதனைகள் மறக்க முடியாதவை. மொஹமத் அசாருதீன் 300 ஆவது ஒரு நாள் ஆட்டத்தில் பங்கேற்று சாதனை படைத்தது இந்த ஆண்டுதான். ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக ரன் குவித்தோரில் முதலிடம் பிடித்து சாதனைகளைத் தொடர்கிறார். வில்ஸ் இன்டர்நேஷனல் கோப்பையைக் கைப்பற்றியதன் மூலம் தான் ஒரு சிறந்த அணி என்பதை மீண்டும் நிரூபித்தது தென் ஆப்பிரிக்கா. ஒரு நாள் கிரிக்கெட்டின் சிறந்த பந்து வீச்சாளர் நான்தான் என்று டோனால்டை மார்தட்ட வைத்தது அவர் கைப்பற்றிய 27 விக்கெட்டுகள் (13 ஆட்டங்கள் – விட்டுக்கொடுத்த ரன்கள் 418 – சராசரி 15.48).

ஒரு நாள் கிரிக்கெட் – 1998இல் அதிக ரன் குவித்தோர்

		ஆட்டம்	ரன்	சராசரி	100கள்	50கள்
1. சச்சின் டெண்டுல்கர்	(இந்தியா)	34	1894	65.31	9	7
2. சௌரவ் கங்குலி	(இந்தியா)	36	1328	41.50	4	7
3. மொஹமத் அசாருதீன்	(இந்தியா)	37	1268	43.72	3	8
4. ரிக்கி பாண்டிங்	(ஆஸ்திரேலியா)	24	1166	53.00	3	6
5. அஜய் ஜடேஜா	(இந்தியா)	36	1004	47.81	2	6

ஒரு நாள் கிரிக்கெட் – 1998இல் அதிக விக்கெட் வீழ்த்தியோர்

		ஆட்டம்	விக்	ரன்கள்	சராசரி
1. அஜித் அகர்கர்	(இந்தியா)	30	58	1378	23.76
2. அனில் கும்ப்ளே	(இந்தியா)	25	37	930	25.14
3. ஜவஹல் ஸ்ரீநாத்	(இந்தியா)	19	37	815	22.03
4. சக்லைன் முஷ்டாக்	(பாகிஸ்தான்)	11	34	558	16.41
5. முத்தையா முரளிதரன்	(இலங்கை)	18	32	730	22.81
6. வெங்கடேஷ் பிரசாத்	(இந்தியா)	23	29	892	30.76
7. ஆலன் டோனால்ட்	(தென் ஆப்)	13	27	418	15.48
8. சச்சின் டெண்டுல்கர்	(இந்தியா)	34	24	636	26.50

ஒரு நாள் கிரிக்கெட் – 1998இல் அதிக வெற்றி பெற்ற நாடுகள்

	விளையாட்டு	வெற்றி	தோல்வி	
1. இந்தியா	40	24	14	(2 ஆட்டம் ரத்து செய்யப்பட்டது)
2. தென் ஆப்பிரிக்கா	22	17	5	
3. ஆஸ்திரேலியா	25	15	10	
4. பாகிஸ்தான்	26	12	14	
5. இலங்கை	23	11	12	

ஒரு நாள் கிரிக்கெட் சாம்பியன் – 1998 இந்தியாவே!

பதக்கம் வென்ற தங்கங்கள்!



• வென்ற மகிழ்ச்சியில் இந்திய ஹாக்கி அணி

இந்தியாவின் தங்கப் பெண்ணாக அன்று பி.டி. உஷா கலக்கினார். இன்று பாங்காக்கில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் பெற்றுத் தந்து இந்தியாவைக் கரையேற்றியதும் ஒரு மங்கைதான். அவர் ஜோதிர்மயி சிக்தர். வயது 29. மேற்கு வங்காளத்தின் நாதியா மாவட்டத்திலுள்ள தேவகிராம் என்ற குக்கிராமத்தில் பிறந்தவர். 800 மீட்டர் பிரிவில் பதக்கம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட ஜோதிர்மயி 1500 மீட்டர் ஓட்டத்திலும் வென்றார். இந்தியாவிற்கு இரட்டிப்பு மகிழ்ச்சி தந்தார். உஷாவின் வாரிசான இந்தப் புதிய தங்கமங்கை இன்னும் பல பதக்கங்களை நம் நாட்டிற்குப் பெற்றுத் தர வாழ்த்துவோம்.

இந்தியாவின் தங்க மகன் டிங்கோ சிங் பாக்ஸிங்கில் நமக்கு தங்க வெற்றி தேடித் தந்தார். அவருக்கு வயது 20. மணிப்பூரில் சேக்தா கிராமத்தில் பிறந்தவர்.

இந்திய அணிக்கு முன், கொடி பிடித்துச் செல்ல வாய்ப்புக் கொடுத்ததிற்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில், தன்ராஜ் பிள்ளையின் ஹாக்கி டீம் தங்கம் பெற்று வந்தது. ஹிரோஷிமாவில் பெற்ற 23 பதக்கங்களைக் காட்டிலும் இந்தியாவிற்கு அதிகப் பதக்கங்கள் கிடைத்திருப்பது மகிழ்ச்சிதான். ஆனால் இது போதாதே!

— விளையாட்டுப் பையன்



• ஜோதிர்மயி



• டிங்கோ சிங்


தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் நடைபெற்ற 13-வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கம் பெற்ற முதல் பத்து நாடுகள்:

நாடு	தங்கம்	வெ.	வெண்.	மொ.
1. சீனா	129	78	67	274
2. தென் கொரியா	65	46	53	164
3. ஜப்பான்	52	61	68	181
4. தாய்லாந்து	24	26	40	90
5. கஜகஸ்தான்	24	24	30	78
6. தாய்வான்	19	17	41	77
7. ஈரான்	10	11	13	34
8. வடகொரியா	7	14	12	33
9. இந்தியா	**7**	**11**	**17**	**35**
10. உஸ்பெகிஸ்தான்	6	22	12	40


Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623 ; Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-




பிருந்தாவனம்



இரண்டு படங்களுக்கும்
இடையே உள்ள
ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்




விடை:
1. வலது கை நகங்கள்
2. பட்டன்
3. ஷூ
4. இலைகள்
5. பறவையின் கால்



"உன்னோட பெயருக்காவது ஓட்டப் பந்தயத்துல ஜெயிச்சாகணும்னு சொல்றியே, உன் பெயர் என்ன?"

"வெற்றி கொண்டான்!"

— காழி ஆர். சீதாராமன்



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/99 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

